வடமராட்சிக்கான
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
கிளைக் காரியாலயம் தற்போது
மாலுசந்தி அல்வாயில்
கிளைப் பணிமனையில் செய்திகள் மற்றும் விளம்பரங்களை காலை 08.30 முதல் இரவு 10.00 மணிவரை கையளிக்கலாம்.
T.P: 021 4927 454, 077 120 9996

சஞ்சீவி
Registered as a Newspaper
# உதயன்
விலை ரூ. 60
சுடர் : 38
கதிர் : 85
ஞாயிற்றுக்கிழமை 19 பெப்ரவரி 2023
மாசி 07 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054
பக்கங்கள் 20+8

## இலங்கையின்
# வடக்கும் கிழக்கும் மோடியின் கைகளில்!


**13 தான் இறுதித் தீர்வு**

**இலங்கை வந்து சென்ற அண்ணாமலை தெரிவிப்பு**

கொழும்பு, பெப்ரவரி 19

இலங்கையைப் பொறுத்தவரையில் வடக்கும், கிழக்கும் முழுவதுமாக இந்தியப் பிரதமர் மோடியின் கைகளிலேயே உள்ளன. மோடியையே அந்த மாகாணமக்கள் நம்பியிருக்கிறார்கள். ஏனென்றால் அபிவிருத்தித் திட்டங்களை நாங்களே செய்கின்றோம். 13ஆவது திருத்தமே தீர்வு என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். அதற்குரிய அழுத்தங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. »19

## திருக்கேதீச்சரத்தில்
## 6 லட்சம் பக்தர்களுடன் சிறப்புற நடந்த சிவராத்திரி



மன்னார், பெப்.19

மிகவும் பழமையானதும் பாடல் பெற்ற திருத்தலமான திருக்கேதீச்சரத்தின் சிவராத்திரி திருவிழா ஆறு லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்களின் வருகையோடு மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

மகா சிவராத்திரி திருவிழா நேற்று சனிக்கிழமை காலை 5 மணிக்கு விசேட பூசை வழிபாடுகள், அபிஷேகங்களுடன் ஆரம்பமாகியது. பாவங்கள் போக்கும் பாலாவியில் நீராடி ஈசனுக்குத் தீர்த்தம் எடுப்பதற்காக நாட்டின் பல பாகங்களிலும் இருந்து ஆறு லட்சத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டார்கள். காலை 8 மணி தொடக்கம் மகாலிங்கப் பெருமானுக்கு தீர்த்தக் காவடி எடுக்கப்பட்டது.

பி.ப. 3 மணி முதல் விசேட அபிஷேகமும் மாலை 4.30 மணிக்கு மகா பிரதோஷகால பூசையும் அதைத் தொடர்ந்து ஆறு சாமப் பூசை அபிஷேகங்களும் அர்ச்சனை வழிபாடுகளும் நடைபெற்றன. »19

## உரியநேரத்தில் தேர்தலை நடத்துவது சாத்தியமற்றது

உயர்நீதிமன்றுக்கு தெரியப்படுத்த தயாராகும் ஆணைக்குழு

விரிவு - பக்:02

## சீனாவின் உத்தரவாதமின்றி நிதி வழங்கப் பரிசீலனை!

விரிவு - பக்:07

## ஜி.எஸ்.பி. வரிச் சலுகையை இழக்கவுள்ளது இலங்கை!

ஜேர்மன் தூதுவர் எச்சரிக்கை

கொழும்பு, பெப்.19

இலங்கையில் நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் காரணமாக இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்தின் வரிச் சலுகையை இழக்கும் அபாயம் உள்ளது என்று இலங்கைக்கான ஜேர்மனியத் தூதுவர் ஹோல்கெர் சியுபேர்ட் தெரிவித்துள்ளார். »19

## தேர்தலை ஓராண்டுக்கு பிற்போடுவதே சிறப்பு!

சொல்கிறார் விக்னேஸ்வரன் எம்.பி.

கொழும்பு, பெப்.19

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை ஒரு ஆண்டுக்குப் பிற்போட வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். »19

## வாக்குச்சீட்டு அச்சிட்டால் பாதுகாப்பு வழங்கப்படும்

பொலிஸார் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.19

அரச அச்சகத்தால் பாதுகாப்புக் கோரப்பட்டுள்ள போதும், தற்போது வாக்குச் சீட்டு அச்சிடும் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. மீண்டும் அந்தப் பணிகள் ஆரம்பமாகும்போது உரிய பாதுகாப்பு வழங்கப்படும். »19

## அடுத்த ஆண்டே தேர்தல் ஜனாதிபதி ரணில் சூசகம்



கொழும்பு, பெப்.19

பொருளாதாரத்தை மீட்டெடுப்பதன் மூலம் அடுத்த ஆண்டு மக்கள் தங்கள் வாக்குகளைப் பயன்படுத்தி நாட்டில் தேவையான மாற்றங்களை ஏற்படுத்தி, தாம் விரும்பும் எதிர்காலத்தை உருவாக்குவதற்கான சூழல் ஏற்படுத்தப்படும் என்று »19

தபால்மூல வாக்களிப்பு ஒத்திவைப்பு

# தேர்தலுக்கான பணிகள் தற்காலிகமாக நிறுத்தம்!

கொழும்பு, பெப்.19

உள்ளூராட்சித் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், அதற்குரிய அடிப்படை நடவடிக்கைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட நிர்வாகப் பிரிவுகளுக்கு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இந்தக் கடிதம் அனைத்து மாவட்டத் தேர்தல் அதிகாரிகள்மற்றும் அனைத்து மாவட்ட துணை மற்றும் உதவி »19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலை உரியநேரத்தில் நடத்துவது சாத்தியமற்றது

## உயர்நீதிமன்றுக்கு தெரியப்படுத்தத் தயாராகும் ஆணைக்குழு

கொழும்பு, பெப். 19

உறுதியளித்தபடி உரிய திகதியில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்தமுடியாது என உயர்நீதிமன்றத்துக்கு தெரியப்படுத்துவதற்கான நடவடிக்கையில் தேர்தல்கள் ஆணைக்குழு ஈடுபட்டுள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் மார்ச் மாதம் 9 ஆம் திகதி உள்ளூராட்சிசபைத் தேர்தல் நடத்தப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டது. ஆயினும் திறைசேரி நிதி வழங்குவதை தாமதப்படுத்தியதால் எதிர்வரும் 23ஆம், 24ஆம், 25ஆம் திகதிகளில் நடைபெறும் என அறிவிக்கப்பட்ட தபால்மூல வாக்களிப்பு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தேர்தலுக்குத் தேவையான நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு சிக்கல் காணப்படுகிறது. நிதி வழங்குவதை தாமதப்படுத்தினால் ஆணைக்குழுவால் எவ்வாறு தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும். உறுதியளித்தபடி - திட்டமிடப்பட்ட திகதியில் தேர்தலை நடத்துவது சாத்தியமில்லை. இவ்வாறு உயர்நீதிமன்றத்துக்கு தெரிவிப்பதற்கான நடவடிக்கைகளில் தேர்தல்கள் ஆணைக்குழு ஈடுபட்டுள்ளது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை தேர்தலை நடத்துவதற்கான அனைத்து ஏற்பாடுகளும் இடம்பெறுவதாக தேர்தல்கள் ஆணைக்குழு நீதிமன்றத்துக்கு உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# சுதந்திரமான தேர்தல் இலங்கையில் மறுப்பு

## ஆசிய தேர்தல் கண்காணிப்பகம் கண்டனம்

கொழும்பு, பெப். 19

இலங்கையில் சுதந்திரமான நீதியான தேர்தலுக்கான உரிமை மறுக்கப்படுகிறது. இதனை வன்மையாகக் கண்டிக்கிறோம் என ஆசிய தேர்தல் கண்காணிப்பு அமைப்பான அன்பிரெல் கண்டனம் வெளியிட்டுள்ளது.

அந்த அமைப்பால் வெளியிட்ட அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

நிதியில்லை என்பதை அடிப்படையாக வைத்து தேர்தலை ஒத்திவைப்பதற்கு அரசாங்கம் இடமளித்தால் இனியொரு போதும் தேர்தல் இடம்பெறுவதற்கான சந்தர்ப்பம் இல்லாமற் போகும்.

கடந்த ஆண்டு மார்ச்சில் இடம்பெறவிருந்த தேர்தல் ஒருவருட காலத்துக்கு பிற்போடப்பட்டன. இறுதியாக எதிர்வரும் மார்ச் 9 இல் நடத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் தபால்மூல வாக்களிப்பு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு எதிரான மரண அச்சுறுத்தல்கள் கலக்கமடையச் செய்கின்றன.

இவ்வாறாக தேர்தலைக் குழப்பும் விதத்தில் அண்மையில் இடம்பெறும் விடயங்கள் கவலையளிக்கின்றன.

சுதந்திரமான நீதியான தேர்தலுக்கான உரிமை மறுக்கப்படுகிறது. இது கடுமையாக கண்டிக்கப்பட வேண்டிய விடயம். தாமதிக்காமல் உரிய திகதியில் தேர்தல் இடம்பெறுவதை இலங்கை உறுதி செய்ய வேண்டும் - என்றுள்ளது. (ச-இ)

# பொலிஸ் பாதுகாப்புத் தந்தால் வாக்குச்சீட்டுகள் அச்சிடப்படும்

## அரச அச்சகத்தினர் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 19

வாக்குச்சீட்டுக்களை அச்சிடுவதற்குச் செலவாகும் தொகையை பிறகு தருவதாக தேர்தல்கள் ஆணைக்குழு எழுத்து மூலம் வழங்கிய வாக்குறுதிக்கமைய தபால் மூல வாக்குச் சீட்டுக்களை அச்சிடுவதற்கு தயார். என்றாலும் பொலிஸ் பாதுகாப்பு வழங்காததால் அந்த நடவடிக்கையை இதுவரை ஆரம்பிக்க முடியாமல் இருக்கிறது என அரசாங்க அச்சக பிரதானி கல்பனா லியனகே தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: -

உள்ளூராட்சித் தேர்தலில் தபால் மூல வாக்குச்சீட்டுக்களை அச்சிடுவதற்குச் செலவாகும் தொகையை பிறகு தருவதாக தேர்தல்கள் ஆணைக்குழு எழுத்துமூலம் வழங்கிய வாக்குறுதிக்கமைய வாக்குச்சீட்டுக்களை அச்சிடுவதற்கு தயாராக இருக்கிறோம். என்றாலும் வாக்குச்சீட்டுக்களை அச்சிடுவதற்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்காததால் அந்த நடவடிக்கையை இதுவரை ஆரம்பிக்க முடியாமல் இருக்கிறது.

வாக்குச்சீட்டுக்களை அச்சிடுவதற்காக பொலிஸ் பாதுகாப்பு வழங்குமாறு தெரிவித்து பொலிஸ்மா அதிபர் உட்பட குறித்த பிரிவுகளுக்கு இதுவரை நான்கு தடவைகள் கடிதங்களை அனுப்பியுள்ளோம். ஆனால், எந்தப் பதிலுமில்லை - என்றார். (ம)

# அத்தியாவசிய சேவைகளாக 3 துறைகள் பிரகடனம்

## வர்த்தமானி வெளியீடு

கொழும்பு, பெப். 19

அத்தியாவசிய சேவைகளாக 3 துறைகளைப் பிரகடனப்படுத்தி விசேட வர்த்தமானி நேற்று வெளியிடப்பட்டுள்ளது.

இந்த வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைமுறைக்கு வரும் வகையில் வெளியிடப்பட்டது.

அதற்கமைய மின்சார விநியோகத்துடன் தொடர்புடைய சேவைகள், பெற்றோலிய உற்பத்திகள் மற்றும் எரிபொருள் விநியோகம் மற்றும் மருத்துவமனைகள், முதியோர் இல்லங்கள், மருந்தகங்கள், நோயாளிகளுக்கான பராமரிப்பு இல்லங்கள் மற்றும் சேவைகள் அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. (ச-இ)

# ஆணையாளர்களுக்குக் கீழ் உள்ளூராட்சி மன்றங்கள்!

கொழும்பு, பெப். 19

உள்ளூராட்சித் தேர்தலை மார்ச் 19ஆம் திகதிக்கு முன்னதாக நடத்துவதற்கு சாத்தியம் இல்லை எனவும், அதற்கமைய உள்ளூராட்சிசபைகள் அனைத்தும் விசேட ஆணையாளர்களுக்கு கீழ் கொண்டு வரப்படும் எனவும் அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒரு வருடத்துக்கு பிற்போடப்பட்டிருந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கான அதிகாரக் காலம் மார்ச் 19 ஆம் திகதியுடன் நிறைவுக்கு வரவுள்ளதால், மார்ச் 9 ஆம் திகதி உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

இந்தநிலையில், தேர்தலை நடத்துவதற்குத் தேவையான நிதியை அரசாங்கம் வழங்காததன் காரணமாக தேர்தல் பிற்போடப்படும் நிலை உருவாகியுள்ளது. எனவே, தேர்தலொன்று நடைபெறும் வரையில் மாநகரசபைகளை நகர ஆணையாளர்களுக்கு கீழும், நகரசபை மற்றும் பிரதேசசபைகளுக்கான அதிகாரங்களைப் பிரதேசசபை செயலாளர்களுக்கும் வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஆணையாளர்களின் கீழ் உள்ளூராட்சி மன்றங்கள் கொண்டுவரும் பட்சத்தில் தற்போதைய உறுப்பினர்களின் பதவிகள் செயலிழக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# இலத்திரனியல் வாக்கெடுப்பை இலங்கையில் நடத்தவேண்டும்!

## பொதுஅமைப்புக்கள் வலியுறுத்து

கொழும்பு, பெப். 19

மார்ச் 9 ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்கான வாக்குச் சீட்டுகளை அச்சிடுவதற்குப் பணம் இல்லையென அரசாங்கமும் திறைசேரியும் இழுபறிப்பட்டுக்கொண்டிருக்கும் நிலையில் இலத்திரனியல் வாக்குப்பதிவு முறையை ஏன் இலங்கையில் பரீட்சித்துப்பார்க்கக்கூடாது? என பொதுஅமைப்புக்கள் கேள்வி எழுப்பியுள்ளன.

இந்தத் தேர்தலுக்கு 16 மில்லியன் வாக்குச் சீட்டுக்கள் தேவை என்று கூறப்படுகின்றது. இதில் பெரும் பகுதி சேதமாகச் சாத்தியப்பாடுகளும் உள்ளன. அப்படியெனில் தேவைப்படும் வாக்குச் சீட்டுக்களின் எண்ணிக்கை இன்னும் அதிகரிக்கும். இலங்கையில் பல்கலைக்கழகங்களிலும் தொழில்நுட்பத் துறையிலும் பல தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் இருக்கின்றனர். இந்தத் தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள் ஏன் இந்தப் பிரச்சினைக்கு தொழில்நுட்பத்தை வைத்து தீர்வைப் பெற முயற்சிக்கவில்லை?

இலத்திரனியல் வாக்குச்சீட்டு மற்றும் இலத்திரனியல் வாக்குப்பதிவு முறை மூலம் பெருமளவு நிதியையும் வளங்களையும் மிச்சப்படுத்தலாம். அத்துடன் வாக்கு எண்ணும் முடிவுகள் வெளியிடும் நடவடிக்கைகளையும் விரைவாக செய்து முடிக்கலாம். முதலில் நகரங்களில் இதனை பரீட்சித்துப் பார்த்த பின்னர் கிராமங்களுக்கும் அதை விரிவுபடுத்தலாம். அரசாங்கம் இந்த விடயத்தைப்பற்றி சிந்தித்துப் பார்க்கவேண்டும் - என்று அந்த அமைப்புக்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளன. (ம-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருதங்கேணியில் தோன்றிய சிவலிங்கம்



மருதங்கேணி மாசார் புதுக்காடு வீதி அருகிலுள்ள மூடங்குதீவில் மஹா சிவராத்திரி தினமான நேற்று சனிக்கிழமை புதிதாக சிவலிங்கம் ஒன்று தோன்றியுள்ளது.
நேற்று அதிகாலை வேளையில் அப்பகுதி மக்களால் சிவலிங்கம் அடையாளம் காணப்பட்ட நிலையில் பல பகுதிகளைச் சேர்ந்த மக்கள் ஆர்வத்துடன் சென்று சிவலிங்கத்தைப் பார்வையிட்டு வழிபாடுகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். (ஒ-14,66)

### வரிச்சுமையை நீக்குக

# தொழிற்சங்கங்களால் மீண்டும் பகிஷ்கரிப்பு!

கொழும்பு, பெப். 19
அரசாங்கத்தால் அநீதியாக முன்வைக்கப்பட்ட தன்னிச்சையான வரிக்கொள்கையை எதிர்த்து எதிர்வரும் முதலாம் திகதி பல தொழிற்சங்கங்கள் மீளப் போராட்டத்தில் குதிக்கவுள்ளன.


தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் இணைந்து மேற்கொண்ட சந்திப்பில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.
அதற்கமைய பெற்றோலியம், மின்சாரம், துறைமுகங்கள், நீர்வழங்கல், சுகாதாரம், கல்வி மற்றும் வங்கித் துறைகளைச் சேர்ந்த பல தொழிற்சங்கங்கள் இந்தப் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளன.
வரிகள் மூலம் திரட்டப்படும் பணம் நாட்டு மக்களுக்கு நன்மை பயக்கும் நோக்கத்துக்காக ஒருபோதும் பயன்படுத்தப்படப்போவதில்லை. இந்த வரி அதிகரிப்பு நியாயமற்றது.
புதிய வரிக்கொள்கை தொடர்பில் பேச்சு நடத்தி தீர்வொன்றை வழங்க வேண்டும். இல்லையாயின் தொடர்ச்சியாக எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம் அந்தத் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர். (ச-இ)

## காட்டு யானைகளால் வாழ்வாதாரம் பாதிப்பு

### விவசாயிகள் கவலை

முல்லைத்தீவு, பெப். 19
புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விசுவமடு - நாச்சிகுடாப் பகுதியில் தொடர்ச்சியாக காட்டு யானைகளால் தென்னைகள் அழிக்கப்பட்டு தமது வாழ்வாதாரம் பெருமளவில் பாதிப்படைந்துள்ளது என்று விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.
நேற்று சனிக்கிழமை அதிகாலை மக்கள் குடியிருப்புக்குள் புகுந்த 4 காட்டு யானைகள் 40 க்கும் மேற்பட்ட தென்னைச் செய்கைகளை அழித்துள்ளன.
பெரும்போக பயிர்செய்கையில் ஈடுபட்டிருக்கும் விவசாயிகள் தற்போது இரவுவேளைகளிலே அதிகமாக அறுவடைக்காக செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் காட்டுயானைகள் குடியிருப்புப் பகுதிக்குள் நுழைவதன் காரணமாக மக்களிடத்தில் அச்சம் தோன்றியுள்ளது. இதனால் தாம் வாழ்வாதார ரீதியாக பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று விவசாயிகள் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக உரிய அதிகாரிகள் நிரந்தரத் தீர்வைப் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-14,113)





ஈழத்தின் பஞ்ச ஈச்சரங்களில் ஒன்றாகப் போற்றப்படும் வரலாற்றுச் சிறப்பு மிக்க யாழ்ப்பாணம் கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா வின் தேர்த்திருவிழா, பல நூற்றுக்கணக்கான அடியவர்களின் பங்குபற்றலுடன் மஹா சிவராத்திரி நன்னாளான நேற்று சனிக் கிழமை சிறப்பாக நடைபெற்றது. (ஒ-14,66)

## குருதிக்கொடை

யாழ்ப்பாணம், பெப். 19
யாழ்ப்பாணம் சிவா விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில், யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ள சிவா சனசமூக நிலையத்தில் குருதிக்கொடை முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை இடம்பெறவுள்ளது.
குருதிக்கொடையில் அனைத்துக் குருதிக் கொடையாளர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-14,66)



## முன்னணியின் விஞ்ஞாபனம் யாழ்ப்பாணத்தில் வெளியீடு!

யாழ்ப்பாணம், பெப். 19
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் (அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்) தேர்தல் விஞ்ஞாபனம் யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது.
யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலுக்கு அருகிலுள்ள சரஸ்வதி மண்டபத்தில் கட்சியின் இளைஞர் அணித் தலைவர் சத்தியசீலன் தலைமையில் நேற்றுமுன்தினம் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன. கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தைக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வெளியிட்டு வைக்க கட்சியின் முக்கியஸ்தரான மாரிமுத்து கணபதிப்பிள்ளை மற்றும் திலகநாதன் கிந்துஜன் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.
நிகழ்வில் கட்சியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன், முன்னணியின் ஊடகப்பேச்சாளர் சுகாஷ், சட்ட ஆலோசர் காண்டீபன் உட்பட கட்சியின் முக்கிய பிரதிநிதிகள் ஆதரவாளர்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (ம-20,26)

## யாழிலிருந்து கேதீச்சரத்துக்கு ஆன்மிக சைக்கிள் பயணம்!

யாழ்ப்பாணம், பெப். 19
சிவராத்திரி தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவர் மன்னார் திருக்கேதீச்சர ஆலயத்துக்கு சைக்கிளில் ஆன்மிக பயணத்தை மேற்கொண்டுள்ளனர்.
சித்தன்கேணி சிவன் கோயிலில் இருந்து அவர்கள் இந்த ஆன்மிக பயணத்தை ஆரம்பித்துள்ள நிலையில் இன்று 10 மணியளவில் திருக்கேதீச்சரத்தை சென்றடையவுள்ளனர்.
சுழிபுரத்தைச் சேர்ந்த ஓய்வுபெற்ற கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தரான வை.கைலைநாதன் மற்றும் நவாலியைச் சேர்ந்த கே.இராசசேகரம் ஆகிய இருவருமே திருக்கேதீச்சரத்துக்கு சைக்கிளில் பயணமாகியுள்ளனர். (ச-17)

### மின்கட்டண உயர்வு:

# பால், தயிர், இறைச்சி விலை இரட்டிப்பாகும்

கொழும்பு, பெப். 19
பால், தயிர், இறைச்சி உள்ளிட்ட பொருள்களின் விலையை இருமடங்காக உயர்த்தவுள்ளதாக தேசிய விலங்கு உற்பத்தியாளர்கள் சங்கம் அறிவித்துள்ளது.
நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அதன் அழைப்பாளர் சுஜீவ தம்மிக்க தெரிவிக்கையில்;
மின்சாரக் கட்டணம் 66 வீதத்தால் அதிகரித்தமையே இந்த விலை உயர்வுக்கு காரணம்.
கால்நடை உற்பத்தியாளர்கள் குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் உறைவிப்பான்களை பயன்படுத்த வேண்டிய நிலை ஏற்படும்.
மின்கட்டண உயர்வால் குளிர்சாதனப் பெட்டிகளில் அவற்றை வைப்பதற்கு செலவினங்கள் ஏற்படும். அதனால் இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது என அவர் சுட்டிக்காட்டினார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சீனாவில் கொரோனா உச்சம் 200 மில்லியன் பேர் பாதிப்பு

பீஜிங், பெப். 19
சீனாவில் மீண்டும் கொரோனா தாண்டவமாடி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.
கொரோனா சுகாதார கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டதன் பின்னர் சீனாவில் 200 மில்லியன் பேர் கொரோனா வைரஸினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.
கடந்த நவம்பர் மாதத்திலிருந்து இதுவரையிலான காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்புக்மைவே 200 மில்லியன் பேர் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.
பாதிக்கப்பட்டவர்களில் 8 லட்சம் பேரின் நிலைமை கவலைக்கிடமாகவிருந்த நிலையில் தீவிர சிகிச்சையின் பின்னர் அவர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர் என , தெரிவிக்கப்படுகிறது.
இதேவேளை சீனாவில் கொரோனா வைரஸை கட்டுப்படுத்துவதற்கு கடுமையான சுகாதார கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டமைக்கு அந்நாட்டு மக்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தியமையடுத்து கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# அதானி குழுமத்துக்கு மற்றொரு பின்னடைவு

## போர்ப்ஸ் பத்திரிகையாலும் முறைகேடு அறிக்கை


புதுடில்லி, பெப்.19
அதானி குழுமம் மீதான பங்குச்சந்தை மோசடி தொடர்பாக அமெரிக்காவை சேர்ந்த ஹிண்டன்பர்க் ஆய்வு நிறுவனம் வெளிப்படுத்தியதை தொடர்ந்து போர்ப்ஸ் பத்திரிகை நிறுவனமும் அதானி குழுமம் மீது குற்றச்சாட்டு ஒன்றை முன்வைத்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.
அதானி குழுமம் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபடுவதாக அமெரிக்காவைச் சேர்ந்த ஹிண் டன்பர்க் நிறுவனம் கடந்த மாதம் அறிக்கை வெளியிட்டது. இதையடுத்து அதானி நிறுவனங்களின் பங்கு மதிப்பு வெகுவாக சரிந்தது.
உலக பணக்காரர்கள் பட்டியலில் 3ஆவது இடத்திலிருந்த அதானி 24வது இடத்துக்கு தள்ளப்பட்டார்: கடந்த 13 நாள்களில் அதானி குழுமத்தின் சந்தை மதிப்பு ரூ.10 லட்சம் கோடிக்கு மேல் சரிவை சந்தித்தது.
இந்தநிலையில் கவுதம் அதானியின் மூத்த சகோதரரான வினோத் அதானி, சிங்கப்பூரைச் சேர்ந்த இரு நிறுவனங்க ளின் மூலம் ரஷ்ய வங்கியில் கடன் பெற்று முறைகேட்டில் ஈடுபட்டார் என போர்ப்ஸ் பத்திரிகை குற்றஞ்சாட்டியுள்ளது.
இந்த இரு நிறுவனங்களும் அதானி குழுமத்தின் பங்குதாரர்களுக்குச் சொந்தமானது என்று போர்ப்ஸ் அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# பயிற்சிநெறிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், பெப். 19
விருந்தோம்பல் முகாமைத்துவப் பயிற்சிநெறிக்கு ஆர்வமுள்ள இளைஞர், யுவதிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. வடமாகாணத்தைச் சேர்ந்த வேலையற்ற இளைஞர், யுவதிகளின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு வடமாகாண ஆளுநரின் பணிப்புரைக்கமைய, இலங்கை கடற்படையின் அனுசரணையுடன் காரைநகரில் அமைந்துள்ள ஹமன் ஹில் கடற்கோட்டையில் விருந்தோம்பல் முகாமைத்துவம் மற்றும் விடுதிப் பராமரிப்பு தொடர்பாக ஐந்து நாள் பயிற்சிநெறி ஒன்றை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. எனவே பயிற்சிநெறியில் கலந்துகொள்வதற்கு ஆர்வமுள்ள தரம் 11 வரை கல்வி பயின்ற 18 முதல் 30 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரிமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ளவர்கள் வடமாகாண சுற்றுலாப்பணியகத்தின் 0212217311 என்ற தொலைபேசி இலக்கத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்புகொண்டு எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் பெயர், விவரங்களை முன்பதிவு செய்யுமாறு வடமாகாண சுற்றுலாப் பணியக பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஒ-14)

## 16 கோடி ஆண்டுகள் பழமையான

# டைனோசரின் கால்தடம் பிரிட்டனில் கண்டுபிடிப்பு



லண்டன், பெப். 19
16 கோடி ஆண்டுகள் முன்பு வாழ்ந்ததாகக் கணிக்கப்படும் டைனோரின் கால்தடம் ஆய்வாளர்களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
3 அடிநீளம் கொண்ட இந்த பிரமாண்ட டைனோசர் கால்தடம் பிரித்தானியாவிலுள்ள கடற்கரையொன்றில் பாறைத் துண்டின் மீது ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். கண்டறியப்பட்ட இந்த கால்தடம் டைனோசரின் இடது கால் தடம் என்றும் இந்த உயிரினம் 16 கோடி ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்திருக்கக் கூடும் என்றும் ஆய்வாளர்களால் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# யூரியூப் 'சி.இ.ஓ' வாக நீல் மோகன் நியமிப்பு




கலிபோர்னியா, பெப். 19
இந்திய வம்சாவளியை சேர்ந்த நீல் மோகன் என்பவர் யூடியூப் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.
கடந்த 2014 ஆம் ஆண்டு முதல் சூசன் வோஜ்சிக்கி என்பவர் யூரியூப் தலைமை செயல் அதிகாரியாக செயற்பட்டு வந்தநிலையில் உடல்நலக்குறைவால் அவர் அண்மையில் பதவி விலகிறார்.
இந்தநிலையில் கூகுள் நிறுவனத்தில் பல்வேறு பிரிவுகளில் கடந்த 2008ஆம் ஆண்டுமுதல் பணியாற்றி வந்த நீல் மோகன் அந்த பதவிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளார். (ச-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் துணிந்து ஈடுபடலாம். குடும்பத்தில் உறவினரால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப் பிடிக்கவும்.

**இடபம்:** போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், கவனம் தேவை. தந்தையுடன் இணக்கமாக நடந்துகொள்ளவும்.

**மிதுனம்:** பணவரவு காணப்படும். மனதில் குழப்பங்கள் ஏற்பட்டு விலகும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். ஓரளவு அனுகூலம் ஏற்பட்டாலும், பிரச்சினைகளும் ஏற்படக்கூடும்.

**கடகம்:** ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. முயற்சி சாதகமாக முடியும். முக்கியமான முடிவு ஒன்று எடுப்பீர்கள்.

**கன்னி:** புதிய முயற்சி சாதகமாக முடியும். உறவினர்களால் ஆதா யம் உண்டாகும். பிள்ளைகளுக்காக செலவு செய்ய நேரிடும். வியாபாரத்தில் மனஸ்தாபம் ஏற்படக்கூடும்.

**துலாம்:** மனதில் தைரியமும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். செலவுகள் ஏற்படும். உடல்நலனில் கவனம் தேவை. பிணக்குகள் நீங்கும். மகிழ்ச்சி ஏற்படும்.

**விருச்சிகம்:** எதிர்பாராத பணவரவுடன், திடீர் செலவுகளும் ஏற்படும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள் மகிழ்ச்சி கிடைக்கும்.


**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். ஆதாயம் உண்டாகும். கருத்தொற்றுமை ஏற்படும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். திட்டமிட்டு கவனமாக செல்லவும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. பிடிவாதப் போக்கு மாறி செயற்படுவார்கள்.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மகிழ்ச்சி உண்டாகும். நண்பர்களின் சந்திப்பு மகிழ்ச்சி தரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## யாழ். பல்கலையில் கலைவாரம் 4 வருடங்களின் பின் ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப். 19

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தால் முன்னெடுக்கப்படும் கலைவாரம், நான்கு வருடங்களின் பின்னர் மீள இந்த வருடம் வெகு விமரிசையாக நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது.

கலைப்பீட மாணவர்களிடையே கலை, கலாசார, பண்பாட்டு, விளையாட்டுத் திறன்களை ஊக்குவிக் குமுகமாக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தால் 20 வருடங்களுக்கு மேலாக கலைவாரம் இடம்பெற்று வருகின்றது.

கலைவார ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் ஜெயராசா ஜெனீபன் தலைமையில் பல்கலைக்கழக பரமேஸ்வரா ஆலய முன்றிலில் சமய ரீதியான அனுஷ்டானங்களுடன் ஆரம்பமான நிகழ்வு, தமிழர்களின் பூர்விகக் கலைகளான மயிலாட்டம், பொம்மலாட்டம், பறையிசை ஆகிய கலை வடிவங்களை தாங்கிய வண்ணம் ஒவ்வொரு அணி மாணவர்களும் வர்ணங்கள் பூசி பேரணியாக பல்கலை மைதானத்தை சென்றடைந்தனர்.

அதன்பின்னர் கலைவார ஏற்பாட்டுக் குழுவினருக்கும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்கும் இடையில் மென்பந்தாட்ட சுற்றுப்போட்டி இடம்பெற்றது.

அதில் வெற்றியீட்டிய கலைவார ஏற்பாட்டுக் குழு அணியினருக்கு கலைப்பீடாதிபதி ரகுராம் வெற்றிக் கிண்ணத்தை வழங்கினார்.

தொடர்ச்சியாக ஒரு வாரம் மாணவர்களிடையே கலை, கலாசார, பண்பாட்டு, விளையாட்டு சார் போட்டிகள் நடத்தப்பட்டு எதிர்வரும் 23 ஆம் திகதி மாலை கைலாசபதி கலையரங்கில் மாபெரும் கலை நிகழ்வு இடம்பெறவுள்ளது என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஒ-14,125)

# நெல்லை ரூ.160 க்கு கொள்வனவு செய்க!

## கிளிநொச்சி விவசாயிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 19

அரசாங்கத்தால் விவசாயிகளிடமிருந்து ஒரு கிலோ நெல்லை 100 ரூபாவுக்கு கொள்வனவு செய்வதாக அறிவிக்கப்பட்டுள்ளமையானது விவசாயிகளுக்கு நட்டமே. இந்த விலை நிர்ணயத்தை 160 ரூபாவுக்கு மேல் அதிகரித்து கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் – இவ்வாறு கிளிநொச்சி பிரஜைகள் குழு செயலாளர் சிங்கராசா ஜீவநாயகம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பிரஜைகள் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடக வியலாளர் சந்திப்பில் அவர் மேலும் கூறுகையில்,

அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பரந்தனுக்கு வருகை தந்தபோது நெல்லை 100 ரூபா்வுக்கு கொள்வனவு செய்வதாக அறிவித்தார்.

இந்தக் கொள்வனவு விலையை கிளிநொச்சி விவசாயிகள் ஏற்கத் தயாரில்லை.

இன்றைய பொருளாதார நெருக்கடிச் சூழலில் உற்பத்திச் செலவானது 2 லட்சத்து 35 ஆயிரம் தொடக்கம் 2 லட்சத்துக்கு 40 ஆயிரம் வரை ஏற்படுகிறது.

அரசாங்கத்தின் சந்தை விலையின் அடிப்படையில் விவசாயிகள் ஒவ்வொருவரும் 25 ஆயிரம் ரூபாவுக்கு மேலாக இழப்பை சந்திக்கின்றோம் என விவசாயிகளால் தெரிவிக்கப்படுகிறது.

விவசாயத்துக்கான மானியம் வழங்கப்படவில்லை. பசளை, மருந்துகள் பெற்றுக் கொடுக்கப்படவில்லை.

அரசாங்கம் விவசாயிகளின் துன்பங்கள், அவர்களின் இழப்புகள் மற்றும் நிதிச்செலவு ஆகியவற்றைக் கருத்திற்கொண்டு சிறந்த விலையொன்றை கொள்வனவு விலையாக நிர்ணயித்து நெல்லை கொள்வனவு செய்யவேண்டும். நெல்லுக்கான விலை நிர்ணயத்தை 160 ரூபாவுக்கு மேல் அதிகரித்து கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்றார். (ச-113)

## பாடசாலையிலிருந்து நேரடியாக ஆளுநருடன் கருத்துக்கள் பகிர்வு

### தொடர்பாடல் வலையமைப்பை விரைவில் அமைக்கத் தீர்மானம்

யாழ்ப்பாணம், பெப். 19


வடமாகாணப் பாடசாலைகளில் க.பொ.த. சாதாரண தர மற்றும் உயர்தர மாணவர்கள் ஒவ்வொரு மாதமும் பாடசாலைகளில் இருந்தவாறு தமது கருத்துக்களை நேரடியாகத் தனக்குத் தெரிவிக்கமுடியும் என்று வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் வடமாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் உமாமகேஸ்வரனைத் தொடர்புகொண்டபோது அவர் தெரிவிக்கையில்;

ஒவ்வொரு மாதமும் முன்கூட்டியே அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்ட பாடசாலைகளில் இருந்து மாணவர்கள் ஆளுநருடன் பேசுவதற்கு வலையமைப்புகள் விரைவில் மேற்கொள்ளப்படவுள்ளன.

ஆளுநரின் வழிகாட்டலில் கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆகியோரின் பங்குபற்றலுடன் பாடசாலை மாணவர்களின் கருத்துக்களை பகிர்ந்து கொள்ளும் செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளது.

அதற்கான சகல நடவடிக்கைகளும் வடமாகாணக் கல்வி அமைச்சின் ஊடாக முனெடுக்கப்பட்டு வருகின்ற நிலையில் எதிர்வரும் வாரத்தில் இதை ஆரம்பிக்க முடியும் - என்றார். (ஒ-14,20)



## பாலைதீவு புனித அந்தோனியார் திருவிழா முன்னாயத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப். 19

பாலைதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழாவை முன்னிட்டு முன்னாயத்த நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல், கிளிநொச்சி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் கிளிநொச்சி மேலதிக மாவட்டச்செயலர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

பாலைதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா எதிர்வரும் மார்ச் மாதம் 8 ஆம் திகதி புதன்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நற்கருணை வழிபாடும், பவனியும் நடைபெற்று, 11 ஆம் திகதி சனிக்கிழமை திருவிழா திருப்பலியுடனும், புனிதரின் திருச்சொரூப ஆசீருடனும் இனிதே நிறைவு பெறவுள்ளது.

அதற்கமைய திருவிழாவைச் சிறப்பான முறையில் முன்னெடுத்துச் செல்வதற்காக முன்னெடுக்கப்பட வேண்டிய பல்வேறுபட்ட விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

திருவிழாக் காலங்களில் திருத்தலத்துக்கு வருகை தரும் பொதுமக்களுக்கான பொது வசதிகள், சுகாதார மற்றும் பாதுகாப்பு போன்ற விடயங்கள் விரிவாகக் கலந்துரையாடப்பட்டன.

அத்துடன் பொதுமக்களுக்கான குடிதண்ணீர் வசதிகள், போக்குவரத்து, மலசலகூட வசதிகள், பொதுச்சுகாதார வசதிகள், ஆலய சுற்றாடல் துப்புரவுப் பணி, மருத்துவ வசதிகள், முதலுதவி, பொலிஸ் பாதுகாப்பு, ஆலய பகுதிகளுக்கான மின்சார வசதி, போக்குவரத்து, அத்தியாவசிய பொருள்கள் விற்பனை, உற்சவகாலப் பணிமனை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டு முடிவுகள் எட்டப்பட்டன. (ஒ-14,113)

## 200 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

யாழ்ப்பாணம், பெப். 19

பொருண்மியம் நலிவடைந்த தரம் 6 முதல் உயர்தரம் வரையிலான தெரிவு செய்யப்பட்ட 200 மாணவர்களுக்கு நெல்லியடி கிராமஅலுவலர் அலுவலகத்தில் கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன.

நெல்லியடியைச் சேர்ந்த நன்கொடையாளரின் நிதிப்பங்களிப்பில் நெல்லியடி கிராமஅலுவலர் வைகுந்தன் தலைமையில் உபகரணங்கள் வழங்கப்பட்டன. அத்துடன் ஓய்வுபெற்ற கரவெட்டி நிர்வாக கிராமஅலுவலர் கிருஷ்ணபிள்ளை ரவிக்குமாரும் கௌரவிக்கப்பட்டார். (ஒ-14)



வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவுக்கும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச்சபையின் மாகாண தலைவர் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகளுக்கு இடையிலான சந்திப்பொன்று கொழும்பில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. போதைப்பொருள் பாவனையைத் தடுப்பதற்காக முன்னெடுத்து வரும் வேலைத் திட்டங்கள் மற்றும் உயிர்கொல்லி போதைப்பொருளுக்கு அடிமையானவர்களை மறுவாழ்வளிப்பது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (ஒ-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 08 . 01 . 1940



மறைவு 18 . 02 . 2023

## பொன்னுச்சாமி விமலாதேவி

இணுவிலைப் பிறப்பிடமாகவும், வாதரவத்தை புத்தூரை வசிப்பிடமாகவும், இல.72, வேம்படி வீதி, யாழ்ப்பாணத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னுச்சாமி விமலாதேவி அவர்கள் நேற்று (18.02.2023) சனிக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் அமரர் பொன்னுச்சாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கனகசபை பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நமசிவாயம் இளையபிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்றவர்களான இரத்தினசபாபதி, பத்மநாதன், நாகபூரணம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தெய்வேந்திரன் (உப அஞ்சல் அலுவலகம், புத்தூர்), காலஞ்சென்ற குலேந்திரன், கோபாலேந்திரன் (SPHI-MOH Office-Kopay) ஆகியோரின் அன்புத் தாயாரும், சறோஜா, வனிதா (OMP-Office, Jaffna) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான நல்லையா, கனகம்மா, நாகபூரணம், இராமநாதன் ஆகியோரின் மைத்துனியும், துவாரகா, நிதர்சனன், ரூபிகா, சஜிதன், சண்ஜெய் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், விக்கினேஸ்வரனின் (ஓய்வுபெற்ற மின்சாரசபை உத்தியோகத்தர்) சிறியதாயாரும், பிறேமகுமாரியின் (உப தபாலதிபர்-வாதரவத்தை) மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் இல.72, வேம்படி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

72, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 9383 225

(CS 23555) 1-6


# வேலையாட்கள் தேவை

K.K.S. வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள J.P.P Text புடைவையகத்திற்கு அனுபவமுள்ள (பெண்) வேலையாட்கள் தேவை.

077 749 0282


# மரண அறிவித்தல்

## வீரகத்தி கணேசலிங்கம்



நயினாதீவு 8ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட திருவாளர் வீரகத்தி கணேசலிங்கம் அவர்கள் (11.02.2023) சனிக்கிழமை அன்று ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரகத்தி கனகம்மா தம்பதிகளின் பாசமிகு மூத்த புதல்வனும், காலஞ்சென்ற தில்லையம்பலம், மற்றும் இராஜேஸ்வரி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், வசந்தியின் பாசமிகு கணவரும், வினோஜினி, தனேஷன், சியாமினி ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகுமார், சிந்துஜா, திலிப்குமார் ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம், சத்தியேஸ்வரி (ஜேர்மனி), கருணலிங்கம் (ஓய்வுநிலை அதிபர், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை), குகனேஸ்வரி (நயினாதீவு), சண்முகலிங்கம் (சுவிஸ்), புஸ்பராணி(நெதர்லாந்து), கலைச்செல்வி (பிரான்ஸ்), கேதாரகௌரி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், அஷ்வின், அஞ்யனா, திவிஷா, சிராஷ், செலேஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2023) ஞாயிற்றுக்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். அன்றையதினம் அவரின் 8ஆம் வட்டாரம், நயினாதீவிலுள்ள இல்லத்தில் பிற்பகல் 2.00 மணியளவில் ஆத்ம சாந்திப்பிரார்த்தனை நிகழ்வும் இடம் பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வீரதாயகம், நயினாதீவு-8
0770454924, 0771271809

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 235461) 1-6

# மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 01 . 1967



மறைவு 16 . 02 . 2023

## திருமதி சிவரூபன் மாலினி

கொக்குவில் மேற்கு ஆடியபாதம் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவரூபன் மாலினி கடந்த (16.02.2023) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிவசுந்தரம் - இரத்தினேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம் புனிதவதி தம்பதியரின் அன்பு மருமகளும், சிவரூபனின் அன்பு மனைவியும், சிவப்பிரகாசம் (ஹொலண்ட்), மோகினி (கனடா), சிவாஸ்கரன், சிவனேசன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், துஸ்யந்தன் (பிரான்ஸ்), துவாரகா, நிசாந்தன், பிரஷீந், நர்ஷிகா (பிரான்ஸ்), நிவேகா (இலண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.02.2023) திங்கட்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொ.பே.இல.077 117 7436
077 57 444 97
077 3976 641

தகவல்:
குடும்பத்தினர்.

(CS 235...) 1-6

# மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 10 . 1946



மறைவு 16 . 02 . 2023

## திருமதி சில்வெஸ்ரர் குளோட்டில்டா (ராணி)

இல 223, பீச்றோட் குருநகர், யாழ். நகரை பிறப்பிடமாகவும் Pontoise France ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சில்வெஸ்டர் குளோட்டில்டா கடந்த (16.02.2023) வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பஸ்ரியாம்பிள்ளை (ஆசிரியர்) எலிசபேத் தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மிக்கேல்மனுவல், அவுறான் விக்ரோறியா தம்பதியினரின் பாசமிகு மருமகளும், மனுவல் சில்வெஸ்ரரின் அன்பு மனைவியும் திருமதி ஜான்சன்ஜெனோவா ஜீன்னின் அன்புத் தாயாரும், பொன்வெஞ்சர் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - நியூசிலாந்து) காலஞ்சென்றவர்களான டொண்பொஸ்கோ, கில்பேட் மற்றும் திருமதி அருமைநாயகம் பிளசி (லண்டன்), செசாரியூஸ் பெப்பி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ஜான்சன் (பிரான்ஸ்), சுகனியாடைசன் (நியூசிலாந்து), மிதுலன், ரரகுலன், பவிதா (யாழ்ப்பாணம்) ஆகியோரின் மாமி யாரும், திருமதி பிறிம்றோஸ், பொனவந்தூர் (நியூசிலாந்து), திருமதி மேர்சி டொண் பொஸ்கோ (இலங்கை) திரு. அன்ரனி அருமை நாயகம் (லண்டன்) ஆகியோரின் மைத்துனியும், அருண், பேட்டின், பெனூவா ஆகியோரின் பெரியதாயும், ஸ்ரெபானி, ஜெனி, பிரவின் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின பூதவுடல் Chambre Mortuaire, Rene Dubos Hospital 95300, Pontoise இல் 14.30 to 15.00 வரை பார்வைக்கு வைக்கப்பட்டு, Eglise Nortre-Dame De Pontoise 95300, Pontoise இல் 15.30 to 16.15 வரை ஆலய வழிபாடு நடைபெற்று தொடர்ந்து Cimetiere De Pontoise 80, Rue De Gisors 95300, Pontoise இல் இறுதிக்கிரியை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

தொடர்புகளுக்கு
மனுவல்சில்வெஸ்ரர் (கணவர்) :00 33762700042,
ஜெனாவா (ஜீன்) (மகள்) :0033768345070
பிரான்சிஸ் ஜான்சன் :0033783239130, பிளசி : 00447984953115
செசாறியூஸ்பெப்பி :0033695512412, பொனவந்தூர் : 0064 226549651

(CS 23555) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## காசும் கதைகளும்

உள்ளூராட்சித் தேர்தலுக்கான அஞ்சல்மூல வாக்களிப்பு காலவரையறையற்றுத் தேர்தல்கள் ஆணைக்குழுவால் ஒத்தி வைக்கப்பட்டிருக்கின்றது. தேர்தல்கள் ஆணைக்குழுவின் இந்த அறிவிப்பு, திட்டமிட்ட திகதியில் உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறுமா? என்ற கேள்வியை எழுப்பியிருக்கின்றது.

உள்ளூராட்சித் தேர்தலை நடந்தவேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு விடாப்பிடியாக முன்னெடுப்புக்களை மேற்கொண்டிருந்தாலும், ஆரம்பம் முதல் அரசாங்கம் அதில் பெரிதாக ஆர்வம்காட்டவில்லை. இலங்கை தற்போது எதிர்கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடியை அதற்குக் காரணம் காட்டினாலும் உண்மை அதுவல்ல என்பது எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டாக இருக்கின்றது. ஏனெனில் மக்களிடம் உள்ள எதிர்ப்பலையால் தேர்தலின்போது பாதகமான முடிவுகளே தமக்குக் கிடைக்கும் என்பது ஆட்சியாளர்களுக்கு நன்குதெரியும். எனவேதான் எந்தவழியிலேனும் இந்தத் தேர்தலை நடத்தவிடாமல் செய்வதற்கான எத்தனங்கள் ஆளும்தரப்பிலிருந்து பிரயோகிக்கப்பட்டு வருகின்றன.

தேர்தலைப் பிற்போடுவதற்கு பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டபோதும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் விடாப்பிடியால் தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டிருந்தது. தேர்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தபோதும், தேர்தலுக்கான நிதி தொடர்பில் அரசாங்கம் இதுவரை கள்ள மௌனமே சாதித்து வந்தது. தேர்தலுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடு தொடர்பாக திறைசேரிக்கு தேர்தல்கள் ஆணைக்குழு பல தடவைகள் ஞாபகப்படுத்தியும் அதற்கு எந்தப் பதிலும் கிடைக்கவில்லை. மாறாக தேர்தல்கள் திணைக்களத்தின் நடவடிக்கைகளை மட்டுப்படுத்தும் வகையிலான பணிப்புரைகளே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்து வெளியாகின. உரிய நிதி விடுவிக்கப்படாமையால் வாக்குச்சீட்டுகள்கூட இதுவரை அச்சிடப்படவில்லை . நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் வாக்குச் சீட்டுகளை அச்சிடமுடியாமை காரணமாகவே தபால்மூல வாக்களிப்புக்கான திகதி ஆணைக்குழுவால் பிற்போடப்பட்டுள்ளது. அதேசமயம் தேர்தலுக்கான நிதியை விடுவிப்பது என்பது இப்போது சாத்தியம் இல்லை என நிதியமைச்சு கைவிரித்துள்ளது.

தேர்தல் செலவுகளுக்கு பஞ்சப்பாட்டுப் பாடும் அரசாங்கம், சுதந்திரதின நிகழ்வுகளுக்கு மட்டும் பெருந்தொகைப் பணத்தை ஒதுக்கியிருந்து. அது மட்டுமன்றி கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலுமாக இரு தடவைகள் சுதந்திர தினத்தைக் கொண்டாடி காசை கரியாக்கியிருந்தார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. இவ்வாறான தேவையற்ற செலவுகளுடன் ஒப்பிடும்போது தேர்தலுக்கான நிதியின்மை தொடர்பில் எதிர்க்கட்சிகளின் சந்தேகம் நியாயமானதே.


உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பான அறிவிப்பு தேர்தல்கள் திணைக்களத்தால் வெளியிடப்பட்டதில் இருந்து ஓர் இழுபறி நிலைமையே காணப்படுகின்றது. தேர்தல் நடக்குமா? நடக்காதா? என்ற நிச்சயமற்றதன்மையால் உள்ளூராட்சித் தேர்தல் வேட்பாளர்களும் என்ன செய்வது என்ற திரிசங்கு நிலைமையில் இருக்கின்றார்கள். அதனால் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகள் இதுவரையில் மந்தகதியிலேயே நகர்கின்றன.

அரசாங்கத்தில் பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டிருக்கும் பொதுஜன பெரமுன அதாவது ராஜபக்சவினர் தற்போது தேர்தல் ஒன்றை எதிர்கொள்ளும் எண்ணப்பாட்டில் இல்லை. நாட்டின் பொருளாதார நெருக்கடியால் மக்கள் மத்தியில் ராஜபக்ச குடும்பத்தினருக்கு எதிரான மனநிலை ஏற்பட்டுள்ளது. தற்போது தேர்தல் ஒன்று நடந்து அதில் தமது ஆதரவு சரியுமானால் அதன் தாக்கம் எதிர்வரும் தேர்தல்களிலும் பிரதிபலிக்கும் என்பது ராஜபக்சக்களுக்குத் தெரியாத ஒன்றல்ல.

அரசாங்கம் கூறுவதுபோன்று உண்மையிலேயே தேர்தல் நடத்துவதில் நிதிச்சிக்கல் இருப்பின் அதைப் பகிரங்கப்படுத்தி அடுத்த கட்டம் தொடர்பான வெளிப்படையான கலந்துரையாடலுக்கு முன்வரவேண்டும். தேர்தல்கள் ஆணைக்குழுவின் செயற்பாடுகளை நேரடியாகத் தடுக்காது மறைமுக நடவடிக்கைகள் மூலம் தேர்தலை நிறுத்துவதற்கு எடுக்கும் முயற்சிகள் நன்மை தரப்போவதில்லை. தந்திர நகர்வுகள் மூலம் காரியம் சாதிப்பதற்கு அரசாங்கம் முற்படுமானால் நாட்டின் வீழ்ச்சிக்கு அதுவே காரணமாகவும் அமைந்துவிடும்.

**நாளொரு நல்வார்த்தை**

“ நேரத்தை வீணாக்காதே
அதில்தான் வாழ்க்கை
அடங்கி யிருக்கிறது”
– பெஞ்சமின்




# சீனாவின் உத்தரவாதமின்றி நிதி வழங்கப் பரிசீலனை!

கொழும்பு, பெப். 19
சீனாவின் கடன் மறுசீரமைப்பு உத்தரவாதமின்றி இலங்கைக்கு நிதியுதவி வழங்குவது தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது என்று சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது.

சர்வதேச நாணயநிதியம் இலங்கைக்கு நிதி வழங்குவதற்கு சீனாவின் உத்தரவாதம் மாத்திரமே தற்போது தடையாக உள்ளது. இது தொடர்பில் இலங்கையும் சர்வதேச நாணய நிதியமும் பலசுற்றுப் பேச்சுக்களை நடத்திய போதிலும் எதுவும் பயனளிக்கவில்லை. இதனால், சீனாவின் நிதியுத்தரவாதமின்றி இலங்கைக்குக் கடன் வழங்குவதற்கு சர்வதேச நாணயநிதியம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது என்று தெரியவருகின்றது.

(ம)

## பொன்சேகாவுக்காகப் பேரம்பேசல்

# மயோன் முஸ்தபாவுக்கு 6 மாதங்கள் சிறை!

கொழும்பு, பெப். 19
2010 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்குவதற்காக, நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் மொஹமட் மொஸம்பிலுக்கு 42 லட்சம் ரூபாவை வழங்கிய குற்றச்சாட்டில் முன்னாள் பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபாவுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் 6 மாத சிறைத்தண்டனையை விதித்துள்ளது.

மயோன் முஸ்தபா மீதான குற்றச்சாட்டு சந்தேகத்துக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தே கொழும்பு மேல் நீதிமன்றம் இந்தத் தண்டனையை வழங்கியுள்ளது. சிறைத்தண்டனைக்கு மேலதிகமாக அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது. அபராதத்தைச் செலுத்தத் தவறினால் மேலும் ஒரு மாதம் சிறைத்தண்டனை விதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன்,



குற்றஞ்சாட்டப்பட்டவரின் குடியுரிமையும் ஏழு ஆண்டுகளுக்குப் பறிக்கப்படும் எனவும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. (ம)

நாளை

20.02.2023
திங்கட்கிழமை
மாசி 08

சுபநேரம் : 12.32 – 02.02
ராகுகாலம் : 08.02 – 09.32

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் விக்னேஸ்வரனின் மறைவு தமிழ்த் தேசியத்தின் பேரிழப்பு!

*உதயன் குழுமத்தலைவர் ஈ.சரவணபவன் இரங்கல்*

யாழ்ப்பாணம், பெப். 19

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் விக்னேஸ்வரனின் மறைவு தமிழ்த் தேசியத்தின் பேரிழப்பு என்று தனது இரங்கல் குறிப்பில் தெரிவித்துள்ளார் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் உதயன் குழுமத்தின் நிர்வாக இயக்குநருமான ஈ.சரவணபவன்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

கணிதத்துறைப் பேராசிரியரான முன்னாள் துணைவேந்தர் இ.விக்னேஸ்வரனின் இறப்பு கற்றறிந்த சமூகத்துக்கு ஒரு பேரிழப்பாகும். இதைவிட அவரின் மறைவு என்பது தமிழ்த் தேசியத்துக்கு ஓர் இடியாகவே இறங்கியுள்ளது. தமிழ்த் தேசியப் பற்றாளரான அவரின் கடமைகள் தமிழ்த் தேசிய உலகிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் என்றும் தனித்துவமாயிருந்தன. அவரின் காலத்தில்தான் பொங்குதமிழ் பிரகடனத் தூபி மீளமைக்கப்பட்டு தமிழமுத விழாவன்று திறந்து வைக்கப்பட்டது. மாவீரர் தூபி புனரமைப்பும் அவருடைய காலத்தில் செய்யப்பட்ட ஒன்று. இவ்வாறாக தமிழ்த் தேசியத்தின்பால் கொண்ட பற்றுறுதியின் காரணமாகத்தான் அவர் துணைவேந்தர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார் என்ற பொதுவான குற்றச்சாட்டும் இருக்கவே செய்கின்றது. இதற்கெதிரான சட்டப்போராட்டங்களில் ஈடுபட்டபோதுதான் அவரின் உயிர் பிரிந்திருக்கின்றது. அவர் எம்மைவிட்டுப் பிரிந்தாலும் கற்றறிந்த சமூகத்துக்கும் தமிழ்த் தேசியத்துக்கும் அவர் ஆற்றிய பணிகள் என்றும் தனித்துவமானவை- என்றுள்ளது. (ம)

# ஹெரோய்னுடன் இளைஞர் கைது!

யாழ்ப்பாணம், பெப். 19

மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சங்கானைப் பகுதியில் உயிர்கொல்லி ஹெரோய்னுடன் இளைஞர் ஒருவர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டார் என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சங்கானைப் பகுதியில் இளைஞர் ஒருவர் உயிர்கொல்லி ஹெரோய்னை உடைமையில் வைத்திருக்கின்றார் என்று மானிப்பாய் பொலிஸா ருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் அதேபகுதியைச் சேர்ந்த 24 வயது இளைஞர் ஒருவரைப் பொலிஸார் கைது செய்தனர். அத்துடன் அவரிடமிருந்து 30 மில்லிகிராம் உயிர்கொல்லி ஹெரோய்ன் கைப்பற்றப்பட்டது. மேலும் இளைஞர் உயிர்கொல்லி ஹெரோய்ன் வியாபாரத்திலும் ஈடுபடுகின்றார் என்று மானிப்பாய் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் இளைஞரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

(ஒ-14,125)




# வடக்கு மீனவரின் கட்டமைப்பை வலுப்படுத்த அறிஞர்கள் குழாம்

*ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், பெப். 19



வட பகுதியைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களுக்கு ஆலோசனை வழங்குவதற்கும் கடற்றொழிலாளர் கட்டமைப்பை வலுப்படுத்தவும் அறிஞர்கள் குழாமொன்று உருவாக்கப்பட்டுள்ளது என்று ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் அ.அன்னராசா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கில் கடற்றொழில் சமூகங்களைச் சேர்ந்தவர்களும் சமாசங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் கலந்துரையாடலில் ஈடுபட்டு இந்தக் குழுவை உருவாக்கியுள்ளனர்.

அதன்படி ஆலோசனை வழங்குவதற்கான அறிஞர் குழுவில் அகிலன் கதிர்காமர், சூசை ஆனந்தன், செல்வின் ஆகியோர் உள்ளடங்கியுள்ளனர்.

இந்த மூவருக்கு அப்பால் கடற்றொழிலாளர்களுக்கு ஆலோசனை வழங்க ஏனைய அறிஞர்கள் முன்வர வேண்டும் - என்றார். (ஒ-14,20)

## மரண அறிவித்தல்

### தியாகேஸ்வரி நவரத்தினம்

**பிறப்பு:21.07.1942** **இறப்பு:18.02.2023**



கூடத்தம்மன் கோவிலடி சங்கானை கிழக்கைச் சேர்ந்த தியாகேஸ்வரி நவரத்தினம் நேற்று (18.02.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குமாரசாமி முத்தம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நவரத்தினம் அவர்களின் பாசமிகு மனைவியும், கார்த்திகா (சுவிஸ்), Dr.பிரதாபன் (வைத்தியர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை), பிரகலாதன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், பகீரதன் (சுவிஸ்), Dr.நிஷா (வைத்தியர், யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு மாமியும், அபிஜா, அஞ்சனா, அஷ்விகா, ஆதேஷ் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அமரர் விநாயகமூர்த்தி, பாலசுப்பிரமணியம், சோமசுந்தரம், பஞ்சரத்தினம், சண்முகரத்தினம்,சிவசுந்தரம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.02.2023) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கரச்சி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**கூடத்தம்மன் கோவிலடி, சங்கானை கிழக்கு, சங்கானை.**

**077 349 8136**
**0777939301**

## மரண அறிவித்தல்

### வைரமுத்து கந்தையா



பெரியவிளானை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து கந்தையா நேற்று (18.02. 2023) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து சின்னப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், அமரர் மகேஸ்வரியின் அன்புக்கணவரும், அமரர் சிவலிங்கராசா, அமரர் தருமராசா, செல்வந்தராணி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும்,நாகேஸ்வரி, புவனேஸ்வரி, அமரர் தயாபரன் ஆகியோரின் மாமனாரும், நிஷாந்டமினியனின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நாளை (20.02.2023) திங்கட்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தேத்தா கலட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலினை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

**077 038 9791**

**தகவல்:குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விற்பனைக்குண்டு

யாழ் நகருக்கு அண்மையாக
உள்ள 02 பரப்புக்காணி
விற்பனைக்குண்டு.

**076 824 6113**

## முன்பள்ளி ஆசிரியர் தேவை

கோண்டாவிலில் இயங்கும் முன்பள்ளியுடன்
இணைந்த பகல்நேர காப்பகம் ஒன்றிற்கு
முன்பள்ளி டிப்ளோமா கற்கைநெறி முடித்த
கணினி அறிவுள்ள முழுநேர
ஆசிரியர் தேவை.

தொடர்பு: **077 614 6146**

## வீடு தேவை

யாழ்ப்பாணம், கொக்குவிலில், 1 1/2 பரப்பு அல்லது
2 பரப்பு சகல வசதிகளுடன் வீடு நல்ல
சுற்றாடல் விரும்பத்தக்கது

**077 247 4740, 074 064 6550**

## வேலையாள்கள் தேவை

புதிதாக திறக்கப்பட்ட அசைவ உணவத்திற்கு சகல
வேலைகளும் தெரிந்த ஆட்கள் தேவை.
ஆண்/ பெண். சைவ உணவகத்துக்கும் தேவை.

**077 055 6949** - ஆனைக்கோட்டை

## வேலைக்கு ஆள்கள் தேவை

யாழ்.நகரில் இயங்கும் வியாபார
நிலையமொன்றுக்கு ஆண், பெண்
இருபாலாரும் தேவை.
❖ விற்பனையாளர் ❖ காசாளர்

**077 336 4166**

## வேலையாள் தேவை

புகைப்பட நிலையம் ஒன்றுக்கு
**Photoshop** வேலை
தெரிந்தவர் தேவை.

**077 728 3706**

## விற்பனைக்கு

தென்னங்கன்று, மாங்கன்று, தேசி, தோடை, ஈரப்பலா, ஒட்டுபலா, கயூ, கொய்யா, மாதுளை, கமுகு, ஜம்பு, பசன்புறுட், ரகன் புறுட், செவிழை தென்னை, விலும்பி நெல்லி, முருங்கன், பப்பா, டொமினேசி மா, அல்போன்னசா மா, கோப்பி, பட்டர்புறுட், றம்பிட்டான், கறுவா, கராம்பு, மங்குஸ்த்தான், ஏலக்கா, சிதா, அன்னமுன்னா, நாவல், இலுப்பை, பாலை, முதிரை, வாகை, சவுக்கு, தேக்கு, மலைவேம்பு, ஊர்வேம்பு, சித்திரவேம்பு, சமண்டலை, கருங்காலி, காயா கொண்டல்-கொன்றை, நாகமரம், அன்னாசி, பொக்ஸ்பிரல், ரெட்பாம், கேவி, கொழும்பு வெற்றிலை, மஞ்சள், இஞ்சி, மிளகு மேலும் பல இன பூங்கன்று வகை, சாடி வகை, துளசி மாடம் ஜந்தூரியம் விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு: நியூ லங்கா பாம்**
**பலாலி வீதி, ஊரெழு மேற்கு,**
**பிள்ளையார் கோயில் வீதி,**
**கணேசா பாடசாலை அருகில்**
**077 612 9343**

**நியூ லங்கா பாம்**
**கிளை:**
K.K.S. வீதி, இணுவில்

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 16 . 01 . 1957

மறைவு 14 . 02 . 2018

### பூபாலசிங்கம் மகேந்திரம்

**திதி: 19.02.2023**

அன்பாக பேசி அரவணைத்து
ஆர்வமுடன் உம் தொழில் செய்து
இன்புற்று நாம் இருக்க
ஓய்வில்லாமல் உழைத்தீரே
நிரந்தரமாய் ஓய்வெடுத்து
ஐந்தாண்டு ஆகியும் ஆறவில்லை எம் மனம்

ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும்
**குடும்பத்தினர்**
**077 936 1525**

**நீர்வேலி வடக்கு,**
**நீர்வேலி.**

(cs.23512) (2.6)

## 26ஆம் ஆண்டு நினைவு



**மன்னார் வலைப்பாட்டுக் கடலில் சங்கமமான**

திருச்செல்வம் கமலேந்திரராணி (குமுதினி) தோற்றம் :- 23.06.1974
திருச்செல்வம் கம்சினி தோற்றம் :- 05.06.1996
சிவலிங்கம் திருச்செல்வம் தோற்றம் :- 08.02.1972

மறைவு:-19.02.1997

என்றும் உங்கள் இனிய நினைவுகள்
எங்கள் நெஞ்சங்களில் நிறைந்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சி.தேவகுஞ்சரம்,**
**கதிரிப்பாய், அச்சுவேலி.**

**என்றும் உங்கள் நினைவுடன்**
**அம்மா, அக்கா, அத்தான்,**
**அண்ணாமார், அண்ணிமார், பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்



தோற்றம் 14 . 07 . 1947

மறைவு 17 . 02 . 2023

### திருமதி இரதி தியாகராஜா

**(ஓய்வுபெற்ற முகாமையாளர் -தேசிய சேமிப்பு வங்கி)**

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டை, திருநெல்வேலி ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட திருமதி இரதி தியாகராஜா கடந்த (17.02.2023) வெள்ளிக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் - சிவனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற மாணிக்கம் - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகளும், மா.தியாகராஜா (சட்டத்தரணி) அவர்களின் பாசமிகு மனைவியும், பிரேமா, பத்மா, தேவி, தேவகி, வாசுகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமகள் (அவுஸ்திரேலியா), மேகலா (அவுஸ்திரேலியா), ஜனனி, தயானி (கொமர்ஷல் வங்கி - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், விஜயகுமார், விஜித்தன், கீர்த்தி, சந்திரராஜ் (கண்ணா) ஆகியோரின் மாமியாரும், ரிஷிகா, தன்யா, தீரன், அனுக்ரஹா, நித்தின், உத்தரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் நாளை (20.02.2023) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இல.23, நாவலடி வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி பாற்பண்ணை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.23, நாவலடி வீதி,**
**திருநெல்வேலி.**

(CS/23535)4,6

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 607 2178 - மருமகன்**

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 28 . 04 . 1946

இறைவன் அடியில் 11 . 03 . 2013

அமரர்

### ஆறுமுகம் செல்லையா

**(உரிமையாளர்: குகன் ஸ்ரோர்ஸ் PVT Ltd)**

**திதி: மாசி அமாவாசை**

எங்கள் அன்புத் தெய்வமாய் வழிகாட்டியாய் - வாழ்வூட்டியாய்
அயராது நமக்காக உழைத்த அன்புத் தந்தையே
ஆண்டுகள் பத்து ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
சிவராத்திரி தினத்தில் எம்மை நினைவுறுத்தி வந்தீர்கள்!
அயராது பாடுபட்டீர் எம் வாழ்வுக்காக
ஏற்றம் பல கண்டீர் உம் வாழ்வில்
ஏனோ காலன் கண்பட்டு
எம்மை விட்டுப் பிரிய வைத்தானோ!
என்றும் உங்கள் நினைவுடன்
ஏங்குகின்றோம் எம் வாழ்வு உள்ளவரை!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**13/1 செட்டித்தொரு ஒழுங்கை,**
**நல்லூர்.**

உங்கள் பிரிவால் துயருறும்
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**
**38/1 காலி வீதி,**
**வெள்ளவத்தை, கொழும்பு - 06**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யா/ மூளாய் சை
# சிகரம்
# திருமதி சிவம
# பணிச்சிறப்பு வா



## ஆசியுரை



**பிரம்ம ஸ்ரீ தியாக. உமாசுத சிவாச்சாரியார்**
BA hons .MA
மூளாய்.

இறை இவ்வுலகின் இயக்கத்திற்கு ஒவ்வொன்றையும் தொடர்புடன் கடன் ஆற்ற கட்டளை இட்டுள்ளார். இதைப் புரிந்து கொண்டால் "எம் கடன் பணி செய்து கிடப்பதே" தவிர வேறு ஒன்றும் இல்லை. புரிந்தவன் செய்கின்ற பணி- ஒவ்வொன்றும் புனிதமாகிறது. மகத்துவம் கூடுகிறது. என்னைப் போன்ற எத்தனையோ பேர் வையகத்தில் வாழ்வாங்கு வாழ்வதற்கு சிவமலர் ஆசிரியர் வைத்த பணி வைப்பே திருவருளாகி இயங்கிக் கொண்டிருக்கிறது.

நல்லதோ. கெட்டதோ. தெரிய வைத்து. புரிய வைத்து. கண்டித்தும். பாராட்டியும். என்னை பயணிக்க வைத்த குரு ... சிவமலர் ஆசிரியர் அவர்கள். இன்று என்னை குருக்கள் ஐயா...! என்கின்றனர். ஆனால் என் மன நடத்தைக்கு நிச்சயமாக. ஆச்சாரியம் பண்ணியவர் ஆசிரியர் அவர்களே. அவ்வப்பொழுது கால ஓட்டத்தினில் கலகலப்பாக எத்தனையோ இடர்கள் வந்த போது. மனம் துவளும் போது. கையறு நிலையில் நின்ற போது. கடவுளாய் கைநீட்டி வழிகாட்டியவர் ஆசிரியர் அவர்களே...

சைவப் பிரகாசாவில் அவர் காலத்தில் கற்று கரையேறினோம் என்பது கல்வெட்டு நினைவுகள். அவர் தன் கடமையில் இருந்து ஓய்வு பெறுகிறார் என்பது காலக்கணக்கின் பதிவு மாத்திரமே. உண்மையில் அவர் பணி ஓய்வு பெறவில்லை... தொடர்கிறது இயங்குகின்றது அவர் இட்ட வித்துக்கள் பெருகிப் பெருகி உலகெங்கும் மலராக மணம் வீசுகிறது... அதில் நானும் ஒருவன் .என் மூலத்தை மறக்க முடியாது .

## கல்வி அமைச்சின் செயலாளரின் வாழ்த்துச்செய்தி



**இ.வரதீஸ்வரன்**
செயலாளர்.
கல்வி. பண்பாட்டலுவல்கள். விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு. வடமாகாணம்.

யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் அதிபராக கடமையாற்றி 18.02.2023 முதல் ஓய்வு பெற்றுச் செல்லும் திருமதி.சிவமலர் சுந்தரபாரதி அவர்களின் சேவையினை பாராட்டி வெளியிடப்படவுள்ள மலரிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

தனது கல்வி முன்னேற்றத்தின் பயனாக 12.04.2004 இல் உப அதிபராக நியமிக்கப்பட்டு 13.11.2009 இல் யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்திலே அதிபராக கடமைகளினை பொறுப்பேற்று திறம்பட தனது அதிபர் சேவையினை அலங்கரித்திருந்தார். தனது சிறந்த தலைமைத்து வத்தின் கீழ் 2021 இல் க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளினை பெற்றுக்கொண்டதுடன் 75% இற்கு மேற்பட்ட சித்தி வீதத்தினை அடைந்து பாடசாலையின் பெயரினை பலர் அறியச் செய்திருந்தார். கல்வியில் மட்டுமன்றி இணைப்பாடவிதான செயற் பாடுகளிலும் சிறந்த ஈடுபாடு கொண்டிருந்தார். இதற்கு எடுத்துக்காட்டாக 2022 இல் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளுக்கு மாணவர்கள் பங்கு பற்றியிருந்தமையினை குறிப்பிடலாம். அத்துடன் அதிபர். ஆசிரியர். மாண வர்களிற்கான பயிற்சிப் பட்டறைகளை ஒழுங்கமைத்து அதனூடாக அவர்களது துறைசார்ந்த அறிவினை விருத்தியடையச் செய்திருந்தார். கல்வி யறிவும். சுயமரியாதை எண்ணமும். பகுத்தறிவுத்தன்மையுமே மனிதனை உயர்த்தும் ஒரு வழி எனக் குறிப்பிடப்படுகின்றது.

இவரது அளப்பரிய சேவையினை பாராட்டி. தனது ஓய்வுகாலத்தில் தனது குடும்பத்தினருடன் மகிழ்ச்சியாக வாழ எல்லாம் வல்ல இறைவனின் அருட் கடாட்சம் கிடைக்க வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

## மாகாணக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



**திரு. தி. ஜோன் குயின்ரஸ்,**
மாகாணக் கல்விப் பணிப்பாளர்.
மாகாணக் கல்வித் திணைக்களம். வடமாகாணம்.

கல்விப் புலத்தில் 35 ஆண்டு கால சேவையினைக் கொண்ட அதிபர் திருமதி. சிவமலர் சுந்தரபாரதி அவரக்ளின் பணியினை நயந்து வாழ்த்துச் செய்தியினை வழங்குவதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

திருமதி. சிவமலர் சுந்தரபாரதி அவரக்ள் 1988 ஆம் ஆண்டு ஆசிரியராக நியமனம் பெற்றுக்கொண்டதிலிருநத் இன்றுவரை எமது சமூகத்துக்காக அளப்பரிய கல்விச்சேவையினை ஆற்றியுள்ளமை பாராட்டுக் குரியது. அதுமட்டுமன்றி தனது உயர்கல்வித் தகைமையினையும் வளர்த்து சிறந்த ஆசிரியராகவும். ஆளுமை மிக்க அதிபராகவும் திகழ்ந்தார்.

இவர் 2005 ஆம் ஆண்டு அதிபராக கடமையேற்று தனது தலை மைத்துவ ஆற்றலினால் தான் பொறுப்பேற்றுக்கொண்ட யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக அரும் பாடுபட்டு உழைத்தார்.

இவ்வாறாக எதிர்கால சந்ததியினரின் நல் வாழ்வுக்காக தம்மையே அர்ப்பணித்துப் பணியாற்றிய இவரின் சேவையைப் பாராட்டுவதுடன் இவரது ஓய்வு காலம் சிறப்பாக அமைய வாழ்த்துகின்றேன்.

## வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



**பொ.ரவிச்சந்திரன்,**
வலயக் கல்விப் பணிப்பாளர்.
வலிகாமம் வலயக் கல்வி அலுவலகம்.

திருமதி. சிவமலர் சுந்தரபாரதி அவர்களின் பணிநயப்பு மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தின் மிகச்சிறந்த அதிபராக அவர் நீண்டகாலம் பணியாற்றியுள்ளார். அவரது காலத்தில் அப்பாடசாலை பெற்ற பெரு வளர்ச்சியை நான் நன்றாக அறிவேன். அவரது பாடசாலைக்கு மேற் பார்வைக்குச் சென்ற சந்தர்ப்பங்களில் எல்லாம் அவரது சிரித்த. மகிழ்ச்சி கரமான முகத்துடனான வரவேற்பையும். ஆசிரியர்களையும். மாணவர் களையும் அன்பு கலந்த கண்டிப்புடன் வழிநடத்துவதையும் பார்த்து மகிழ்ச்சி யடைந்துளளோன். உளவியல் துறையில் அவர்பெற்ற கல்வியும் வலி காமத்தின் சிறந்த உளவளத்துணையாளரான அவரது வகிபங்கும் இத்தகைய நட்பு ரீதியான முகாமைத்துவத்திற்கு அவருக்கு உதவியாக இருக்கின்றது என்று நான் உணர்ந்துள்ளேன்.

அதிபர் கூட்டங்களில் தனக்குச் சரியென்றுபட்டதைத் தயங்காது கூறும் அவரது துணிச்சலையும் நான் பார்த்துள்ளேன். நல்லதொரு அதிபரின் சேவையை யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் இழக்கப்போகிறதோ என்றும் நினைக்கத் தோன்றுகின்றது.

பாடசாலையின் முன்னேற்றத்தையே முதன்மைப் பணியாகக்கொண்டு செயற்பட்ட திருமதி. சிவமலர் சுந்தரபாரதியின் ஓய்வுக்காலம் அமைதி யாகவும். மகிழ்ச்சிகரமாகவும் அமையவும் அவரும் அவரது குடும்பத்த வர்களும் எல்லா நன்மைகளையும் பெற்றுக்கொள்ளவும் எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன். வாழ்க வளமுடன்

## ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



**கலாபூஷணம் (திருமதி)கோகிலா மகேந்திரன்**
மூத்த எழுத்தாளர்.
ஓய்வுநிலைப் பிரதிக் கல்விப் பணிப்பாளர்.
தலைவர். சோலைக்குயில் அவைக்காற்று களம்.

முன்வீடு எரியும்போது நாம் ஓடிச் சென்று அணைக்க உதவுவது அவர்களுக்கு நன்மை செய்வதற்கு மட்டுமில்லை. எமது வீட்டில் நெருப்புப் பற்றாமல் இருக்கவுந்தான். மேடையில் ஆடுபவருக்குக் கை தட்டும்போது எமக்குந்தான் உற்சாகம் தொற்றிக்கொள்கிறது. மாணவர்களுக்கு அறிவூட்டுவதும். வழிகாட்டுவதும் அது போன்றதுதான். அத்தொழிலை விருப்புடன் ரசித்துச் செய்பவர்கள் அடையும் நன்மை மிக அதிகம். எம்மைச் சுற்றியுள்ள சமூகத்தின் உயர்வு எமது உயர்வு என்பதைப் புரிந்துகொண்ட ஆசிரியராய். உபஅதிபராய். அதிபராய் நீண்ட காலம் மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலையில் தன் பணியை விருப்புடன் நிறைவேற்றிய திருமதி. சுந்தரபாரதி சிவமலர் அவர்கள் அரச சேவையில் இருந்து மட்டும் ஓய்வுபெறு கிறார். அவர் ஏற்றிய ஒவ்வொரு தீபமும் இன்னும் பல தீபங்களை ஒளி பெறச் செய்யும் என்பதுடன். இன்னும் பல சமூக தீபங்களை அவர் ஏற்றுவார் என்ற நம்பிக்கையுடன் வாழ்த்துகிறேன்.

## கோட்டக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி



**திரு. நோபேட் உதயகுமார்**
கோட்டக்கல்வி அதிகாரி.
கோட்டக்கல்வி அலுவலகம்.
சங்கானை.

யா/மூளாய் சைவப்பிரகா வித்தியாலயத்தின் ஆசிரியராக. உப அதிபராக. அதிபராக உன்னத. காத்திரமான சேவையினை நல்கி ஓய்வு பெற்றுச் செல் கின்ற அதிபர் திருமதி.சுந்தரபாரதி சிவமலர் அவர்களுக்குரிய பணிச் சிறப்பு மலருக்குரிய வாழ்த்துச் செய்தி வழங்குவதில் சங்கானைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் என்ற வகையில் பெருமிதம் கொள்கின்றேன்.

எனது கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளில் முன்னணிப் பாடசாலை களில் ஒன்றாக யா/ மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தினை உன்னதமான முறையில் வழி நடத்திய அதிபரான திருமதி சுந்தரபாரதி சிவமலர் அவர்கள் திகழ்கின்றார்.

கடமையை சரியாகச் செய்து மாணவர்களது கல்வி ஒழுக்கம் என்பவற்றில் கண்ணும் கருத்துமாகச் செயற்பட்ட அதிபராக இவர் திகழ்ந்துள்ளார். பௌதீக வள அபிவிருத்தியிலும். முனைப்போடும் ஆக்கபூர்வத்தோடும் செயற்பட்டு சாதித்துக்காட்டியவராகக் காணப்படுகின்றார். தனது சுய முயற்சியால் பாடசாலை நிலப்பரப்பை விசாலிக்கச் செய்த அதிபராக காணப்படுகின்றார்.

க. பொ. த சாதாரண தரப் பரீட்சையின் 2021 ஆம் ஆண்டுக்கான பெறு பேறுகளில் எமது கோட்டத்திலே அதி உச்சப் பெறுபேற்றை பெறுவதற்கு ஊன்று கோலாய் இருந்த அதிபர் ஓய்வு பெற்றுச் செல்வதையிட்டு அவரது ஓய்வுக்காலம் சீரும் சிறப்பும் ஆரோக்கியம் உள்ள காலமாக அமைய வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**சேவைக் காலம் :**

1) 17.08.1988 ஆசிரியர்
யா/ மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்
2) 12.04.2005 பதில் அதிபர்
யா/ மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்
3) 13.11.2009 - 18.02.2023 அதிபர்
யா/ மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்

**இவர் பெற்ற பட்டங்கள்**

1) கலைப்பட்டதாரி (27.04.1998)
2) பட்டப்பின் டிப்ளோமா (25.08.2001)
3) முதுமாணி (05.12.2003)

**இவருக்கு கிடைத்த விருதுகள் :-**

1) சிறந்த ஆசிரியர் விருது (2005)
2) சிறந்த அதிபர் விருது (2011)
3) வலய மட்ட சிறந்த ஆசிரியர் (2012)
4) வலய மட்ட சிறந்த அதிபர் (2013)
5) " கல்வி ஒளி " (2022)

**இவர் எழுதிய நூல்கள் :-**

1) வளர்ச்சியும் விருத்தியும் (2002)
2) மகிழ்வுடன் வாழ்தல் (2005)
3) சின்னச் சின்ன பிள்ளைகள் (2005)
4) முற்றத்தில் சிந்திய முத்துக்கள் (2006)
5) சுனாமியில் சிதறிய சித்திரங்கள் (2006)
6) சிறுவர் உளநலம் (2017)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவப்பிரகாச வித்தியாலயம்
# ம் தொட்ட நாயகி
# மலர் சுந்தரபாரதி (அதிபர்)
## அவர்களின்
# ாழ்த்துக்கள் 19.02.2023



**வர் எழுதி வெளியிட்ட கட்டுரைகள்**

- நற்பிரசைகளை உருவாக்குவதில் நமது பங்கு.
- எமது பாராம்பரியத்தில் உளசுகம் பேணிய உபாயங்கள்.
- பாடசாலையில் ஒழுக்க விழுமியத்தைப் பேணுவதில் ஆசிரியர் பங்கு.
- பாடசாலைகளில் உளவள மேம்பாட்டுக்கல்வி
- சிறந்த ஆளுமை உருவாக்கத்தில் எமது விழுமியங்கள்
- யதார்த்த துஷ்பிரயோகங்கள்
- சுய தண்டனையும் தற்கொலை முயற்சியும்
- சமூகப் பொறுப்புணர்வை வளர்த்தல்.
- நெருக்கீடுகள் பிள்ளைகளின் கல்வியில் ஏற்படுத்தும் பாதிப்புக்கள்.

**வர் எழுதிய கவிதைத் தொகுதி**

ன்னால் முடியும் (17.11.2015)

உள சமூக மேம்பாட்டு
" அணை" நிறுவனத்தின் தலைவர்.
ஆறுதல் நிறுவனத்தின்
நிறைவேற்றுக் குழு உறுப்பினர்.

### பிரதேச செயலரின் வாழ்த்துச் செய்தி



**திருமதி பிறேமினி பொன்னம்பலம்,**
பிரதேச செயலாளர்,
வலிமேற்கு.

**மாணவர்கள் மனதில் ஒளியேற்றியவர்**

ஆசிரியத்துவம் என்பதன் அர்த்தம் சில குறிப்பிட்ட ஆசிரியர்களால் நிகழ்த்தப்படும் அர்ப்பணிப்பின் சொல். அவ்வர்ப்பணிப்பின் அர்த்தத்தைப் பொருள் பொதித்து உணர்ந்து செயலாக்கியவர்களில் முதன்மையானவர் திருமதி.சிவமலர் சுந்தரபாரதி ஆவார். ஒவ்வொரு மாணவனுக்கு முன்பும் தனது ஆசிரியத்துவத்தின் மாண்பு ஓர் துளியேனும் சிதறி வீழ்ந்திடா வண்ணம் கச்சிதமாகத் தன் சேவையை வழங்கி ஓய்வு பெற்றிருக்கும் திருமதி சுந்தரபாரதி சிவமலர் அவர்களின் சேவை குறித்து சில வார்த்தைகள் பகிரக் கிடைத்தமையை எனக்கும் கிடைத்த பேறாகவே கொள்கின்றேன்.

இவ்வாறு தன் சேவைக்காலம் முழுவதும் மாணவர் நலனை மட்டுமே முன்நிறுத்தி செயற்பட்ட திருமதி சுந்தரபாரதி சிவமலர் அவர்களின் ஓய்வு கல்விச் சமூகத்திற்கான பேரிழப்பாக இருப்பினும் அவரது ஓய்வு காலம் அவருக்கு நிம்மதியானதாகவும். ஆரோக்கியமான தாகவும். மகிழ்ச்சிகர மாகவும் அமைய என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

### கிராம உத்தியோகத்தரின் வாழ்த்துச் செய்தி



**திரு.ந.சிவரூபன்**
கிராம உத்தியோகத்தர்
J/171
மூளாய்.

ஆசிரியர் பணியே அறப்பணி அதற்கே உன்னை அற்பணி என்பதற் கிணங்க ஆசிரியத்துவம் என்பது இந்த பூமிதனில் என்றும் நிலைத்திருக்கும் எக்காலத்திற்கும் அழியாத ஒரு சேவையாக காணப்படுகின்றது. அத்தகைய சேவையாற்றி ஓய்வு பெறும் திருமதி சிவமலர் சுந்தரபாரதி அம்மையார் ஆசிரியராக, அதிபராக மூளாய் / சைவப்பிரகாச வித்தியாலயத்தில் தன்னி கரற்ற சேவையாற்றி ஓய்வுபெற்றுள்ளார். இவருடைய சேவைக்காலத்தில் பாட சாலையின் வளர்ச்சியின் மிகவும் குறிப்பிட்டு சொல்லக்ககூடிய சேவைக் காலமாகக் கூறலாம்.

கிராமிய பாடசாலைகள் நகரத்தில் உள்ள பாடசாலைகள் போன்று எல்லா வளங்களையும் கொண்டிருந்தாலும் அங்கு இருக்கின்ற வளங்களை ஒன்றி ணைத்து பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களையும் ஆசிரியர் களையும் சாதனையாளர்களாக மாற்றியுள்ளார். அந்த வகையில் இன்று கோட்டம், வலயம், மாகாணம், தேசியம் என்று நடைபெற்ற அனைத்து விதமான கல்விசார் மற்றும் இணைப்பாடவிதான போட்டிகளில் மாணவர்கள் பங்கு பெறுவதற்கு அடித்தளம் இட்டவராக அம்மையாரைக் காணலாம்.

தலைமைத்துவம், நேர்மை, நேர முகாமைத்துவம், கண்ணியம் என தன்னகத்தே அனைத்து பங்களிப்புகளையும் கொண்ட இவரது ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

### பதில் அதிபரின் வாழ்த்துச் செய்தி



**திரு.யோ.இளங்கீரன்,**
பதில் அதிபர்
யா/ மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்.

மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் அருளோடு கடந்த மூன்று தசாப்-தங்களுக்கும் மேலாக மூளாய் சமூகத்தைக் கல்வி, ஒழுக்கம் போன்றவற்றில் நல்வழிப்படுத்த பல்வேறு சவால்களையும், விமர்சனங்களையும் தாண்டி இறுதிவரை உறுதியோடு உழைத்த இரும்புப் பெண்மணியான எங்கள் அதிபர் திருமதி சுந்தரபாரதி சிவமலர் அவர்களின் ஓய்வுக்காலம் மேலும் வினைத்தி-றனாக அமைய வாழ்த்தி நிற்கின்றேன். அத்தோடு வித்தியாலயத்தின் பேருக்கும் புகழுக்கும் அரும்பாடுபட்ட எம் அதிபருக்கு நன்றி கலந்த வாழ்த்து களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

### உப அதிபரின் வாழ்த்துச் செய்தி



**திருமதி சு. பிரியா**
உப அதிபர்,
யா/ மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்

நான் பார்த்த அதிபருக்குள்ளே ஆளுமையிற் சிறந்த பெண் அதிபர்களுள் முதன்மையானவராகவும், சிறப்பானவராகவும் திகழ்ந்தவர் எமது வித்தியாலய அதிபர் திருமதி சுந்தரபாரதி சிவமலர் என்பவரேயாவார். அவரது ஆளுமையின் வல்லமையினால் யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் தலைசிறந்த ஒரு வித்தியாலயமாக திகழ்ந்திருக்கின்றது.

அன்பு கலந்த கண்டிப்போடு மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் என்போரை சிறப்பாக வழிநடத்தும் ஆற்றல், இவரது மற்றவர்களை வசீகரப்படுத்தும் வார்த்தைகள், பிரச்சினைகளை இலகுவாகவும், சாதகமாகவும் தீர்க்கின்ற தன்மை, இறை நம்பிக்கையோடான கடமை, மற்றவர்களைப் புரிந்து கொள்ளும் திறன், நேர முகாமைத்துவம் பேணுதல் போன்றவை எமது வித்தியாலயத்தின் வெற்றிக்கு வழிசமைத்திருக்கின்றது. தனது கணவரையும் தன்னோடு இணைத்து வித்தி யாலயத்தின் அபரிமிதமான வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டவர். பௌதீக வள அபிவிருத் தியில் இருவரது முனைப்பான சேவையினால் இன்று புதிய பல கட்டடங்களோடு எமது பாடசாலை திகழ்கின்றது. இவ்விதமான வித்தியாலய உன்னத வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு உழைத்து, அவ்வித்தியாலயத்தினை தலைசிறந்த வித்தியாலயமாக மாற்றிய எமது அதிபரது ஓய்வுக்காலம் சிறப்பாகவும், அமைதியாகவும் அமைய இறைவனைப் பிரார்த்தித்து நிற்கின்றேன்.

### ஆசிரியர் கழகத் தலைவரின் வாழ்த்துச் செய்தி



**திரு.க.கஜேந்திரன்**
ஆசிரியர் கழகத்தலைவர்
யா/ மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்.

மூளாயின் மூலையில் சிறு விருட்சமாக இருந்த வித்தியாலயத்தினை பெரு விருட்சமாக மாற்றும் நோக்கிலே ஆசிரியராக, உப அதிபராக, அதிபராக அரிய நல் சேவைகளை வழங்கி இன்றோடு ஓய்வுக் காலத்தினை அனுபவிக்கவுள்ள திருமதி.சுந்தரபாரதி சிவமலர் அவர்களுக்கான இச் சிறப்பு வெளியீட்டிற்கு வாழ்த்துரை வழங்குவதில் பேருவகை கொள்கின்றேன்.

நீண்ட பெருங்காலத்தில் யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் கல்வி, ஒழுக்கம், இணைபாட விதானம், பௌதீக வள அபிவிருத்தி என்பவற்றுக்கு நிறைவான சேவைகளை கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் நிறைவேற்றி யமைக்காகவும் பாராட்டு கலந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அன் பு, அஹிம்சை, அரவணைப்பு, கண்டிப்பு, சிறப்பான ஆளுமை என்பவற்றைத் தன்னகத்தே கொண்டு வித்தியாலயத்தினை கட்டிக்காத்த எம் அதிபர் தனது ஓய்வுக் காலத்தில் இறை சிந்தனையோடு சமூக சிந்தனைகள் பல புரிந்து, சீரும், சிறப்புகமாக வாழ இறையாசியினை வேண்டி நிற்கின்றேன்.

### பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளரின் வாழ்த்துச் செய்தி



**திருமதி உ.சியாமளா**
பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர்,
யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்.

மூளாய்ப் பிரதேசத்துப் பிள்ளைகளின் கல்வியில் அபரிமிதமான வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டு உழைத்த வித்தியாலய அதிபர் அதிபருக்காக வெளியிடப்படுகின்ற இச் சிறப்பிதழுக்கு வாழ்த்துரை எழுதுவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

பெண் ஆளுமையாக இருந்து எம் வித்தியாலயத்தினை பெரு வளர்ச்சியடையச் செய்து இன்றோடு ஓய்வு பெற்றுச் செல்லும் வேளையிலே , தனது ஓய்வுக் காலத்தினை சீரும்,சிறப்புடனும் அமைதியான முறையிலே அனுபவிக்க வேண்டும் எனவும், மேலும் புகழுடனும் மட்டற்ற மகிழ்ச்சியோடு வாழ வேண்டும் எனவும் எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன். அத்தோடு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் சார்பில் இனிய பிறந்த நாள் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்

### பழைய மாணவர் சங்கத்தினரின் வாழ்த்துச் செய்தி

**பழைய மாணவர் சங்கம்.**
யா/ மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம், மூளாய்.

மூளாய் சைவப் பிரகாச வித்தியாலயத்தில் ஏறக்குறைய சேவைக்காலம் முழுவதும் ஆசிரியராக, அதிபராக அரும்பெரும் பணியாற்றி மூளாய்க் கிராமத்திற்கும் மாணவர்களுக்கும் அளப்பரிய சேவையாற்றியவர் அதிபர் சிவமலர் சுந்தரபாரதி அவர்கள். மிக நெருக்கடியான காலகட்டத்திலே பாடசாலையின் அதிபர் பதவியை துணிச்சலுடன் ஏற்று ஒரு மாணவருக்குக் கூட எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையிலே பாடசாலையைக் காத்து ஆசிரியர்களைக் காத்து, மாணவர்களைக் காத்து கல்விச் செயற்பாட்டை சரியான முறையில் வழிநடத்திச் சென்ற பெருமை அதிபர் திருமதி சிவமலர் சுந்தரபாரதி அவர்களுக்கே உரித்தானதாகும். மாணவர்களோடும் ஆசிரியர்களோடும் கல்விச் செயற்பாட்டோடும் மாத்திரம் நின்றுவிடாமல் ஒரு சக செயற்பாட்டாளராக மாணவர்களையும், பெற்றோர்களையும், பழைய மாணவர் களையும் ஓய்வுபெற்ற அதிபர், ஆசிரியர்களையும், பிறநாடுகளில் வசிக்கின்ற மாண வர்களையும் அறிஞர்கள் பெரியார்களையும் ஒரே கொடியின்கீழ் இணைத்து மூளாய் சைவப்பிரகாசாவின் பெருமையை உலகிற்குப் பறைசாற்றியவர் அதிபர் திருமதி சிவமலர் சுந்தரபாரதி அவர்களென்றால் அது மிகையாகாது. அவர் தனது பணி ஓய்வு பெற்றுச் செல்வது ஒட்டுமொத்தக் கிராமத்துக்கே பேரிழப்பாக இருந்தபோதிலும் அவர் இதுவரை காலமும் அளப்பெரும் சேவைகளுக்காக அவரைப் பாராட்டி அவரின் ஓய்வுக் காலம் சிறப்புறவும் வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
**வித்தியாலய சமூகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# புதிய மாணவர்கள் அனுமதி - பிப்ரவரி நுழைவு 2023

## UNDERGRADUATE DEGREE PROGRAMMES

COMPUTING | BUSINESS | ENGINEERING | EDUCATION | SCIENCE | QUANTITY SURVEYING | DESIGN & ARCHITECTURE | LAW
BIOTECHNOLOGY | NURSING | FINANCIAL MATHEMATICS | PSYCHOLOGY | HOSPITALITY & CULINARY | EVENT MANAGEMENT

## LOCAL DEGREE PROGRAMMES OFFERED BY SLIIT AS APPROVED BY MINISTRY OF EDUCATION | DURATION - 4 YEARS

**BSC (HONS) DEGREE IN INFORMATION TECHNOLOGY SPECIALISING IN**

Software Engineering
Information Technology
Cyber Security
Computer Systems & Network Engineering
Data Science
Information Systems Engineering
Interactive Media

**BSC (HONS) IN COMPUTER SCIENCE**
**BSC (HONS) IN COMPUTER SYSTEMS ENGINEERING**

**BBA (HONS) DEGREE SPECIALISING IN**

Business Analytics
Management Information Systems
Accounting & Finance
Human Capital Management
Marketing Management
Logistics & Supply Chain Management
Business Management
Quality Management

**BSC ENGINEERING (HONS) DEGREE IN**

Electrical & Electronic Engineering
Materials Engineering
Mechanical Engineering (Mechatronics)
Mechanical Engineering
Civil Engineering

**BED (HONS) DEGREE IN**

English
Social Sciences
Information Technology

**BSC (HONS) DEGREE IN**

Biotechnology
Financial Mathematics & Applied Statistics

## FOREIGN DEGREE PROGRAMMES OFFERED BY UGC RECOGNISED UNIVERSITIES

### BRITISH DEGREE PROGRAMMES

LIVERPOOL JOHN MOORES UNIVERSITY

LLB (Hons) Law
BSc (Hons) Architecture
BSc (Hons) Psychology
BSc (Hons) Quantity Surveying
Bachelor of Business Administration (Hons)
BA (Hons) Interior Design

Manchester Metropolitan University

BSc (Hons) Fashion Business & Management

### AUSTRALIAN DEGREE PROGRAMMES

THE UNIVERSITY OF QUEENSLAND AUSTRALIA

(Transfer pathway options)

**BUSINESS (1 + 2 YEARS)**
Bachelor of Business Management
Bachelor of Commerce
Bachelor of Economics

**COMPUTING (1 + 2 YEARS)**
Bachelor of Computer Science
Bachelor of Information Technology

**ENGINEERING (2 + 2 YEARS)**
Bachelor of Engineering (Hons) Civil
Bachelor of Engineering (Hons) Electrical
Bachelor of Engineering (Hons) Mechanical

**ENGINEERING (1 + 3 YEARS)**
Bachelor of Engineering (Hons) Mechatronic

William Angliss Institute

**WILLIAM ANGLISS INSTITUTE AT SLIIT**
Hospitality Management
Travel & Tourism Management
Commercial Cookery
Event Management
Patisserie

DEAKIN UNIVERSITY

**HIGHER DIPLOMA IN NURSING**
The pathway to Bachelor of Nursing Degree programme of Deakin University, Australia.
*Accredited for National Vocational Qualification Level 6 (NVQ L6) by Tertiary and Vocational Education Commission (TVEC) of Sri Lanka.*

### Scholarships*

- Full scholarships will be offered to the top performers in G.C.E A/L (Sri Lanka) in all streams.
- Scholarships for top performers in London A/L examination.
- Performance based scholarships and sports scholarships will be offered.
- Other scholarships available.

TO APPLY Visit: apply.sliit.lk
or Scan the QR code to register

STUDENT AWAITING RESULTS FOR THE G.C.E A/L 2023 ARE ALSO ELIGIBLE TO APPLY

### நினைவில் கொள்ள வேண்டிய திகதி

| தொடக்க நாள் | விண்ணப்ப முடிவுத் திகதி |
|---|---|
| பிப்ரவரி 25 2023 | ஏப்ரல் 20 2023 |

தகுதிகாண் பரீட்சை

| | |
|---|---|
| ஏப்ரல் 22 2023<br>மு.ப 10.00 - மு.ப 11.00 | மொழி மூலம்<br>சிங்களம், ஆங்கிலம், தமிழ் |

UGC APPROVED

MEMBER
ASSOCIATION OF COMMONWEALTH UNIVERSITIES & INTERNATIONAL ASSOCIATION OF UNIVERSITIES

1st Sri Lankan Institute to be accredited by the Institution of Engineering & Technology, UK for IT degrees

Over 15,000 + STUDENTS currently studying at SLIIT

with over 30,000+ SLIIT ALUMNI

OVER 20+ SPORTS

YEARLY OVER 150+ CSR'S

STUDENT COUNSELING & WELL-BEING CENTER

OVER 400+ EVENTS PER YEAR

MEDICAL FACILITY

SHUTTLE SERVICES

QS UNIVERSITY RANKINGS ASIA | IAU INTERNATIONAL ASSOCIATION OF UNIVERSITIES | CSSL ACCREDITED DEGREES | IET Accredited Programme | AACSB Member | RIBA Royal Institute of British Architects | Solicitors Regulation Authority | BAR STANDARDS BOARD

LLB (HONS) OFFERED AT SLIIT IS RECOGNIZED BY THE COUNCIL OF LEGAL EDUCATION, SRI LANKA


PHSRC REGISTERED, A GOVERNMENT APPROVED PRIVATE NURSES TRAINING SCHOOL

011 754 4801
www.sliit.lk
info@sliit.lk

Degrees are offered at*:
Malabe, Colombo, Kandy, Kurunegala
Matara and Jaffna
*Conditions Apply

SLIIT UNI
THE KNOWLEDGE UNIVERSITY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








# சுப்பர் போல் 'கேஷ் ப்ளேஷ்' விசேட லொத்தர்

## பெப்ரவரி 8 இல் வெளியானது

அபிவிருத்தி லொத்தர் சபையின் லொத்தர்களில் 5 கோடி ரூபாய்க்கு அதிகமான சுப்பர் பரிசுப்பொதியுடன் நாளாந்தம் சீட்டிழுக்கப்படும் "சுப்பர் போல்" லொத்தரின் மூலம் விசேட சீட்டிழுப்பொன்று புத்தாண்டில் பரிசுகளை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் நான்கு திசைகளிலிருந்தும் அதிர்ஷ்டசாலிகளை உருவாக்கும் இவ் விசேட லொத்தரை சந்தைக்கு வெளியிடும் நிகழ்வு 2023 பெப்ரவரி 8ஆம் திகதி அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி திரு.அஜித் குணரத்ன நாரகலவின் தலைமையில் நடைபெற்றது. இந்த விசேட லொத்தர் சீட்டிழுப்பு வருகின்ற பெப்ரவரி 28ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது. இருபது ரூபாய் விலையில் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் சுப்பர் போல் "கேஷ் ப்ளேஷ்' லொத்தர் மூலம் 5 கோடி ரூபாய் சுப்பர் பரிசுப்பொதியுடன் வழமையான பரிசுகளுக்கு மேலதிகமாக ரூ.100,000 மற்றும் ரூ.10,000 பணப் பரிசுகள் பலவற்றை வெல்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மலர்ந்த புத்தாண்டை வெற்றிகரமாக ஆரம்பிக்க அதிகதிகமாக சுப்பர் போல் "கேஷ் ப்ளேஷ்" விசேட லொத்தர்களை கொள்வனவு செய்யுமாறு அபிவிருத்தி லொத்தர் சபை அறிவித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணக் கல்லூரியின் 200 ஆம் ஆண்டு நிகழ்வுகள்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் 200 ஆவது ஆண்டை முன்னிட்டு விசேட அறிமுக நிகழ்வுகள் நாளை திங்கட்கிழமை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. நாளை காலை 9 மணியளவில் வட்டுக்கோட்டை தென்னிந்தியத் திருச்சபையின் பேராலயத்தில் விசேட ஆராதனை வழிபாடுகள் இடம்பெற்று புனர்நிர்மாணம் செய்யப்பட்ட கல்லூரியின் பிக்னல் மெமோறியல் மைதானத்தில் கல்லூரியின் அதிபர் ருசிரா குலசிங்கம் தலைமையில் 200 மரக்கன்றுகளை நடுகை செய்யும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்படும்.

அதனைத்தொடர்ந்து விசேட சின்னமும், கல்லூரியின் புதிய காலுறையும், ஜேர்சியும் (மேலங்கியும்) அறிமுகப்படுத்தப்படவுள்ளது. (ஒ-14-125)


உங்கள் நிலம் அறுதியாகபோகிறதா?
விரைவாக சொத்துக் கடனுக்கு அழையுங்கள்.
076-2488353

### வேலையாட்கள் தேவை

- Packing (பெண்கள் மட்டும்-வயது: 18-45)
- Data Entry (ஆண், பெண்-வயது:18-35)
- Track Maintanance (ஆண், பெண்-வயது:18-35)
- Cashier (ஆண், பெண்-வயது:18-35)

சுயவிபரக் கோவையுடன் நேரில் சமுகம் அளிக்கவும்.
NORTHWAY FAMILY MART
No.184, Palaly Road, Thirunelvely
077 764 7645

### அறை வாடகைக்கு

யாழ். தபாற்பெட்டி சந்தியிலிருந்து 100m தூரத்தில் பெண்களுக்கு அறைகள் வாடகைக்கு உண்டு.(வேலை செய்யும் பெண்கள் விரும்பத்தக்கது.)
T.P : 077 661 7923

### வேலை வாய்ப்பு

உயர்தரம் எழுதிய மாணவர்களுக்கான அரிய வாய்ப்பு. அழகுசாதன பொருட்கள், இலத்திரனியல், பல்பொருள் விற்பனை அங்காடியில் வேலைவாய்ப்பு. சங்கானைப் பிரதேச செயலக பிரிவில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது.
071 248 0633
075 298 7517, 077 932 2822

### வேலையாள் தேவை

- ✔ Sales Rep (Vavuniya, Mullaithivu Area)
- ✔ Computer Operator (ஆண்.பெண்)
- ✔ Labour (ஆண்.பெண்)

நேர்முகத்தேர்வு திங்கட்கிழமை காலை 10.00-பி.ப 2.00 மணிவரை இடம்பெறும்.

கொழும்பு பெயின் சென்ரர்,
பருத்தித்துறை வீதி,
நீர்வேலிச்சந்தை , நீர்வேலி
077 7890398
021 223 0235

### அறை வாடகைக்கு உண்டு

பெண் மாணவிகளுக்கு மட்டும் வாடகைக்கு கொடுக்கப்படும். உணவு வசதியும் செய்து கொடுக்கப்படும்.
(Science World, Science Corner அருகாமையில்)
நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 077 162 9514


## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 18.06.1930 — மறைவு 19.01.2023

### திருமதி இராசமணி கந்தசாமி

அவர்களின் மரணச்செய்தி அறிந்து வருகை தந்து எமக்குப் பல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக்கிரியைகள் கடந்த (16.02.2023) வியாழக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. இன்று (19.02.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் இல. 63, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் கலைக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 77, கல்லூரி வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
(இலங்கை வேந்தன்)

(CS 23545) (3/6)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 19 - 07 - 1947
சிவன் அடியில் 05 - 03 - 2019

அமரர்
### பொன்னையா கந்தசாமி

(யாழ். பல்கலைக்கழகத்தின் ஓய்வுநிலை பதில் பதிவாளர், யாழ் மருத்துவ பீடத்தின் ஓய்வு நிலை சிரேஷ்ட பதிவாளர், கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில், கைதடி இனுங்கித் தோட்டம் கந்தசுவாமி கோயில், கைதடி மாதாஜி லிங்கேஸ்வரர் கோயில் என்பவற்றின் சபை உறுப்பினர், கைதடி கிழக்கு சனசமூக நிலையத்தின் முன்னாள் செயலாளர், அதன் முன்பள்ளியின் ஆலோசகர்)

அன்பினிலே மிகுந்தவராய் பண்பினிலே சிறந்தவனாய்
மண்ணிலே உதித்து அமைவுற்ற வாழ்வினில்
நறுமணம் பரப்பி இல்லத்தில் விருட்சமாய் பாசநிழல்
தந்தையாய்
உறவுகள் பேணிடும் கருணை வடிவமாய் உரிமையாய்
உணர்வை அன்பாய் பகிர்ந்தே
விண்ணக வாழ்வை நாடியே சென்றீர்கள்
நான்கு ஆண்டுகள் பறந்தோடிச் சென்றிருந்தாலும்
என்றென்றும் உங்கள் பாதம் போற்றியே
வாழ்ந்திடுவோம்.

"புஸ்ப பவனம்"
கைதடி கிழக்கு,
கைதடி.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(cs.cs 49001) (2/6)

## மரண அறிவித்தல்



பிறப்பு 14 - 10 - 1947
இறப்பு 18 - 02 - 2023

### திருமதி இந்திராணி பாலகிருஷ்ணன்

கரணவாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இந்திராணி பாலகிருஷ்ணன் அவர்கள் நேற்று (18.02.2023) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான குட்டித்தம்பி - சின்னம்மா தம்பதியினரின் மருமகளும், காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் அவர்களின் அன்பு மனைவியும், பானு, பாபு, மனோஜா, ஜயந்தி ஆகியோரின் அன்புத் தாயாரும், சுப்பிரமணியம், பிரியா, வைகுந்தன், சஞ்சய் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கிஷோர், அருண், பிரியா, அஸ்வைதா, மிதுனன், எமில், எட்ரிக், கேசவன், நவீனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம், தணிகாசலனம், சண்முகசோதி, சண்முகசுந்தரம், சண்முகரத்தினம், மதுரை மீனாட்சி மற்றும் மனோரஞ்சிதம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.02.2023) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவரசந்திட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சந்தியக்கிணறு,
கரணவாய் தெற்கு,
கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்
021 205 6200

(CR 39284) (3/6)


# NEW SCIENCE HALL

Kannathiddy Road, Jaffna.

## 2023 A/L DAY CLASS

கணித, விஞ்ஞானப் பிரிவுகள்
( 2022 பரீட்சைக்கு தோற்றியவர்களுக்குரியது )

**நேரடி வகுப்புக்கள்**

திங்கள் தொடக்கம் வெள்ளி

COM. MATHS
- P. SENTHILNATHAN - 7.00 - 9.00 AM
- S.SIVAKARAN - 5.00 - 7.00 PM

BIOLOGY
- V.S. GUNASEELAN - 8.00 - 9.30 AM

CHEMISTRY
- S.T. UMASHANKAR, V.NANTHA - 9.30 - 11.30 AM

PHYSICS
- G. PIRABA, R. RAAKULAN - 11.30 - 1.30 NOON

**நிகழ்நிலை வகுப்புக்கள்**

COM. MATHS
- MON TO FRI: P.SENTHILNATHAN - 7.00 - 9.00 AM

BIOLOGY
- MON TO FRI: K.RAGAVAN - 8.00 - 9.30 PM

CHEMISTRY
- MON TO FRI: S.T.UMASHANKAR - 7.30 - 8.30 AM
- MON TO FRI: V.NANTHA - 5.30 - 7.30 AM ( EVERY THURSDAY EXAM )

PHYSICS
- MON TO FRI: G.PIRABA - 7.30 - 9.30 AM
- MON TO SAT: R.RAAKULAN - 8.00 - 9.30 PM

சகல மாவட்டங்களிலும் இருந்து இணைந்து கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு
076 569 3006, 076 566 3006, 0777 91 7611
https://facebook.com/NEW SCIENCE HALL JAFFNA


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## HNB வங்கியுடன் இணைந்த HNB Insurance பணி வெற்றிடம்


**Team Leader அணித்தலைவர்**
Gender - Male / Female
Allowance - 50,000/= Traveling + 10,000 with. com +ORC. Mobile - 3000/=
Expected :- Experience 2 Years.

**Group Leader**
Gender - Male / Female
Expected :- 1 Year Experience
Allowance - 30,000 + Traveling with. com +ORC.
Mobile - 2000/=

காப்புறுதி ஆலோசகர் பணிக்கும் விண்ணப்பிக்கலாம். (பணியில் இருந்து ஓய்வுபெற்றவர்களும், பாடசாலையில் இருந்து விலகியவர்களும்)

(CS/23373)4,6

**076 711 2102, 072 139 2593**



ASIA ASSET FINANCE இடமிருந்து
உங்கள் கனவை நனவாக்கிட
உறுதுணையாகும்
## நிலம் மற்றும் வீடு அடமான கடன்
குறைந்த வட்டியில் கூடிய பெறுமதியைப்
பெற்றுத் தரும் சிறந்த இடம்

அஸ்லம் - 0762 488 353

ASIA ASSET FINANCE PLC
A Finance Company with a Golden Heritage
Muthoot Group Company

Share இம் மதிப்புமிக்க செய்தியை உங்கள் வெளிநாட்டு நண்பர்கள் மற்றும் உறவுகளுக்கு மூலம் பகிரவும் ✓

## ➡ VAJIRA HOUSE



திருப்தியடைந்த ✓
வாடிக்கையாளர்களின்
VIDEOS பார்வையிட ✓
வஜிர ஹவுஸ் இணையத்தில் உள்நுழைக
www.vajirahouse.net ✓
(வாழ் நாள் உத்தரவாத வீடுகள்)

உங்கள் நிலத்தில் வீட்டை கட்டி கொள்ளலாம்
➡ யாழ்ப்பாணம் ➡ வவுனியா ➡ கண்டி
➡ மன்னார் ➡ கொழும்பு ➡ முல்லைத்தீவு

வெளிநாட்டவருக்கு 2 வது இல்லம், உங்கள் விடுமுறையை கழிக்க ✓

~~109 lakhs~~ 99 lakhs



ரூ 10,000 செலுத்தி வீட்டு வேலையை ஆரம்பிக்கலாம்.
இன்றே அழையுங்கள் Ms.Sanjeevkumar 24 hrs 0719 228 888

1916 ம் ஆண்டு தொடக்கம்,
107 வருட 4 தலைமுறையாக
பிரித்தானிய ஆட்சிக்கால வரலாறு உடைய
வஜிர ஹவுஸ்
23, டீல் பிளேஸ் A, கொள்ளுப்பிட்டி

## விற்பனைக்கு

மீசாலை, சோலை அம்மன் கோவிலை அண்மித்த பகுதியில் கவர்ச்சிகரமான இரண்டு புதிய வீடுகள் விற்பனைக்குண்டு.

- இரண்டு அறைகள், ஒரு Hall, Out Hall, Attached Bathroom உடனான 1 பரப்புக் காணியில் அமைந்த 27 அடி வீடு.
- இரண்டு அறைகள், ஒரு Hall, Attached Bathroom உடன் 1 பரப்புக்காணியில் அமைந்த 27 அடி வீடு.

**076 400 3059** (CS39261) 4,6

## வேலையாள்கள் தேவை

முல்லைத்தீவிலுள்ள பண்ணையில் தங்கி வேலை செய்யும் ஆட்கள் தேவை. கால்நடைகள் பராமரிப்பவர், விவசாயம், சமையல் வேலைகள் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை உண்டு. உணவும் தங்குமிட வசதிகளும் செய்து கொடுக்கப்படும். சம்பளம் 36,000 இலிருந்து 45,000 வரை. அனுபவத்திற்கு ஏற்ற மாதிரியும் ஆற்றலையும் உறுதிப்படுத்துவதன் மூலமும் அதிகரித்துக் கொடுக்கப்படும். தேசிய அடையாள அட்டை, வங்கிக்கணக்கு உள்ளவர்கள்.

**வயது 18 - 45 வரை உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.**

**தொடர்புகளுக்கு:-**

(CR/39266) 4,6

முகாமையாளர் :- 077 429 2500
தங்கராணி பண்ணை:- 021 229 1578, 076 257 4690

## காணி விற்பனைக்கு

5 1/2 பரப்புக்காணி கடையுடன் சங்கரத்தை சந்தி, வட்டுக்கோட்டையில் விற்பனைக்குண்டு. ஹோட்டல்கள், Sports Centre, தங்கும் விடுதி அமைப்பதற்கும் சகல வியாபார தேவைகளுக்கும் ஏற்ற இடம். மின்சாரம், தொலைபேசி, நல்ல தண்ணீர், நல்ல சூழல்.

(CS/23527)4,6

Whats App :- 077 328 8795
Mobile :- 077 328 8795

## A/L பரீட்சைக்கு தோற்றியவர்களுக்கான விஷேட சிங்கள வகுப்புக்கள் ஆரம்பம்

**சிங்களம் பேச, எழுத, வாசிக்க மிக இலகுவான முறையில் கற்பிக்கப்படும்.**
இம்முறை வைகாசி மாதம் நடைபெறவுள்ள G.C.E. O/L சிங்களப் பரீட்சைக்கு தோற்ற விரும்புபவர்கள் இதுவரை சிங்கள எழுத்து தெரியாதவர்களும் பரீட்சைக்கு விண்ணப்பித்துவிட்டு கற்றல் ஆரம்பிக்கலாம் வெற்றி நிச்சயம்.

**ஸ்ரீமஸ்டர் 077 703 3729**

ஸ்ரீ இரண்டாம் மொழி கல்வி நிறுவகம்,
இல.41, றக்காலேன், சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
இல.164, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணம்.
(Science Facultygate முன்பாக)

(CS 23542)(3/6)

JAFFNA COLLEGE 1823 CEYLON 1872

## Jaffna College - Vaddukoddai
## Admissions Grades 6 - 9

A Few Vacancies exist for the above grades especially in the English Medium. Application forms could be collected from the welfare office during school hours.

Principal

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலிச் சந்தைக்கு அருகில் சிறிய வீடு வாடகைக்குண்டு.

**076 668 4919**

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட 1977 இல் பிறந்த நிரந்தர தொழில் புரியும் கௌரவ குலத்தைச் சேர்ந்த மணமகனுக்கு மணமகள் தேவை.

தொடர்பு: 077 606 8353

## வேலையாட்கள் தேவை

பூ மற்றும் பரிசுப்பொருட்கள் கடைக்கு வேலைக்கு பெண்பிள்ளை தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

K.K.S வீதி, யாழ்ப்பாணம். **077 162 9514**

## வாடகைக்கு

கந்தரோடை சுன்னாகப் பகுதியில் 4 றூமுடன் அட்டாச் வாத்றூம் வசதி. வாகன தரிப்பு வசதி உள்ள இயற்கை சூழலில் நல்ல வருமானம் தரக்கூடிய மரங்கள் அமைந்த வீடு வாடகைக்கு உண்டு. அரச உத்தியோகத்தர் விரும்பத்தக்கது.

**077 400 2382, 076 830 7424**

## வீடு வாடகைக்கு

நவாலியில் வீடு வாடகைக்கு உண்டு. வாடகை நேரில் பேசித்தீர்மானிக்கப்படும். பிரதான வீதிக்கு அருகில், யாழ்நகரில் இருந்து 7 km தூரத்திற்குட்பட்டது.

**077 644 6514**

## சேலை விற்பனைக்கு

கொழும்பு கொட்டாஞ்சேனையில்



காஞ்சிபுரத்திலிருந்து
நேரடியாக கொள்வனவு செய்யப்பட்ட உயர்ரக கூறைப்பட்டுகள், கல்யாணபட்டு புடவைகள், பல வர்ணங்களில் border less பட்டுகள், cotton sarees அனைத்தையும் உங்கள் விருப்பத்திற்கேற்ப அமைதியான சூழலில் ஆறுதலாக தெரிவு செய்ய விசாலமான parking வசதிகளுடன் கூடிய
**கற்பகம்ஸ் Silks** ஐ
தொடர்பு கொள்ளுங்கள்

0777943318 | 0770463365 | 0771702786

## காணி விற்பனைக்கு

பிரதான வீதி, தெல்லிப்பளையில் 8 பரப்புக் காணி முழுமையாக அல்லது பகுதியாக பிரித்து வழங்கப்படும். இரண்டு பக்கம் பாதை உள்ளது. (கடை, மண்டபம், விருந்தினர் விடுதி அமைப்பதற்கு சிறந்த இடம்)

**T.P: 075 077 4745**

## 22 விற்பனைக்கு 22

யாழ். நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு அண்மையில் கோயில் வீதி முகப்புடன் 25 பரப்புக்காணியும், யாழ். கைலாச பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் நாவலர் வீதி முகப்புடன் 3 பரப்புக் காணியும், 2 1/2 பரப்புக் காணித் துண்டும், யாழ். பிறவுண் வீதியில் 1 1/2 பரப்புக் காணியும், யாழ். கீரிமலை சேந்தான்குளத்தில் 100 பரப்புக் காணியும் உடன் விற்பன்னைக்கு உண்டு.

**தொடர்பு 077 723 2535**

## பணியாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல புடைவை விற்பனை நிலையத்திற்குப் பணியாளர் தேவை.

**வயது : 18 - 25 வரை**

பாடசாலைப் படிப்பை முடித்தவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

**சம்பளம் 20,000 - 25,000 வரை வழங்கப்படும்.**

Contact Mumber
076 979 0684 / 077 385 8332

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைநலன் பாராட்டும் பிறந்த நாள் வாழ்த்தும்




"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

என்பதற்கமைய யா/ மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய மாணவர்களுக்கு அதிபராகவும், சமூகத்திற்கு சிறந்த வழிகாட்டியாகவும் முப்பத்து நான்கு வருடங்கள் அருஞ்சேவையாற்றி ஓய்வுபெறும்

**திருமதி சிவமலர் சுந்தரபாரதி**
**B.A, Dip. in Ed., M.Ed., (Sc.Trd)**

அவர்கள் ஓய்வுக் காலத்தில் ஆரோக்கியத்துடன் சமூகத்திற்கு மேலும் சேவையாற்ற வேண்டும் என இறைவனைப் பிரார்த்தித்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
**இரத்தினேஸ்வரன் குடும்பம்**
**திவா வர்த்தக நிலையம்,**
**மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.**

# ஆதன உரிமை பெயர் மாற்ற அறிவித்தல்

**வலிகாமம் வடக்கு பிரதேசசபை – மல்லாகம் உப அலுவலகம்**

உரிமையாளர் பெயர் : திரு. இராசையா சிவகுமாரன்
விண்ணப்பதாரர் பெயர் : திரு. இராசையா சிவகுமாரன்
முகவரி : தேவரானை, அளவெட்டி வடக்கு, அளவெட்டி

வலிகாமம் வடக்கு பிரதேசசபையின் மல்லாகம் உப அலுவலகத்திற்கு உட்பட்ட வட்டாரம் 12, அளவெட்டி சிறுவிளான் வீதியில் ஆதன இல. 20/1 இல் அமைந்துள்ள வலிகாமம் மேற்குப் பகுதி, பண்டத்தரிப்புக் கோவிற்பற்று, சிறுவிளான் இறை தற்போது அளவெட்டி வடக்கு கிராம சேவகர் பிரிவு J/215, வலிகாமம் வடக்கு பிரதேச செயலாளர் பிரிவு, வலிகாமம் வடக்கு பிரதேசசபைப்பகுதி "பூக்கட்டிஒல்லை" என்ற ஆதனம் உரிமை கோருபவர் சொந்தக்காரர் என்ற பெயரில் எமது சோலைவரி ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகின்றது.

குறித்த ஆதனமானது 02.12.2019 ஆந்திகதிய சட்டத்தரணி & பிரசித்த நொத்தாரிஸ் திருமதி காயத்திரி அகிலன் அவர்கள் முகதாவில் இலக்கம் 1376 இல் அத்தாட்சிப்படுத்திய அழியா நன்கொடை உறுதியால் வெளிப்படுத்தப்பட்டு விண்ணப்பதாரியினால் ஆவணம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

குறித்த ஆதனம் தொடர்பில் விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்பட்ட 1376 ஆம் இலக்க உறுதியின் தாய் உறுதிகளில் ஒன்றான வ.தம்பிப்பிள்ளை முகதாவில் 23.06.1984ஆம் திகதிய 5624ம் இலக்க உறுதியானது தாய் உறுதி இலக்கம் இல்லாமல் சமாதான நீதவான் முன்னிலையில் நிறைவேறிய சத்திய வாசக உறுதி எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் கந்தையா மயில்வாகனம், இளையதம்பி சுந்தரலிங்கம் பெண் நாகம்மா, அப்புத்துரை உமாசுதன் அப்புத்துரை சிறிதரனின் 1/3 சொரியல் என வெளிப்படுத்தப்பட்டுக் காணப்படுகின்றது. மேலும் வ.தம்பிப்பிள்ளை முகதாவில் 30.10.1982 ஆந்திகதிய 4759ம் இலக்க உறுதி மூலம் மேற்படி நபர்களுக்கு 2/3 பங்கு சொரியலாகவும் மொத்தமாக 27பரப்பு எனவும் வ. தம்பிப்பிள்ளை முகதாவில் 20.11.1982ம் திகதிய 4791ம் இலக்க உறுதியின் மூலம் 11 1/2 +2=13 1/2 பரப்பு எனவும் அளந்து கண்டபடி 173/4 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே 4 1/4 பரப்புக் காணி கூடுதலாக காணப்படுகின்றது. மேலும் இதன் தாய் உறுதிகளில் ஒன்றான கந்தப்பிள்ளை சேனாதிராஜா அவர்கள் முகதாவில் 10.11.1963 ஆம் திகதிய 4593ஆம் இலக்க உறுதியில் 13 1/2 பரப்பு எனக் காணப்படுகின்றது.

**ஆதன விபரம்**

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் மேற்குப் பகுதி, பண்டத்தரிப்புக் கோவிற்பற்று, சிறுவிளான் இறை தற்போது அளவெட்டி வடக்கு கிராம சேவகர் பிரிவு J/215, வலிகாமம் வடக்கு, பிரதேச செயலாளர் பிரிவு, வலிகாமம் வடக்கு -பிரதேச சபைப் பகுதி "பூக்கட்டிஒல்லை" நிலப்பரப்பு நாற்பத்தைந்தும் (45) குளி எட்டும் (08) இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் ரி. பாலசுப்பிரமணியம் 08.08.2018ஆம் திகதியிட்டு 840/2018ஆம் இலக்கத்தில் அளந்து வரைந்த படத்தில் துண்டு 1 ஆகக் காட்டப் பட்டுள்ளது.

**இதன் எல்லைகள்**

கிழக்கு : சின்னத்தம்பி மகேந்திரன், இராசையா வாமதேவன், கந்தையா கணபதிப் பிள்ளை, மதிவதனன் சிவரஜனி ஆகியோரின் ஆதனமும், பாதைமுகப்பும்
வடக்கு : ஜயாத்துரை புஸ்பன், கணபதி சிற்றம்பலம் வல்லிபுரம் பாலசிங்கம் ஆகியோரின் ஆதனம்
மேற்கு : தம்பையா சேனாதிராஜனின் ஆதனம்
தெற்கு : ஒழுங்கையும் பாலசுப்பிரமணியம் சிவாஸ்கரனின் ஆதனமும்

இவ்வெல்லைப்படி இதடங்கலும், இதற்குரியவைகளும்

மேற்குறித்த ஆதனத்தை இராசையா சிவகுமாரன் என்னும் பெயரில் ஆதன பெயர்மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ வெளிநாட்டில் வசிப்பவர்களாக இருந்தால் இங்குள்ள உறவினர்கள் ஊடாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் யாரும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் இராசையா சிவகுமாரன் பெயருக்கு ஆதன உரிமைமாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் இந்த ஆதன உரிமைமாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் வடக்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு. சோமசுந்தரம் சுகிர்தன்**
**தவிசாளர்**
**வலிகாமம் வடக்கு பிரதேசசபை**
**காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)**

(CS 23539)(3/6)

# நாகபூஷணி திருமணசேவை

R.C. கௌரவ குடும்பம், 1994, ரேவதி, 35 பாவமுடைய பட்டதாரி வங்கியாளருக்குத் தகுந்த மணமகள் எதிர்பார்க்கப்படுகின்றது.

பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் எம்மால் தெரிவு செய்து உடன் தரப்படும். பல்லாயிரக்கணக்கான வரன்கள் எம்மிடம் உள்ளன.

**021 222 9306, 077 138 7596, 071 999 9306**
**264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.**

(CS 49164)(4/6)

**வீடு, காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் சுண்டிக்குளியில் காணியுடன் வீடு - 1 இலாட்சம்
**15, 1/8 குழி**
உடனடியாகவிற்பனைக்கு.
சிறந்த குடியிருப்புள்ள இருப்பிடம் யாழ்ப்பாண நகரில் கோவில் வீதியில் எல்லா விதமான முக்கிய தேவைகளுக்கும் அண்மையில், சிறந்த தெளிவான உறுதி. பார்வையிடல் முந்திய நியமனத்துடன் வாங்குபவர் மட்டும்
உடனடி விற்பனை, தயவு செய்து தரகர் வேண்டாம்
விபரங்களுக்கு தொடர்பு :
**0774 04 89 57**

# கடை வாடகைக்கு

நாவற்குழி சந்திக்கு அருகாமையில் 36 அடி நீளமும் 36 அடி அகலமும் உடைய மூன்று திறந்த உள்ளக வடிவமைப்பினைக் கொண்ட தொடர் கடை வாடகைக்கு உள்ளது. இக்கடையினுள் மலசலகூட வசதிகள், CCTV Camera வசதிகள் மற்றும் வாகன தரிப்பிட வசதிகளுடன்கூடிய கடை வாடகைக்கு உண்டு. இக்கடையானது A-9 வீதியில் அமைந்துள்ளதோடு புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் அமைந்துள்ளது. வியாபாரம், வர்த்தக மற்றும் வணிக செயற்பாடுகளுக்கு உகந்தது. ஒப்பந்த அடிப்படையில் நிறுவனங்கள், தனியார் வங்கிகள் பெற்றுக் கொள்ளமுடியும்.

(CS 23544)(3/6)

தொடர்புகளுக்கு
**076 717 0134, 075 717 0134**

# கணக்காளர் தேவை

**இங்கிலாந்தை (UK) தலைமைக் காரியாலயமாகக் கொண்டு யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும்**
**Accounting Firm இற்கு**
**4 கணக்காளர்கள் தேவை.**
**Salary depends on experience and qualification**
**ஆர்வமுள்ளோர் தங்கள் "CV" இனை**
**inforpaper@protonmail.com**
**என்னும் மின்னஞ்சலுக்கு 28.02.2023 இற்கு முன் அனுப்பவும்.**
**காரியாலய இடம்:-**
**Jaffna Town**



THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

## சாரதிகளுக்கான பதவி வெற்றிடம் - 5 வெற்றிடங்கள்

ஹலோ ட்றஸ்ட் நிறுவனமானது ஐக்கிய இராச்சியத்தைத் தளமாகக் கொண்டு உலகளாவியரீதியில் 26 நாடுகளில் பணியாற்றி வருகிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் யாழ்ப்பாணம் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருட்களை அகற்றிக் கொண்டிருக்கின்றது.

ஹலோ ட்றஸ்ட் நிறுவனமானது சாரதிகளுக்கான விண்ணப்பங்களைக் கோருகின்றது. இவர்களின் அத்தியாவசிய சேவைகளாவன, பணிப்பகுதிகளுக்கு அணிகளை கொண்டு செல்வதற்கும் விபத்தொன்றின் போது அம்புலன்ஸ் சேவை வழங்குவதுமாகும்.

அனைத்து விண்ணப்பதாரிகளும் கனரக வாகன (AD) ஓட்டுநர் உரிமம் வைத்திருக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் வசிப்பவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன

மேற்குறிப்பிட்ட பதவிநிலைக்கு விண்ணப்பிக்க ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிபரக் கோவைகளை எதிர்வரும் 24 பெப்ரவரி 2023 வெள்ளிக்கிழமைக்கு முன்னதாகக் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ அனுப்பிவைக்கவேண்டும்.

**மனிதவள முகாமையாளர்**
**த ஹலோ ட்றஸ்ட் - இலங்கை**
**450, திருநகர் மேற்கு, கிளிநொச்சி.**
**18.02.2023**

(ct.39285) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 20 . 03 . 1967



இறப்பு 17 . 02 . 2023

## இரட்ணசிங்கம் கேதீஸ்வரன்

(ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் யாழ். போதனா வைத்தியசாலை)

நாவலர்லேன், ஆனைப்பந்தியைப் பிறப்பிடமாகவும் இருபாலையை வசிப்பிட மாகவும் கொண்ட இரட்ணசிங்கம் கேதீஸ்வரன் நேற்றுமுன்தினம் (17.02.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம் இரட்ணசிங்கம் நாகேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் இராசமலர் தம்பதியரின் அன்பு மருமகனும், மோகனாம்பாளின் (தயா) அன்புக் கணவரும், கஜேந்திரன் (கவி), டினேஸ் (டினா), சண்ஜா, மயூட்சன் (மயூ) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (19.02.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை நொச்சிக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அரசடி லேன்,**
**இருபாலை கிழக்கு,**
**இருபாலை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**
**077 213 1448**

(cs23368) (2.6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 25 . 07 . 1945



மறைவு 16 . 02 . 2023

## திருமதி சறோஜினிதேவி(வடிவு) தம்பிராசா

6ஆம் வட்டாரம், வேலணையைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சறோஜினிதேவி (வடிவு) தம்பிராசா 16.02.2023 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை - கனகம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தவனம் - சிவபாக்கியம் தம்பதிகளின் மருமகளும், தம்பிராசாவின் மனைவியும், காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை, திருநாவுக்கரசு, பூமணி, கமலாதேவி ஆகியோரின் சகோதரியும், சந்திரசேகரம், மகாலிங்கம், சித்திரவடிவேல், காலஞ் சென்றவர்களான பூமகள், திருமகள் மற்றும் சிறிகாந்தன் ஆகியோரின் மைத்துனியும், சித்திராங்கனி, சிறிவேணி, வாகீசன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுகிர்தன், திலீபன், கீதா ஆகியோரின் மாமியாரும், கணேஸ், கரீஸ், சோபனன், கௌசான் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.02.2023) திங்கட்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப 10.00 மணி யளவில் தகனக்கிரியைக்காக அம்பலவி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**க.தம்பிராசா**
**வேலணை மேற்கு, 6ம் வட்டாரம்,**
**வேலணை.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 773 2892**

(CS/23553)1-6

# மரண அறிவித்தல்



## திரு.கணபதிப்பிள்ளை மகேந்திரன் (இந்தி)

**(முன்னை நாள் கணக்காளர்)**

யாழ்ப்பாணம் வடமராட்சியில் உள்ள கரணவாய் வடக்கு, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திரு.கணபதிப்பிள்ளை மகேந்திரன் அவர்கள் 17.02.2023 வெள்ளிக்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற பிரபல வழக்கறிஞர் பொ.கணபதிப்பிள்ளை (J.P.U.M நடுவில்), காலஞ்சென்ற மரகதவல்லி ஆகியோரின் கனிஷ்ட புத்திரனும் சாரதாதேவியின் (கணக்காளர்) அன்புக்கணவரும் துவாரகன் (Canada), லக்ஷணா ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாபு முத்துசாமியின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற மகாதேவா (நொத்தாரிசு), காலஞ்சென்ற கமலா (Zambia), காலஞ்சென்ற சரோ ஞானபண்டிதன், கௌரி ஆகியோரின் அன்புச்சகோதரனும் திருவேணி (வேணி- London), காலஞ்சென்ற மாணிக்கவாசகர் (Zambia), Dr.கேதீஸ்வரநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 18.02.2023 சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் அஞ்சலிக்காக பொரளை ஜெயரத்ன மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு 19.02.2023 இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு பிற்பகல் 2.00 மணிக்கு பூதவுடல் பொரளை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல் : மனைவி, குடும்பத்தினர்**

**T.P : 077 6621608**

# மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 06 . 1938



மறைவு 17 . 02 . 2023

## சின்னத்தம்பி சண்முகம்

**(Browns Group of Company Driver - Hatton)**

நெடுந்தீவு மேற்கைப் பிறப்பிடமாகவும், ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சண்முகம் நேற்றுமுன்தினம் (17.02.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி - வேலாசிப்பிள்ளை தம்பதி களின் அன்பு மகனும், காலஞ்சென்ற தம்பையா - நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும், நாகலட்சுமியின் அன்புக் கணவரும், சுதாகர் (லண்டன்), தினேஸ் (Millers sales Rep - Jaffna), ஆகியோரின் அன்புத் தந்தையும், வேணுகா வின் அன்பு மாமனாரும், ஹரிஷ், கேஷவி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற கனகம்மா மற்றும் தருமலிங்கம் (Jeya hotel - Vavuniya), பராசக்தி, பூமணி, திருநாவுக்கரசு (Jasotha hotel - Vavuniya), சிவசுப்பிர மணியம் (மணியம் - ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.02.2023) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 9.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**ஆடியபாதம் வீதி,**
**"மருத்துவ பீடம் முன்பாக"**
**கொக்குவில் கிழக்கு, கொக்குவில்,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தினேஸ் (மகன்) - 077 722 6305**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## இராமநாதன் பரஞ்சோதி (சோதி)

உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழக முன்னாள் தலைவரும் போசகரும், கவடி பயிற்றுவிப்பாளரும், சிவநகர் பாடசாலை ஓய்வுபெற்ற ஆசிரியரும்)

**தோற்றம்** 23.04.1955 **மறைவு** 17.02.2023

யாழ். குப்பிளானைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி, சிவநகர் உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் பரஞ்சோதி கடந்த (17.02.2023) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமநாதன் - வாலாம்பிகை தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்ற வர்களான சுப்பையா - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், நாகேஸ்வரி (கிளி) அவர்களின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான சாரதாதேவி, சிவசோதி மற்றும் அருட்சோதி (கனடா), மோகன் (சுவிஸ்), சுமதி (கனடா), ரஜனி (சுவிஸ்), கலைச்செல்வி (சுவிஸ்), சச்சி (லண்டன்), ரோகினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பரமேஸ்வரி (இந்தியா), காலஞ்சென்ற சுப்ரமணியம், பரமலிங்கம், காலஞ்சென்ற மகாலிங்கம், யோகேஸ்வரி, தேவதாஸ் (பிரான்ஸ்), காலஞ்சென்ற தனலட்சுமி, தனேஸ்வரி, காலஞ்சென்ற ஞானலிங்கம், சாந்தி (சுவிஸ்), பாலச்சந்திரன் (கனடா), ரதி (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான பஞ்சலிங்கம், கணேசலிங்கம் மற்றும் அம்பலம் (சுவிஸ்), வசந்தி (லண்டன்), கதிர்காமலிங்கம் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், மோகன்ராஜ் (பாபு), கோபிராஜ் (கோபு), (ஆசிரியர், கிளி/உருத்திரபுரம் மகா வித்தியாலயம்), சகீகர் (பிரபு - பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அற்புதராணி, மாதுரி, சர்மிளா ஆகியோரின் அன்பு மாமனாரும், கரணிகா, துகிதன், சாகின், கிதுசிகா, சாரன், சார்வின் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (20.02.2023) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் உருத்திரபுரம் இந்து மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


இல.129, சிவநகர்,
உருத்திரபுரம், கிளிநொச்சி.

(22363 B) 4,6

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

| | |
|---|---|
| மோகன் (சகோதரன்) | - 0041 79422 6066 |
| கோபி (மகன்) | - 077 926 5259 |
| பாபு (மகன்) | - 077 612 3611 |
| பிரபு (மகன்) | - 0033 613 33 5563 |
| விதுசன் ( மருமகன்) | - 077 067 2138 |
| திலக்சன் (பெறாமகன்) | - 077 690 3689 |

# மரண அறிவித்தல்



## சற்குணராசா காந்தரூபா

**பிறப்பு** 27.05.1963 **இறப்பு** 17.02.2023

உருத்திரபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட சற்குணராசா காந்தரூபா நேற்று முன்தினம் (17.02.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணேசன் ஞானலட்சுமி தம்பதிகளின் அருமை மகளும், காலஞ்சென்ற செல்லத்துரை நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், சற்குணராசாவின் பாசமிகு மனைவியும், யோகலிங்கம், கமலகுமாரி, கோமதி, சோதிமதி, லோகேஸ்வரன், தவனேசன், யசோதா, லகுலேசன், கயோதா ஆகியோரின் அன்புச் சகோதரியும், விஜயலட்சுமி, காலஞ்சென்ற இன்பராசா, மகாலிங்கம், சிவனேசன், தர்ஷினி, தாரணி, ஹென்றி மரியநாதன், தயானி, பாக்கியநாதன், காலஞ்சென்ற திரவியம், காலஞ்சென்ற தங்கராசா, யோகராசா, இந்திராணி, பவளராணி, காலஞ்சென்ற பற்குண ராசா ஆகியோரின் மைத்துனியும், நித்தியாவின் அன்புத் தயாரும், சாரங்கனின் அன்பு மாமியாரும், அப்சரா, அபிநயன் ஆகியோரின் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் (21.02.2023) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் உருத்திரபுரம் இந்து மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**


**தொடர்பு:**

| | | |
|---|---|---|
| ச. யோசெப் | - மகன் | - 076 086 1999 |
| க.லங்கன் | - தம்பி | - 0049 1512 489 9212 |
| ர.திலக்சன் | - மருமகன் | - 077 690 3689 |
| ஆ.திலிசன் | - மருமகன் | - 077 143 0663 |
| ச.விதுசன் | - மகன் | - 075 662 1344 |
| க.கயோதா | - தங்கை | - 0033 783 765 592 |

(22363) (2,6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேற்றுமுதல் திரையில் 'தூவானம்'




யாழ்ப்பாணம், பெப். 19

ஈழத்துக் கலைஞர்களின் பங்களிப்பில் பொது மருத்துவ நிபுணர் சி.சிவன்சுதன் தயாரிப்பில் யாழ்.பல்கலைக்கழக விரிவுரையாளர் ரதிதரனின் இயக்கத்தில் உருவான 'தூவானம்' முழு நீளத் திரைப்படம் நேற்று சனிக்கிழமை முதல் திரையில் வெளியாகியுள்ளது.

அதன்படி யாழ்ப்பாணம் ராஜா திரையரங்கில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கும் திங்கட்கிழமை தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை மாலை 5.30 மணிக்கும் எதிர்வரும் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் மாலை 4.30 மணிக்கும் 'தூவானம்' திரையிடப்படவுள்ளது.

இதேவேளை பருத்தித்துறை, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி ஆகிய இடங்களிலுள்ள திரையரங்குகளில் நேற்று சனிக்கிழமை 'தூவானம்' திரையிடப்பட்டுள்ளது.

(ச)

## வடக்கும்...

-இவ்வாறு தமிழக பாரதிய ஜனதா கட்சி தலைவர் கே.அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட பின்னர் தமிழகம் சென்ற அவர் அங்கு ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சினைக்கு 13ஆவது அரசியல் திருத்தம் நிரந்தரத் தீர்வாக அமையாது என்றும், சமஷ்டி அடிப்படையிலான தீர்வே அவசியம் என்றும் தமிழ் மக்கள் வலியுறுத்திவரும் நிலையில், அண்ணாமலை மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அண்மையில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சரைச் சந்தித்து 13ஆவது திருத்தத்தை உடனடியாக நடைமுறைப்படுத்தவேண்டும் என்று நாம் கோரிக்கையை முன்வைத்தோம். இலங்கை சென்றிருந்த இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் அந்த நிலைப்பாட்டை வெளிப்படுத்தியிருந்தார் என்றும் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் இப்போது இந்தியப் பிரதமர் மோடியே பேசுபொருளாக உள்ளார். அண்மையில் இந்திய மத்திய இணை அமைச்சர் முருகன் இலங்கை சென்றிருந்தார். யாழ்ப்பாணத்தில் உள்ள கலாசார மண்டபத்தை இலங்கை மக்களுக்கு, அதாவது வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுக்கு வழங்குவதற்காகச் சென்றிருந்தார்.

அங்கு வடக்கும், கிழக்கும் முழுவதுமாக இந்தியப் பிரதமர் மோடியின் கைகளிலேயே உள்ளன. அந்த மாகாண மக்களும் அவரையே நம்பியுள்ளனர். ஏனென்றால் அபிவிருத்தித் திட்டங்களை நாங்களே செய்கின்றோம். பலாலியில் விமான நிலையம், காங்கேசன்துறையில் துறைமுகம், மன்னாரூடாக இந்தியாவுக்கு கப்பல் போக்குவரத்து, யாழ்ப்பாணத்தில் 11 மில்லியன் டொலர் செலவில் கலாசார மண்டபம், கொழும்பு - யாழ்ப்பாணம் ரயில் தண்டவாளம் என்று எங்கு பார்த்தாலும் இந்திய அபிவிருத்தித் திட்டங்களே மேற்கொள்ளப்படுகின்றன. அதனால் அபிவிருத்தித் திட்டங்களுக்கு இந்தியப் பிரதமர் மோடியையே அந்த மக்கள் நம்பியிருக்கிறார்கள். அதில் எந்த மாற்றுக் கருத்துக்களும் இல்லை.

இலங்கையைப் பொறுத்தவரையில் 13ஆவது திருத்தம்தான் தீர்வு என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கின்றோம். இலங்கைக்குச் சென்றிருந்த இந்திய வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் இந்த விடயத்தை அந்தநாட்டு அரசாங்கத்திடம் உறுதியாகத் தெரிவித்து வந்திருக்கின்றார். இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்றத்தில் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நேரம் வந்துவிட்டது என்று தெரிவித்துள்ளார்.

தற்போது தேவை மாகாணத்துக்கான அதிகாரங்கள்தான். பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் தேவை. இலங்கை சென்றிருந்த மத்திய இணை அமைச்சர் முருகனும் இது தொடர்பான பேச்சுக்களை நடத்தியிருந்தார். நிறைய விடயங்கள் அடுத்த இரண்டு, மூன்று மாதங்களில் நடக்கும்.

ஒருவர் (பிரபாகரன்) இருக்கிறாரா? இல்லையா? என்பது பற்றி பழ.நெடுமாறனின் தொடர்ந்தும் பேசுகின்றார். எங்களைப் பொறுத்தவரையில் அவற்றையெல்லாம் தாண்டி இலங்கை மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு கொடுக்கக்கூடிய ஒரே தலைவர் மோடி மட்டுமே - என்றார்.

(அ-எ-இ)

## 6 லட்சம்...

விசேட வசந்த மண்டப அலங்கார பூஜையைத் தொடர்ந்து பாலாவியில் எழுந்தருளி இருக்கும் ஈசனுக்கு தீர்த்த உற்சவம் நடைபெற்றது..

அடியார்களுக்கு அன்னதானம், தாக சாந்தி என்பன வழங்கப்பட்டதுடன், விசேட நிகழ்வுகளாக சிறப்புச் சமயச் சொற்பொழிவுகள், கலை நிகழ்வுகள், பாராயணம் ஓதுதல் போன்றவையும் இடம்பெற்றன. (அ-எ-213)

## ஜி.எஸ்.பி. வரிச்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தற்போதுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க இலங்கை இதுவரை நடவடிக்கை எடுக்காத நிலையில், அது ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை இழக்கும் ஆபத்தை எதிர்கொள்கின்றது. தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை சர்வதேச தரத்துக்கு மாற்றுவோம் என்று இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்துக்கும், ஜேர்மனிக்கும் பல தடவைகள் வாக்குறுதி அளித்தது. ஆனால், இதுவரை அது நடக்கவில்லை. ஜி.எஸ்.பி. வரிச் சலுகையின் தற்போதைய கட்டம் முடிவுக்கும் வரும் நிலையில், எதிர்காலத்தில் அந்தச் சலுகையை இலங்கை இழக்கும் ஆபத்துள்ளது.

இலங்கை தற்போதுள்ள நிலையில் வரிச் சலுகையை இழப்பது பெரும் பின்னடைவாக இருக்கும் - என்றார்.

(அ-எ-இ)

## தேர்தலை...

தமிழ்த் தேசியக் கூட்டணியின் வலி. வடக்கு வேட்பாளர்கள் அறிமுகக் கூட்டம் காங்கேசன்துறை அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தேர்தல் நடை[illegible] தயாராகவே இரு[illegible] நாட்டின் பொருளாதார நிலைமையைக் கருத்திற்கொண்டு தேர்தலைப் பிற்போடுவதே சிறந்தது.

தற்போதைய சூழலில் தேர்தலை நடத்தினால் நாட்டில் இன்னமும் குழப்பங்களே ஏற்படும். எந்தக் கட்சியும் பெரும்பான்மையான வாக்குகளைப் பெறுவதற்கான சந்தர்ப்பம் இல்லை. அதனால் பிரதேசசபைகளில் ஆட்சி அமைக்க தேர்தலின் பின்னர் கூட்டணி அமைத்தே செயற்பட வேண்டிய நிலைமை ஏற்படும் - என்றார். (அ-எ-இ)

## வாக்குச்சீட்டு...

-இவ்வாறு பொலிஸ் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அரச அச்சகத்தால் பொலிஸ் திணைக்களத்திடம் பாதுகாப்புக் கோரப்பட்டுள்ளமை தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

எந்தவொரு தேர்தலுக்கும் பொலிஸ் திணைக்களத்தாலேயே பாதுகாப்பு வழங்கப்படும். தேர்தல் ஆணையாளரின் ஆலோசனைக்கமைய அதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். பாதுகாப்பு வழங்கவேண்டும் என்று பொலிஸ் திணைக்களத்திடம் அரச அச்சகம் கோரிக்கை விடுத்துள்ளது.

நிதி நெருக்கடிகள் காரணமாக வாக்குச் சீட்டு அச்சிடும் பணிகள் தற்போது நடைபெறவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. வாக்குச் சீட்டு அச்சிடும் பணிகள் ஆரம்பமான பின்னர் பாதுகாப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

அங்கு பாதுகாப்பு வழங்கும்போது நீண்ட காலத்துக்கு பொலிஸ் உத்தியோகத்தர்களை பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தவேண்டி ஏற்படும். இதற்காக பொலிஸ் உத்தியோகத்தர்களை பிரத்தியேகமாக நியமிக்கவேண்டிய தேவையும் காணப்படுகிறது.

அரச நிறுவனங்களால் பாதுகாப்புக் கோரிக்கை விடுவிக்கப்படும்போது, கடமையில் ஈடுபடுத்தப்படவேண்டிய பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை பொலிஸ் திணைக்களத்தால் தீர்மானிக்கப்படும். இந்தக் காரணிகளை ஆராய்ந்து பாதுகாப்பு வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார்.

வாக்குச்சீட்டு அச்சிடும் பணிகள் தொடர்பில் கருத்துத் தெரிவித்திருந்த அரச அச்சகத்தின் தலைவர் கங்கானி லியனகே, எந்தவொரு தேர்தலின் போதும் பலத்த பொலிஸ் பாதுகாப்பின்றி வாக்குச் சீட்டுக்கள் அச்சிடப்பட்டதில்லை. ஆனால், தற்போது வெறுமனே 2 பொலிஸ் உத்தியோகத்தர்கள் மாத்திரமே கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று தெரிவித்திருந்தார். (அ-எ-இ)

## அடுத்த...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு, தாஜ்சமுத்திரா ஹோட்டலில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாட்டின் பொருளாதாரம் விரைவில் வழமைக்குத் திரும்பும். இந்த ஆண்டு இறுதிக்குள் நாட்டில் ஜனநாயகம் தளராமல் சமூகம் கட்டியெழுப்பப்படும்.

நான் ஜனநாயகத்தை மதிக்கும் தலைவர். ஆனால், ஜனநாயகத்துக்கு முதலில் பொது அமைதி தேவை. அதற்குச் சட்டம் ஒழுங்கைப் பேணுவது அவசியம். ஒரு நாட்டில் சட்டம் ஒழுங்கு இல்லாமல் ஜனநாயகம் இருக்கமுடியாது. ஜனநாயகத்துக்கு நிலையான பொருளாதாரம் அவசியம்.

சட்டம், ஒழுங்கு மற்றும் பொருளாதார மீட்சி இல்லாத நாட்டில் அராஜகமே காணப்படும், ஜனநாயகம் இருக்காது. நாட்டை அராஜக பாதைக்குக் கொண்டு செல்ல ஒருபோதும் இடமளிக்கப்போவதில்லை - என்றார். (அ-எ-இ)

## தேர்தலுக்கான...

தேர்தல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

நாளை திங்கட்கிழமை முதல் அனைத்து ஊழியர்களுக்கும் சாதாரண அலுவலக நேரம் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், தேர்தல் கடமைகளுக்கான மேலதிக நேர வேலைகளும் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

பிரதான அலுவலகம் உட்பட அனைத்து மாவட்டத் தேர்தல் அலுவலகங்களையும் வார இறுதி நாள்கள் மற்றும் பொது விடுமுறை நாள்களில் மூடுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும் என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வார இறுதி நாள்களிலோ அல்லது விடுமுறை நாள்களிலோ ஏதாவது விசேட கடமைக்காக அலுவலகத்தை திறப்பது அவசியமானால் அதற்கு தேர்தல் ஆணையாளர் நாயகத்தின் முன் அனுமதி பெறப்படவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தற்போது பணியில் உள்ள தற்காலிக உதவியாளர்கள் மற்றும் ஓய்வுபெற்ற அலுவலர்களின் சேவைகள் நேற்று முன்தினம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அலுவலக நேரத்துக்குப் பின்னர் தற்காலிகமாக நிறுத்தப்படும். ஊழியர்களின் போக்குவரத்துக்காக பல்வேறு நிறுவனங்களில் இருந்து பெறப்பட்ட அனைத்து வாகனங்களும் உடனடியாக நடைமுறைக்குவரும் வகையில் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு தற்காலிகமாக விடுவிக்கப்படவேண்டும் எனவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, அலுவலகத்தின் பாதுகாப்புக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள பொலிஸ் பாதுகாப்பு தொடர்பில் எதிர்காலத்தில் அறிவுறுத்தல் வழங்கப்படும் என்றும் அதுவரை பொலிஸ் பாதுகாப்பை பெற்றுக்கொள்ள ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கஞ்சா விளம்பரம்; ருவிற்றர் அனுமதி

அமெரிக்காவில் கஞ்சா விளம்பரங்களை அனுமதிக்கும் முதல் சமூக ஊடக தளமாக ருவிற்றர் முன்வந்துள்ளது. அமெரிக்க கூட்டாட்சியில் கஞ்சா பானை சட்டவிரோதமானது என பேஸ்புக், இன்ஸ்டாகிராம் மற்றும் டிக்ரொன் ஆகிய ஏனைய சமூக ஊடகங்கள் விளம்பரங்களுக்கு தடைவிதித்துள்ளன.

இந்த நிலையில் கஞ்சா நிறுவனங்களுக்கு முறையான உரிமம் இருக்கும் வரை விளம் பரம் செய்ய அனுமதிப்பதாக ருவிற்றர் நிறுவனம் அறிவித்துள்ளது. (ச-இ)


### வேலையாள் தேவை

அறிவியல் நகரில் இயங்கும் ஹோட்டலுக்கு சமையல் (சைவம்.அசைவம்). றொட்டி, றைஸ் வேலை தெரிந்த ஆண்கள் தேவை. தங்கிநின்று வேலை செய்பவர்கள் மட்டும் தேவை.

076 672 5879, 071 010 4545

### வீடு வாடகைக்கு உண்டு

யாழ் நகருக்கு மிக அண்மிய சூழலில் நாவாந்துறை. 3ம் குறுக்கு வீதியில் வீடு வாடகைக்கு உண்டு. சிறிய குடும்பத்துக்கு உகந்தது. மாத வாடகை 10.000. ஒருவருட முற்பணம் தேவை. (CS/22979)4,6)

071 017 6305, 077 931 1889

### Win Repair

உங்கள் குளிர்சாதனப்பெட்டி பழுதடைந்து விட்டதென கவலைப்படாதீர்கள் உங்கள் இடத்திற்கே வந்து திருத்திக் கொடுக்கின்றோம்.

T.P : 077 964 8942

### கட்டடத்தின் மேற்பகுதி வாடகைக்கு

யாழ்.நகரில் இருந்து 3km தூரத்தில் பலாலி வீதியில் உள்ளது. பல்கலைக்கழக மாணவர்கள் தங்குவதற்கு,அலுவலக தேவைக்கு, கல்வி நிறுவனங்கள் நடத்துவதற்கு உகந்தது. (CS 49163)4,6

075 037 5429

### அறைகள் வாடகைக்கு

யாழ்.நொதேர்ன் வைத்தியசாலைக்கும், யாழ்.பல்கலைக்கழகத்திற்கும் மிக அண்மையில் விசாலமான அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய 3Room & Hall வாடகைக்கு உண்டு.(வைத்தியர்கள், அரச உத்தியோகத்தர்கள், வங்கி ஊழியர்கள், கல்வி கற்கும் பெண்களுக்கு மட்டும்.

077 308 3007

### பெண் வேலையாட்கள் தேவை

யாழ். நகரிலுள்ள கடையொன்றுக்கு 18-30 வயதிற்குட்பட்ட பெண் வேலையாட்கள் தேவை.
சம்பளம்-35.000
தொடர்பு
077 937 0000
075 988 1000

### ENGLISH CLASSES

SPOKEN ENGLISH WITH GRAMMAR
ஆர்வமுள்ள சகலருக்கும்
From Grade 7 to Graduates
தொழில்புரிபவர்களுக்குமானது.

K.Ganesh B.A 077 766 8725

### கடை வாடகைக்கு உண்டு

இல.27, 47 ஸ்ரான்லி றோட்
யாழ்ப்பாணம் (CS23379) (3/6)

075 244 1545, 076 319 7319

### வேலையாள்கள் தேவை

யாழ்நகரிலுள்ள ஃபான்சி கடை ஒன்றிற்கு வேலையாள்கள் தேவை. யாழ்நகரிற்கு அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

070 612 9998

### அறை வாடகைக்கு

யாழ் செயலகத்தில் இருந்து சுமார் 200 மீற்றர் தூரத்தில் A9 வீதியில் (கண்டி வீதி, பெந்தோகொஸ்த மிசனுக்கு முன்னால்) உள்ள வீட்டில் தனியான குளியல் அறையுடன் ஓர் அறை வாடகைக்கு உண்டு. பொது விறாந்தை பாவிக்க முடியும். வாடகை பேசித் தீர்மானித்துக் கொள்ளலாம்.

T.P: 076 902 3732 (CS/23370) 4,6

### காணி விற்பனைக்கு

பலாலி வீதி கோண்டாவில் ரோசமணி திருமண மண்டபத்திற்கு அருகாக கொட்டைக்காடு வீதியில் அண்ணளவாக 400 மீற்றர் தூரத்தில் 2 பரப்பு சதுரக்காணி விற்பனைக்குண்டு.தரகர்கள் இல்லை. விலை பேசித் தீர்மானிக்கலாம். (CS 23541)(3/6)

070 786 0821, 077 922 5704

### வீடு விற்பனைக்கு

நல்லூர் கந்தசாமி கோவிலில் இருந்து 5 நிமிட நடைதூரத்தில் 5 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.
பார்வையிடும் நேரம் :
சனி, ஞாயிறு
முற்பகல் 10.00 - மாலை 6.00 மணிவரை

071 416 3280, 074 271 5339
WhatsApp - +1416 893 2377

### ஆண் பராமரிப்பாளர் தேவை

கீரிமலையில் வசிக்கும் முதியவர் ஒருவரை வீட்டில் தங்கியிருந்து பராமரிப்பதற்கு ஆண் பராமரிப்பாளர் ஒருவர் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

070 624 6587 (CS/23534) 4,6

### மின் தடைகளுக்கு உடனடித் தீர்வு

இல்லம், தொழிலகங்கள், ஆலயங்களுக்கான மின் தடை மற்றும் மின் கட்டணங்களைக் குறைப்பதற்கு INVERTER BATTERY SOLAR வசதிகள் மற்றும் CCTV CAMERA குறைந்த செலவில் பொருத்தித்தரப்படும். மற்றும் பழுது பார்க்கப்படும்.

111A, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

தொ.இல:- 077 555 5100 (CS/48692) 4,6

### குட்டி குடிநீர் சுத்திகரிப்பு நிலையம்
### KUDDY FILTER WATER

வல்வெட்டித்துறையில் இப்போது புத்தம் புது பொலிவில் 100% தூய்மையான சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**1 லீற்றர் - 4.00 ரூபாய்**

வன்னிச்சி அம்மன் கோவிலடி,
வல்வெட்டித்துறை. 076 121 4330

### VACANCY FOR THE POST OF SECRETARY
**NUFFIELD SCHOOL FOR THE DEAF AND BLIND, KAITHADY**

As a Secretary you will assume the duty of clerical and administrative support in order to optimize workflow procedures in the office. You will assist colleagues and principal by supporting them with planning and distributing information.

**Minimum requirements:**
- Work experience in related field – minimum two years
- Passed G.C.E (A/L)
- Computer skill (Ms. Office, email and internet)
- Fluent in written and spoken Tamil & English
- Age above 25 years

**The following attributes will be considered favourable:**
- Sinhala
- Confidence in being an effective gate keeper answerable to the Principal.

**Salary negotiable**

Applications giving full details with names of two referees should be emailed to nsdb1956@gmail.com and the original posted to the undersigned by 25th February 2023. Selected candidates will be called for an interview.

**Principal**
**Nuffield School for the Deaf and Blind**
**Kaithady.**

### காணி விற்பனைக்கு

மானிப்பாய் கொமர்ஷல் வங்கிக்கும், மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் இடையில் உள்ள 4 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்:-

077 873 9210 (CS 23511) 4,6

### வவுனியாவில் காணி விற்பனைக்கு

வவுனியா வைத்தியசாலை சுற்றுவட்ட வீதியில் ஒருபரப்பு மற்றும் இரண்டு பரப்பு உறுதிக்காணிகள் விற்பனைக்குள்ளது. விலை பேசித் தீர்மானிக்கப்படும்.

077 656 3582

### வீடு வாடகைக்குத் தேவை

பருத்தித்துறை வீதி, பலாலி வீதி போன்ற பிரதான வீதிகளை அண்மித்த பகுதிகளில் நல்ல சுற்றுப்புறச் சூழலில் நான்கு (04) அல்லது மூன்று (03) அறைகள் மற்றும் இரண்டு (02) குளியலறைகள் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை. குறைந்தபட்சம் இரண்டு வருட காலம் வாடகைக்காலமும் நியாயமான வாடகையும் எதிர்பார்க்கப்படுகின்றது.

075 571 7376

### காலை நேர பேருந்து சேவை




யாழில் இருந்து கொழும்பிற்கு அதி சொகுசு பேருந்து சேவை தினமும் முற்பகல் 9.00 மணி புதிய பஸ் நிலையத்திலிருந்தும் கொழும்பு வெள்ளவத்தையிலிருந்து முற்பகல் 9.00 மணி நாளை (20.02.2023) திங்கட்கிழமை Rathna Travels பேருந்து சேவை நடைபெறும் என்பதனை மிக மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

நிர்வாகி : Rathna Travels
தொடர்புகளுக்கு : 077 825 0506
Hot line : 077 335 4555

### பியர் போத்தல் கொள்வனவு

பாவித்த பியர் போத்தல் கொள்வனவு செய்யப்படும்.

0777 608 528

### பியர் போத்தல் மூடி விற்பனை

எம்மிடம் 150° (பாகை செல்சியஸ் வரை) பாவிக்கக் கூடிய பியர் போத்தல் மூடி விற்பனைக்கு உண்டு.

0777 111 444


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 19.02.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பக்கங்கள்: 08

# சஞ்சீவி


Registered as a Newspaper

ஞாயிற்றுக்கிழமை (19.02.2023) சிகரம் : 137

தேடினாலும் கிடைக்குதில்லை அப்பிள்
தேர்தலுக்கு எதிராப் போடுகினம் அப்பீல்
பார்த்ததும் பத்தியெரிய வைக்குது கரண்ட் பில்
நாசமான நாட்டை விட்டு ஓடிட்டாராம் கடவுள்!

- கொரோனானந்த சுவாமிகள்

# சுதந்திரதினமும் தமிழர்கள் நடத்திய போராட்டங்களும்



நிலாந்தன்

சிவாஜிலிங்கம் தனது ஆதங்க ஆவேசத்தை வெளிப்படுத்துகிறார். இது அவரது உரிமை. அவரது ஆவேசக் கோரிக்கைகள் தமிழ் மக்களின் ஆவேசக் கோரிக்கைகள்தான். எனக்கு அதில் மாற்றுக் கருத்து தெரியலை. ஆனால் இவர் இப்படித் தன்னந்தனி மனிதராக இதைச் செய்யும்போது, அவர் முன்வைக்கும் கோஷங்களும் பலவீனமடைகின்றனவே? தவிர்க்க முடியாமல் ஒரு கோமாளித் தோற்றப்பாடும் ஏற்படுகிறதே? இவற்றை இன்னமும் கட்சி, இயக்கரீதியாக பலமாகத் திட்டமிட்டு அமைப்புரீதியாகச் செய்ய முடியாதா?"

இவ்வாறு கேட்டிருப்பவர் மனோகணேசன். சுதந்திர தினத்தையொட்டி யாழ்ப்பாணத்தில் நடந்த நிகழ்வில் பங்குபற்றுவதற்காக வருகை தந்த ஜனாதிபதிக்கு எதிராக சிவாஜிலிங்கமும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்தவர்களும் எதிர்ப்புக்காட்டியிருந்தார்கள். இதில் சிவாஜிலிங்கம் தனி ஒரு ஆளாக நின்று கோஷம் எழுப்பும் காணொலியைப் பார்த்துவிட்டே மனோகணேசன் மேற்கண்டவாறு கேட்டார்.

இயல்பிலேயே சிவாஜிலிங்கம் ஒரு தனிமனித இராணுவந்தான். நினைவேந்தலிலும் அவர் அப்படித் தான்.எதிர்ப்புப் போராட்டங்களிலும் அப்படித்தான். பெரும்பாலான அவருடைய துணிச்சலான அரசியல் செயற்பாடுகளில் அவர் தனியாகத்தான் முன்செல்கிறார். அதை ஒரு குழுச் செயற்பாடாகவோ, அல்லது கட்சிச் செயற்பாடாகவோ, அல்லது மக்கள் மயப்பட்ட ஒரு செயற்பாடாகவோ ஒழுங்குபடுத்தவேண்டும் என்று அவர் யோசிப்பதில்லை. சில சமயம் அவ்வாறு மற்றவர்களைக் கூட்டுச்சேர்ப்பது கடினமானது என்று அவர் கருதுகிறாரா?



ஒரு மக்கள் கூட்டம் எதிர்ப்பைக் காட்டும்போது அதை ஏதோ ஒரு விதத்தில் உலகத்தையும் ஊடகங்களையும் கவரும் விதத்தில் படைப்புத்திறனோடும், புத்திசாலித்தனமாகவும் ஒழுங்கமைக்க வேண்டும். ஆனால், தமிழ் அரசியல்பரப்பில் அவ்வாறு எதிர்ப்புப் போராட்டங்களில் படைப்புத்திறனோடு கூடிய கூட்டுச் செயற்பாடுகளை அனேகமாகக் காணமுடிவதில்லை. அவ்வாறு மக்கள்மயப்படாத போராட்டங்கள் உரிய செய்தியை, உரிய தாக்கத்தோடு, உரிய தரப்புகளுக்கு உணர்த்தத் தவறுகின்றன.

யாழ்ப்பாணத்தின் முக்கியமான சந்தைகளில் வெள்ளை உடுப்போடு ஒரு கையில் பைபிளும் ஒரு கையில் ஸ்பீக்கருமாக மதபோதனையை முன்னெடுக்கும் ஒருவரை அடிக்கடி காணலாம். மற்றவர்கள் தன்னைப் பார்க்கிறார்களா? கேட்கிறார்களா? என்பதைக் குறித்து அவர் அலட்டிக் கொள்வதில்லை. அதையோர் இறை ஊழியமாக அவர் தொடர்ந்து செய்துவருகிறார். அது அவருடைய நம்பிக்கை. ஆனால், அதைப்போல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் செயற்படமுடியாது.

சுதந்திரதினத்திலன்று பல்கலைக்கழக மாணவர்கள் வடக்கில் இருந்து கிழக்கு நோக்கி ஊர்வலமாகப் போனார்கள். அது வடக்கு - கிழக்கு இணைந்த தாயக ஒருமைப்பாட்டைப் பலப்படுத்தும் ஒரு பேரணி. அதில் உதிரிகளாக கட்சி பிரமுகர்கள் காணப்பட்டார்கள். சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவாளர்களோடு கலந்து கொண்டார்கள். முன்பு நடந்த 'பி2பி' போராட்டத்தைப் போல பெருந்திரளான எண்ணிக்கையில் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அதில் பங்குபற்றவில்லை. அதாவது அந்த எதிர்ப்புப் பேரணியில் கட்சிகளின் பங்களிப்பு ஒப்பீட்டளவில் குறைவாகக் காணப்பட்டது. ஏன் அதிகம் போவான், அதில் பங்குபற்றிய பல்கலைக்கழக மாணவர்களின் எண்ணிக்கையே நூற்றுக்கும் குறைவு. கலைப்பீடத்தைத் தவிர ஏனைய பீட மாணவர்கள் பெரும்பாலும் பங்குபற்றவில்லை.

மாணவர்களின் போராட்டம் தொடங்கமுன்பே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் மாணவர்களுக்கும் இடையே கருத்து முரண்பாடுகள் தோன்றின. மாணவர்கள் யாழ்ப்பாணத்தில் போராட்டத்தைத் தொடங்கியபொழுது தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி தனியாக ஒரு போராட்டத்தை நடத்தியது. அதே நாளில் மட்டக்களப்பில் தமிழரசுக் கட்சி தனியாக ஒரு போராட்டத்தை நடத்தியது. அந்தப்போராட்டமானது அரசாங்கத்துக்கு எதிரானது மட்டுமல்ல, குறிப்பாக குத்து விளக்குச் சின்னத்தின் கீழ் காணப்படும் ரெலோ இயக்கத்துக்கும் எதிரானது.




இவ்வாறாக சுதந்திரதினத்தையொட்டி நடந்த போராட்டங்களைத் தொகுத்துப் பார்த்தால் தமிழ்மக்கள் கூட்டாகவும் செயற்படமாட்டார்களா? படைப்புத்திறனோடு போராடவும் மாட்டார்களா? என்று கேட்கத் தோன்றுகிறது. மட்டக்களப்பில், சுமந்திரனும் சாணக்கியனும் அவர்களுடைய ஆதரவாளர்களும் காந்தி குல்லாவோடு காட்சியளித்தமை ஒரு படைப்புத்திறனாகப் பார்க்கப்படவில்லை. மாறாக அது ஒரு பகிடியாகப் பார்க்கப்பட்டது.

இவ்வாறாக கடந்த சுதந்திரதினத்தை முன்னிட்டு தமிழ்ப் பகுதிகளில் நடந்த போராட்டங்கள் அனைத்திலும் கூட்டுச் செயற்பாடு குறைவாக இருந்தது. தனிமனித முனைப்பு அல்லது கட்சி முனைப்பு துருத்திக் கொண்டு தெரிந்தது. படைப்புத்திறன் இருக்கவில்லை. பழைய சலித்த அதே போராட்ட வழிமுறைகள். பொலிஸார் கைது செய்தபடியால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் போராட்டத்துக்கு ஒரு கவனிப்பு கிடைத்தது. அதுவும் பிணை கிடைத்தவுடன் கொதிப்பு அடங்கிவிட்டது.

இவ்வாறு உலகின் கவனத்தை ஈர்க்கமுடியாத போராட்டங்களால் ஒரே ஒரு நன்மை உண்டு. குறிப்பிட்ட கட்சியின் ஆதரவாளர்களை ஓரளவுக்குக் கூட்டிக் கட்டி வைத்திருக்க அது உதவும். ஆனால் அதைவிட ஆழமான பொருளில் தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்ட மேற்படி போராட்டங்களால் முடிந்திருக்கிறதா?


புலம்பெயர்ந்து வாழும் ஒரு நண்பர் அண்மையில் கேட்டார்... "போராட்டம் என்று சொன்னால் தமிழ் மக்கள் எப்பொழுதும் வீதியிலே நிற்கவேண்டுமா? ஒரு மக்கள் கூட்டம் ஆண்டு முழுவதும் எதிர்ப்புப் போராட்டங்களையும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களையும் நடத்திக் கொண்டிருக்கமுடியுமா?" என்று பொருத்தமான கேள்வி.

ஓர் உடனடிப்பிரச்சினையை முன்வைத்து நிகழும் மக்கள் போராட்டங்கள் அவற்றின் இலக்கை அடையும்வரை தொடர்வது தவிர்க்கமுடியாது. உதாரணமாக டெல்லியில் நடந்த விவசாயிகளின் போராட்டம். ஆனால் ஒரு மக்கள் கூட்டத்தின் விடுதலைக்கான ஒரு போராட்டத்தை பொறுத்தவரை குறிப்பாக அறவழிப் போராட்டம் என்று வரும்பொழுது ஆண்டு முழுக்க போராடமுடியாது தான். ஏன் அதிகம் போவான் ,காணாமற்போகச் செய்யப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர்ச்சியாகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எத்தனை நாள் போராடியிருக்கிறார்கள் என்பது இடைக்கிடை ஊடகங்களில் வெளிவரும். ஆனால் அந்தப்போராட்டங்கள் எந்தளவு தூரத்துக்கு உலகத்தின் கவனத்தை ஈர்த்திருக்கின்றன? அல்லது எந்த அளவுக்கு சொந்த மக்களைச் சென்றடைந்திருக்கின்றன?

ஆயுதப் போராட்டத்தில் மட்டுமல்ல அறவழிப் போராட்டத்திலும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை போராட்டம் எனப்படுவது இறுதியிலும் இறுதியாக தேசத்தை நிர்மாணிப்பதுதான். தேசத்தை நிர்மாணிப்பது என்பது ஒரு மக்கள் கூட்டத்தைத் தேசமாக வனையும் அடிப்படை மூலக்கூறுகளை பலப்படுத்துவது தான். அதற்குரிய கட்டமைப்புகளை உருவாக்குவதுதான். ஆயுதப் போராட்ட காலகட்டத்தில் தமிழ்மக்கள் மத்தியில் ஒரு கருநிலை அரசு இருந்தது. அது தேச நிர்மாணத்துக்கு வேண்டிய கட்டுமானங்களை ஏதோ ஒரு

08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமிழ்த்தேசிய நீக்கமும் கம்பன் விழாவும்

## ஆனையிறவுச் சமர் கலிங்கத்துப் பரணியை நினைவூட்டுவதை மறந்தது ஏன்?

அ.நிக்ஸன்

யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம் பெற்ற கம்பன் கழக விழா ஈழத்தமிழர் பண்பாடு, தமிழ் மரபுரிமை மற்றும் ஈழத்தமிழ் சைவப் பண்பாட்டை உணர்த்த நடத்தப்பட்டதா அல்லது வட இந்திய புனை கதைகளுக்கும் அதன் வழி வந்த பண்பாட்டுக்கும் முக்கியத்துவம் கொடுப்பதற்காக நிகழ்ந்தா? என்பதை விழாவில் பங்குபற்றியோர் புரிந்திருப்பர்.' அறிவுடை அமைச்சனாக வள்ளுவ நெறிப்படி நின்றவன் சுமந்திரனா? அனுமனா?' என்ற தலைப்பில் இடம் பெற்ற விவாதத்தில் ஈழத்தமிழர் தொடர்பாகப் பேராசிரியர் வரதராஜன் ஸ்ரீபிரசாந்தன் , ஆசிரியரும், பேச்சாளருமான செல்வவடிவேல் ஆகியோர் இரு சர்ச்சைகளைக் கிளப்பியுள்ளனர்.

அறிவுடை அமைச்சனாக வள்ளுவ நெறிப்படி நின்றவன் சுமந்திரன் என்ற தலைப்பில் உரையாற்றிய செல்வவடிவேல், நிர்வாகத்தில் வேதியரை நியமிக்காதே, உறவுக்காரனைச் சேர்க்காதே, வணிகனை அமைச்சராக்காதே என்று ஔவையார் கூறியதாகக் குறிப்பிட்டு, நல்ல உள்ளம் படைத்த வேளானை நிர்வாகத்தில் சேர்க்கவேண்டும் என்று சொன்னதாகத் தவறான விளக்கம் கொடுத்தார்.

அப்போது தலைமை வகித்த இ.ஜெயராஜ், 'இராமாயணத்திலே வருகின்ற தசரதனுடைய மந்திரியான சுமந்திரன், வேளாளன் என்பதற்கு ஔவையார் பாடிய பாடல் ஆதராங்கள் உண்டா?' என்று கேட்டார்.

பாடல் ஆதாரம் இல்லை என்று கூறி விவசாயம் செய்பவன், அறுவடை செய்பவன் என்று விளக்க முற்பட்டதன் மூலமாக, வேளாளன் என்று ஔவையார் கூறியதாக செல்வவடிவேல் திரிபுபடுத்தி ஒப்புவித்தார். ஆதாரம் இல்லாத இந்தச் செய்தியை விவாதத்துக்கு எடுக்கமுடியாது என்றார் ஜெயராஜ். ஆனால் முடிவுரையில் அதனை அவர் விளக்கவில்லை. எந்த ஓர் இடத்திலும் வேதியரை (பிராமணனை) நிர்வாகத்தில் சேர்க்காதே என்று ஔவையார் கூறவில்லை. அப்படியிருக்க வேளாளனை நிர்வாகத்தில் சேர்க்கவேண்டும் என்று கூறியிருப்பாரா?

மூன்று பெண் புலவர்கள் பன்னிரெண்டாம் நூற்றாண்டுக்கு முன் ஔவை எனும் பெயருடனும் ஒரே குணாம்சங்களோடும் புலமையோடும் வெவ்வேறு கால கட்டங்களில் தமிழகத்தில் வாழ்ந்து, கவியும் பாடினர் என இலக்கிய வரலாறு கூறுகின்றது.

இந்த மூன்று ஔவையார்களும் சாதி மதத்தைச் சொல்லிப் பாடல் இயற்றியதாக அறியப்படவில்லை.

இவர்கள் மேன்மக்கள் என்று கூறியது சிறந்த பண்பாடுள்ள மக்களையே. ஆனால் கம்பன் பெயரில் விழா நடத்தி விவாதம் செய்யும் ஈழத்தமிழ் அறிஞர் எனப்படுவோர் சிலர் வள்ளுவன், ஔவை கூறிய மேன்மக்கள் என்பதை மேட்டுக்குடி மக்களுக்கான புரிதலாகவும், கற்றோர் கல்லாதோர் என்று வேறுபடுத்தியும் வட இந்திய வழிபாட்டு முறைகளை இங்கு புகுத்தும் நோக்கிலும் தமது வாதங்களை நியாயப்படுத்துகின்றனர். கம்பராமாயணம் பற்றிய ஔவையார் பாடல்களிலும் சாதி மதங்கள் இல்லை.

ஆனால் வள்ளுவர், ஔவையார் பாடல்களுக்கான பொருள் விளக்கம் என்ற போர்வையில், தங்கள் விருப்பத்துக்கு ஏற்ற முறையிலும் சாதி, சமயச் செருக்குடன் விவாதித்து மக்கள் மத்தியில் இதுதான் தமிழ்ப்பண்பாடு என்ற தவறான கற்பிதங்களை ஏற்புடையதாக நிறுவ விழைகின்றனர்.

*அட்டாலும் பால் சுவையிற் குன்றாது அளவளாய்*
*நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்*
*கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே – சங்கு*
*சுட்டாலும் வெண்மை தரும்*

- என்று ஔவையார் அருளிய மூதுரையில் கூறப்பட்டி ருக்கின்றது.

அதாவது பாலினை எவ்வளவு காய்ச்சினாலும் அதன் சுவை குறையாது. கடலில் விளையும் சங்கினை நெருப்பில் இட்டுச் சுட்டு நீறாக்கினாலும் அதனுடைய வெண்மை நிறம் மாறவே மாறாது. அதேபோல் அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்த மேன்மக்களாகிய நல்லோர் வறுமையுற்று வாடும் போதும், தமது உயரிய குணநலன்களில் இருந்து சிறிதும் விலகிச் செல்லமாட்டார். ஆனால் நட்பின் மேன்மையை அறியாத கீழோர், எவ்வளவு நெருக்கமாக எங்களுடன் பழகினாலும், அவர்கள் எங்களுக்கு உற்ற நண்பராக எக்காலத்திலும் இருக்கமாட்டார்கள் என்பதே அந்தப் பாடலின் பொருள்.

இராமாயணம் ஒரு புனையப்பட்ட கதை. அது உண்மையல்ல. ஆனால் கம்பன் விழாவிலோ, 'தசரதன் அயோத்தியில் அறுபது ஆயிரம் ஆண்டுகள் ஆட்சி செய்தான்' என்று ஆரம்பித்து வள்ளுவரின் அரசியல் நிர்வாக நெறிப்படி ஈழத்தமிழ் இன விடுதலைப் போராட்டம் நடக்கவில்லை என்றும், தவறான ஒரு தலைவன், திருத்த முடியாத ஒரு தலைவன் என்று இராமாயணக் கதைகளில் வரும் கற்பனைக் கதாபாத்திரங்களைத் தமிழர் அரசியல் விடுதலைப் போராட்டத்துடன் ஒப்பிட்டுக் கேவலப்படுத்துவதுமே நடந்தேறியிருக்கின்றது.

புனை கதையான வால்மீகி இராமாயணத்தைக் கம்பன் தமிழில் மொழிபெயர்த்தபோது, தமிழ்ப் பண்பாட்டு முறைகளுக்கும் தமிழர்களின் வைணவ நெறிக்கு ஏற்பவுமே படைத்தான். வட இந்திய வாழிபாட்டு முறைகள் எதனையும் கம்பன் தன்னுடைய இராமாயணக் கதைகளில் புகுத்தவேயில்லை.

*'உலகம் யாவையும் தாம் உளவாக்கலும்*
*நிலைபெறுத்தலும் நீக்கலும் நீங்கலா*
*அலகு ..'*

- என்று கம்பராமாயணத்தில் முதற் பாயிரத்திலேயே தமிழ்ப் பண்பாட்டையும் சமயம் அற்ற கருவூலங்களையும் தமிழியல் நெறிகளையும் கம்பன் விபரிக்கிறார்.

ஆகவே கம்பராமாயணம் வெறுமனே மொழிபெயர்ப்பு என்று கற்பிதம் செய்யமுடியாது. வால்மீகி இராமாயணத்தை உள்வாங்கித் தமிழ்ச்சமூகத்தின் மரபுரிமைகளை மையப்படுத்திச் சற்று வேறுபட்டதாக இராமாயணத்தைப் பாடியிருக்கிறான் கம்பன். ராமனைக் கடவுள் என்று எந்த இடத்திலும் கம்பன் சொல்லவில்லை. ராமன் ஒரு மனிதன் என்ற பார்வையுடன் அந்தக் கதாபாத்திரத்தைத் தமிழ்க் கதைக்குள் முக்கியப்படுத்தி வடிவமைத்துள்ளான் கம்பன். வால்மீகி இராமாயணத்தில் ராமன் வலுவிழந்த மன்னன் என்றுதான் அர்த்தப்படுகிறது. ஆனால் கம்பன் கழகம், ராமனைத் தெய்வமாக உருவகப்படுத்துகின்றது. இலங்கையின் கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை மற்றும் பல்கலைக்கழகத் தமிழ் மொழித்துறை வினாத்தாள்களில் கம்பராமாயணம் தமிழ்ப் பண்பாட்டின் கருவூலம் என்றுதான் வினாவப்படுகின்றது. தொல்காப்பியத்தில் இருந்து திருக்குறள் வரையான தமிழ்ச் சமூகத்தின் செவ்வியல் இலக்கியங்களில் சாதியம் பற்றிய கோட்பாடுகளே இல்லை.

வட இந்தியர்களின் வேதங்கள் ஊடாக நுழைந்த வர்ணாச்சிரம தர்மக் கோட்பாட்டில் இருந்துதான் சாதியம் எழுந்தது. பிரமாணர் , சத்திரியர், வைசிகர், சூத்திரர் என்ற வகைப்பாடுகள் தோற்றம் பெற்று, தமிழகத்தில் ஊடுருவி, பின்னரே ஈழத்தமிழ்ச் சமூகத்தில் பல்வேறு பெயர் வடிங்களில் சாதியம் உருப்பெற்றது. பின்னாளில் தமிழர்களைப் பிரித்தாள வசதியாகப் பிரித்தானியர் மேலும் ஊக்குவித்த சாதிமுறையையும், அதன் ஊடான சமூக ஏற்றத் தாழ்வுகளையும், விவாதம் என்ற பெயரில் தமிழ் நாகரிகமாகக் காண்பித்துத் தமிழ்த் தேசிய அரசியல் சிந்தனைகளைக் கம்பன் கழகம் மடைமாற்றுகின்றது. மூட நம்பிக்கைகள், வட இந்தியர்களின் கலை கலாசாரங்கள் ஏற்புடையவை என்ற போதனைகளும் திணிக்கப்படுகின்றன. அதனுடன் தமிழ் வைதீகம் என்ற சிந்தனைகளைக் குறைத்து மதிப்பிடும் திட்டமாகவும் இதனைக் கருத முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அறிவுடை அமைச்சனாக வள்ளுவ நெறிப்படி நின்றவன் அனுமன்' என்ற தலைப்பில் உரையாற்றிய பேராசிரியர் வரதராஜன் ஸ்ரீபிரசாந்தன் 'காப்பாற்றக்கூடிய தலைவனைத் தான் காப்பாற்றலாம்' என்று வாலியை மேற்கோள்காட்டி, 'தேசத்தைப் பலியாக்கிவிடக் கூடாது' என்கிறார். இதற்கு 'உறைசிறியார் உள்நடுங்கல் அஞ்சிக் குறைபெறின்' என்ற குறளை அவர் மேற்கோள்காட்டுகிறார்.

அதாவது இடம் சிறியது, அரசனும் சிறியவன் என்ன செய்யலாம்? உள்ளே இருக்கிற மக்கள் அழுகிறார்கள், எந்த நேரத்தில் என்னவும் எங்களுக்கு நடக்கலாம், எங்கள் பிள்ளைகள் களவாடப்பட்டு விடலாம், நாங்கள் இறந்துபோகலாம் என்று மக்கள் அஞ்சிக் கதறுகிறார்கள். இதைப் புரிந்து கொள்ளக்கூடிய, மக்களுடைய நாடித்துடிப்பை அறியக்கூடிய மந்திரி இருக்கவேண்டும். மக்கள் அஞ்சுவதைப் பார்த்து மந்திரி பயப்படவேண்டும் என்று வள்ளுவன் சொல்வதாகக் கூறி அந்தக் குறளின் பொருளை விளக்குகிறார் பிரசாந்தன்.

தங்களைவிடப் பெருமை மிக்க ஒருவரைப் பணிந்தாகிலும் தங்களுக்கு நட்பாகக் கொள்ளவேண்டும் என்று வள்ளுவர் சொல்வதாகக் கூறி, 'நாங்கள் பார்க்க மறந்த குறள், எங்களுடைய இனம் இவ்வளவு கீழ்மையாகப் போனதற்குக் காரணமான குறள்' என்று வாதிடுவதன் மூலம், இறுதிப் போரைத் தவிர்த்து இலங்கை - இந்திய அரசுகளிடம் புலிகள் பணிந்திருக்கலாம் என்பதை பிரசாந்தன் சொல்லாமற் சொல்கிறார்.'கிட்கிந்தை அழியப் போகின்றது . கிட்கிந்தையினுடைய முன்னாள் அரசன் சுக்ரீவன் ஒளித்திருக்கின்றான். ஆகவே ராமன் என்ன செய்தான்? வருபவனுக்குப் பணிந்து தங்களுடைய பகைவர்களை நட்பாக்கி அவர்களை விடவும் உயர்வாகத் தங்களைக் கருதிக் கொண்டு மீண்டும் அந்தத் தேசத்துக்கு முடி சூடித் தேசத்தைக் காத்தானா இல்லையா?' என்று உரக்கச் சத்தமிட்டு , 'அழிந்துபோன எம் இனம் ....' என்று ஈழத்தமிழர் போராட்டம் தொடர்பாக பிரசாந்தன் மேலும் ஏதோசொல்ல வரும்போது ஜெயராஜ் குறுக்கிட்டுக் கேள்வி தொடுத்தார்.

மன்னன் அறத்தின்படி நிற்பதோடு, குற்றங்கள் இல்லாதவனாகவும் இருக்கவேண்டும் என்று அந்தக் கேள்வியும் பதிலும் திட்டமிட்டபடி நிகழ்த்தப்பட்டன. அதனூடாகப் புலிகளின் தலைவர் அறத்தின்படி நிற்கவில்லை என்பதாக வலிந்து காட்ட முனைகிறது கம்பன்கழகம். 'உறைசிறியார் உள்நடுங்கல்'என்ற குறளைத் தொட்டுக்காட்டி 'எம் இனம் படிக்கத் தவறிய குறள்' என்று பிரசாந்தன் உரத்த குரலில் கூறியதன் ஊடாக ஈழத்தமிழர்களின் அரசியல் விடுதலைப் போராட்டம் பற்றிய தவறான கற்பிதத்தை இளம் சமூகத்திடம் விதைக்க முற்படுகிறார். உறை சிறியர் என்ற குறளில் வள்ளுவர் சொல்ல வரும் தலைமைப் பண்பு, நிர்வாக ஆற்றல் என்பது மன்னர்களை மையமாகக்கொண்டது. ஆனாலும் தற்கால நவீன அரசுகளை ஆளும் ஆட்சியாளர்களுக்கு அது மிகப் பொருத்தம். சிறிய அரசு ஒன்று பெரிய அரசுக்குப் பணிந்துதான் ஆகவேண்டும். ஆகவே தற்போதைய புவிசார் அரசியல் சூழலில் 'உறைசிறியர் உள்நடுங்கல்' என்ற குறள் பொருத்தமானது. பெரிய நிறுவனம் ஒன்றின் தலைவருக்கு அதன் கீழ் பணியாற்றும் இரண்டாம் நிலை அதிகாரி பணிந்தாகவேண்டும் என்பதையும் அக் குறள் சுட்டி நிற்கிறது.

ஆனால் இன விடுதலை ஒன்றுக்காகப் போராடுகின்ற இயக்கம் ஒன்றின் தலைவன் மிகப் பெரிய எதிரிப்படைகளைக் கண்டு பணிந்தாகவேண்டும் என்று அந்தக் குறளுக்கு அர்த்தம் கொள்ள முடியாது. வள்ளுவர் காட்டும் அரசியல் என்பது மனித வாழ்க்கையிலிருந்து பிரிக்கமுடியாத ஒரு தத்துவம். கொள்கை அரசியல் என்பது வாழும் முறை (Way of life) அல்லது வாழ்க்கை முறை (Way of living) என்று குன்றக் குடி அடிகளார் விபரிக்கிறார். இதன்படி நோக்கினால் இன விடுதலைப் போராட்டம் பற்றிய புரிதல் ஏற்படும். ஒரு நாட்டின் எல்லைக்குள் வாழும் பல இனங்களின் தேசியம், மரபுரிமைகள் பற்றிய சிந்தனைகள், அவற்றை அரசுகளாக நிறுவும் உத்திகள் அரசறிவியல் கோட்பாடுகளில் உண்டு. ஆகவே தேசிய இன விடுலைச் சிந்தனைகளை உள்ளடக்கிய அரசறிவியலுக்கு மாறாகப் பிரசாந்தன், எம் இனம் படிக்கத் தவறிய குறள் என்று குத்திக் காட்டியிருப்பது கம்பன் கழகத்தின் வன்மம்.

(08 ஆம் பக்கம் பார்க்க)



## இலங்கை அரசியலும் இலங்கைத் தமிழர் உரிமைகளும் 4

பேராசிரியர் சி.பத்மநாதன்



# தமிழ்த் தலைமைகளின் பொறுப்புக்களும் பணிகளும்

எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாஸவும் இனப்பிரச்சினைக்கான தீர்வின் அவசியம் பற்றிப் பேசுகின்றார். சென்ற ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரக் கூட்டங்களில் மாகாணசபைகளுக்கு உச்சகட்ட வரம்பிலான அதிகாரங்களின் அவசியம் பற்றி அவர் சொன்னவற்றைச் சில ஊடகங்கள் பதிவு செய்துள்ளன. முன்னர் கடும்போக்காளராக இருந்த பாட்டலி சம்பிக்க ரணவக்க இப்பொழுது தேசிய நல்லிணக்கம் பற்றி வலியுறுத்திப் பேசிவருகிறார்.

இனவாதம் பேசாத கௌரவமான அரசியல்வாதிகளில் ஒருவர் டிலான் பெரேரா. அவர் தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டிய அவசியம் பற்றி இந்நாட்களில் மீண்டும் பேசுகிறார். அவருடைய கருத்துகள் , நாடாளுமன்றத்தில் தர்மலிங்கம் சித்தார்த்தனும் சுமந்திரனும் முன்வைத்த யோசனைகளுக்கு இணையானவை.

இலங்கையிலுள்ள சிறுபான்மைச் சமூகங்களைப் பொறுத்தவரையில் இது ஒரு நல்ல சமயம்; சமூக நலன்களுக்குப் பயன்படுத்த வேண்டிய தருணம். இதுமீண்டுமொருமுறை கிடைக்காது.

ஒரு ஜனநாயக அடிப்படையிலான அரசியலமைப்பிலேதான் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியும். நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமானால், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் மக்களின் நம்பிக்கையினை அரசாங்கம் பெறவேண்டும். அதைப் பெறவேண்டுமானால் அண்மைக் காலத்தில், அங்கு வாழும் மக்களுக்கெதிராக அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளையும் இன அடையாளங்களை ஒழிக்கும் நடவடிக்கைகளையும் நிறுத்த வேண்டும். அல்லாதவிடத்து அவர்கள் அரசாங்கத்துக்கு எந்தவிதமான ஆதரவினையும் செய்வதற்கு முன்வரமாட்டார்கள். அங்கு ஏற்படும் பிரச்சினைகள் அவர்களின் ஜீவாதாரம், நிலைபேறு என்பனவற்றோடு தொடர்புடையவை. அவற்றை நிறுத்துவதும் அரசாங்கத்துக்குச் சுலபமான காரியம்.



பாரதரத்னா எம்.ஜி. இராமச்சந்திரன் தந்தை செல்வாவுக்கு வழங்கும் மரியாதை

இதனைச் சொன்ன பின்பு தமிழ்த் தலைமைகளின் பொறுப்புகளையும் பணிகளையும் வலியுறுத்திச் சொல்ல வேண்டிய உரிமையும் பொறுப்பும் எமக்குண்டு. முன்னைய காலத்து அனுபவங்கள் கசப்பானவை. தவறுகளும் இருதலைப்பட்சமானவை. அவற்றைக் குறிப்பாகத் தமிழ் மக்களும் அவர்களின் பிரதிநிதிகளும் புரிந்துகொள்ளவேண்டும்.

இங்கு ஏட்டிக்குப் போட்டியாகப் பேசுவதற்கு இடமில்லை. அதன்மூலம் நாடாளுமன்ற ஆசனங்களை மேலும் மேலும் கைப்பற்றிக் கொள்ளலாம் என்ற சிந்தனைக்கு இனி இடமில்லை. பிரச்சினைகளை இழுத்தடிப்பதனால் அடையப் போவது ஒன்றுமில்லை; அதனால் உள்ளனவும் போய்விடும். குடியகல்வு, போரின் விளைவுகள் என்பவற்றால் நாட்டின் மொத்தக் குடித்தொகையில் இலங்கைத் தமிழரின் விகிதாசாரம் மிகவும் குறைவடைந்துள்ளது. அதற்கமைய நாடாளுமன்றத்திலே தமிழர் பிரதிநிதிகளின் எண்ணிக்கையும் மிகவும் பலவீனமாகியுள்ளது. 1977 ஆம் ஆண்டுத் தேர்தலில் யாழ்ப்பாண மாவட்டத்துப் பிரதிநிதிகளின் எண்ணிக்கை 10 ஆக இருந்தது. இப்பொழுதோ அது 07 ஆகிவிட்டது. இன்னும் 5 வருடங்கள் சென்றால் அது 5 ஆகிவிடலாம். இயல்பாகவே வடக்கு மாகாணம் தமிழர் வாழும் மாகாணம் என்ற நிலை முற்றாகவே மாறிவிடும். அந்தவொரு நிலை ஏற்படுமானால் அதற்கு இன்றைய தமிழ்த் தலைமைகளே காரணம் என்று வரலாற்றிலே பதிவாகிவிடும். எனவே இந்தக் காலகட்டத்திலே பேச்சுவார்த்தைக்கு அழைக்குமிடத்து அதனைத் தட்டிக்கழிப்பது பெருந்தவறாகும். அது மன்னிக்க முடியாத தவறு. அது ஒரு துரோகச் செயலாகிவிடும். எல்லோரும் ஒருங்கிணைந்து செயற்படுவதையே சமுதாயம் எதிர்பார்க்கின்றது.

பரஸ்பரமான குற்றச்சாட்டுகளும் கட்சிகளின் உள்ளக முரண்பாடுகளை வெளி நிலைப்படுத்துவதும் அவற்றின் அழிவுக்கே காரணமாகிவிடும். இந்நாள்களில் சமுதாயம் மௌனமாக இருக்கின்றபொழுதிலும் இந்தத் தவறுகளை மன்னித்துவிடும் என்ற கனவில் எவரும் இருக்கமுடியாது.

தந்தை செல்வநாயகம் எந்தச் சந்தர்ப்பத்திலும் பேச்சுவார்த்தைகளுக்கான அழைப்புகளைத் தட்டிக்கழிக்கவில்லை. தனது சமூகத்தின் இருப்பை எந்தவழியிலேனும் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தோடு அவர் அவற்றில் ஈடுபட்டார். ஆனால் அவரை எவராலும் ஏமாற்றிவிடமுடியாது. போர்க்காலத்து வழிமுறைகளை முற்றாகக்கைவிடுவது அவசியமானது. இராணுவ பலத்திற் சமநிலை ஏற்பட்டிருந்த காலத்தில் ஒரு சமஷ்டி முறையான அரசியல் அமைப்பை உருவாக்குவதற்கு அரசாங்கம் உடன்பட்டது. உண்மையில் சந்திரிகாவின் வழிநடத்தலில் உருவாக்கப்பட்ட அரசியல் திட்டத்துக்கான நகல் வரைவு ஒரு சமஷ்டி முறையிலான அரசியலமைப்பினைப் பற்றியதாகும். அதைச் சிங்கள மக்கள் எதிர்க்கவில்லை; நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கம் ஏற்படுவதற்கான பிரசாரங்களை 'சுது நெலும்' இயக்கத்தின் மூலம் அவர் பரப்புரை செய்தார். ஒரு மேதாவிலாசமான முறையில் சந்திரிகாவின் திட்டம் உருவாக்கப்பட்டது.

அதில் பிரதானமான பங்கினைக் கொண்டவரான நீலன் திருச்செல்வம் உயிரிழந்துபோக நேர்ந்தது. அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளிண்டன் அவரது மறைவினைப் பற்றி ஆற்றிய தனது நீளமான இரங்கல் உரையில் நீலன் திருச்செல்வம் மறைவால் ஏற்படக்கூடிய கெடுதிகளைத் தீர்க்கதரிசனமாகக் கூறியிருந்தார்.

முன்னர் தமிழரின் கோரிக்கைகளை நிராகரிக்கும் நோக்கத்தோடு ஒரு சர்வகட்சி மாநாட்டை ஜே.ஆர். ஜெயவர்த்தனா நடத்தினார். அதற்கு நாடாளுமன்றத்தில் இல்லாத கட்சிகளையும் [illegible] அழைத்தார். ஆனால் இப்போதுள்ள ஜனாதிபதி [illegible]மாக நாடாளுமன்றத்திலுள்ள கட்சிகளுடன் மட்டுமே பேச்சுவார்த்தைகளை நடத்துகின்றார். தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்தவரை அதன் அபிலாஷைகளை உணர்ந்தவர்களாயும் நெடுங்காலமாகப் பல பேச்சுவார்த்தைகளை நடத்தியவர்களும் , சட்டதிட்டங்களை நன்கு அறிந்தவர்களுமே நாடாளுமன்றத்தில் உள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் இங்கு வாழும் மக்களாலே தெரிவு செய்யப்பட்டவர்கள். எனவே அவர்களின் பொறுப்புகளும் பணிகளும் விசுவாசமும் அந்தமக்களுக்கே உரியனவாகும். எனவே அந்த மக்களின் அபிலாஷைகளுக்கு ஏற்ப தீர்வுகளைக் காண்பதற்கான பேச்சுகளில் ஈடுபட வேண்டும். அவர்கள் தங்கள் தேர்தல் விஞ்ஞாபனங்களுக்கு அமைவாகச் செயற்படமுடியும்.

ஏற்கனவே மாகாணசபை முறை அரசியலமைப்பின் அம்சமாகிவிட்டதால் மாகாணத்தை அடிப்படை அலகாக ஏற்றுக்கொண்டு அதற்கு உச்சகட்டமான அதிகாரங்களைப் பெற்று, அதன்வழியே உள்ளக சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக்கொள்ளமுடியும். ஜனாதிபதி சந்திரிகாவின் காலத்தில் உருவாக்கிய வரைவின் திட்டம் அவ்வாறான ஒன்றாகும்அந்தத் திட்டவரைவையும், ஒஸ்லோ பிரகடனத்தையும் அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தைகளை நடத்தலாம். அவற்றுக்கு அப்பால் எதுவும் சாத்தியப்படாது.

சாணக்கியமான முறையில் நடந்துகொள்வதானால் புதிதாக எதனையும் கேட்கக்கூடாது. இதுவரை எட்டப்பட்ட உடன்படிக்கைகளையும் அரசாங்கங்கள் தருவதாகச் சொன்னவற்றையும் அமுல்படுத்துமாறு வலியுறுத்தினால் காலத்தை வீணாக்காது ஒரு தீர்வினை அடையமுடியும். அரசியலமைப்பில் ஏற்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்தம் 1972 ஆவது ஆண்டில் உருவாக்கப்பட்ட அரசியலமைப்பில் கணிசமான மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. 1972 ஆவது ஆண்டில் இலங்கையில் ஓரினமயமாக்கத்துக்கு ஏற்றவாறு அரசியலமைப்பை உருவாக்கினார்கள். மார்க்ஸியவாதிகளும் அதில் இணைந்து கொண்டமை ஒரு வேடிக்கையாகும். இந்திய - இலங்கை (1987) உடன்படிக்கைமூலம் 1972 ஆவது ஆண்டு உருவாக்கப்பட்ட அரசியலமைப்பின் பாதகமான அம்சங்கள் நீக்கப்பட்டுள்ளன. இலங்கைத் தமிழர் ஒரு தேசியஇனம் என்பதை ஒப்புக்கொள்ளும் வகையில் அந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கையின் மூலமாக தமிழும் ஓர் ஆட்சி மொழி என்று நாடாளுமன்றத்திலே சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழ்பேசும் மக்களின் வரலாற்று வதிவிடம் என்று 1987 ஆம் ஆண்டு உடன்படிக்கையில் ஒப்புக்கொள்ளப்பட்டது. அதன் அடிப்படையில் இரு மாகாணங்களும் அடங்கிய மாகாணசபை உருவாக்கப்பட்டது.

நிலவுரிமை, பொலிஸ் அதிகாரம் உள்ளடங்கலாகப் பல பிரதானமான துறைகளில் 13 ஆம் திருத்தத்தின் மூலமாக மாகாணசபைகளுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டன. கச்சேரி நிர்வாகம், சுகாதார-மருத்துவ நிலையங்கள், கல்லூரிகள், மாநகரசபைகள், உள்ளூராட்சி நிர்வாகம் ஆகிய எல்லாம் 13 ஆவது திருத்தத்தின்படி மாகாண சபைகளின் கட்டுப்பாட்டுக்குள் அமைந்தவை. ஆனால் அரசாங்கம் கபடத்தனமாக மாகாணசபைகளுக்கு வழங்கிய பல அதிகாரங்களை கட்டங்கட்டமாகவும் சாதுரியமாகவும் அபகரித்துக் கொண்டது.

இந்தக் கேவலமான செயல்களுக்கு 1989 ஆவது ஆண்டிலே தெரிவு செய்யப்பட்ட தமிழ் நாடாளுமன்றப் பிரதிநிதிகளும் வடக்கு, கிழக்கிலுள்ள மாகாணசபையொன்றும் ஆதரவு புரிந்தமை ஒரு மிகவும் சோகமான வரலாறாகும். 13 ஆம் திருத்தத்தில் எந்தவொரு மாகாணசபையினையும் தனியாக அரசாங்கம் கலைக்கமுடியாது என்ற நிபந்தனை இடம்பெற்றிருந்தது. அது மாகாணசபைகளுக்குரிய ஒரு காப்பீடாகும். உரிய காரணங்கள் ஏற்படுமிடத்து எல்லா மாகாணசபைகளையும் ஒன்றாகவே அரசாங்கத்தினாற் கலைக்க முடியுமென்று சொல்லப்பட்டிருந்தது.

ஆயினும் ஈரோஸ் தலைமையிலான நாடாளுமன்றப் பிரதிநிதிகளின் கோமாளித்தனமான ஆதரவோடு ஜனாதிபதி பிரேமதாஸவின் அரசாங்கம் எந்தவொரு மாகாணசபையினையும் அதன் காலம் முடியமுன்னரே கலைத்துவிடக்

(05 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் கைவண்ணம்

## மாணவர்களே!

நீங்களும் உங்கள் கைவண்ணங்கள், ஆக்கங்களை அனுப்பலாம்..

அனுப்ப வேண்டிய முகவரி!
உதயன் சஞ்சீவி
இல.361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
0773165555




கு.ஆத்மிகா
தரம்- 5
யா/அச்சுவேலி ஆரம்பப் பாடசாலை.




ல.அக்சயா,
தரம்- 2
கிளி/ தருமபுரம் அ.த.க. பாடசாலை.



ஜெ.அக்சயா,
தரம்- 8
யா/ சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.



நி.ஆர்த்திகன்
தரம்4
யா/உடுவில் மகளிர் கல்லூரி



ச.லகரிகா
தரம் 7
யா/வேம்படி மகளிர் கல்லூரி

## வர்ணம் தீட்டுவோம்



## முயற்சி செய்வோம்

முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை என்று சொல்வார்கள். நம்மால் இது நிச்சயம் முடியாது என்று எண்ணும் கடினமான காரியங்களைக்கூட திரும்பத் திரும்ப விடாமுயற்சியுடன் செய்தால் கட்டாயம் வெற்றி அடைய முடியும். அது எமக்கு மேலும் நம்பிக்கையை ஊட்டும்.

தாமஸ் ஆல்வா எடிசன் சொல்கிறார், "ஒரு தோல்வி ஏற்பட்டால் மேலே முயற்சி செய்யாமல் இருப்பதுதான் எமது பலவீனமே. இன்னுமொருமுறை முயற்சி செய்து பார்ப்போமே எனும் எண்ணம்தான் வெற்றிக்கு நிச்சயமா னவை என்று. புத்தகங்களைத் தொடர்ந்து படித்து வந்தால் பல அறிஞர்களின் பொக்கிஷங்களை நம்மால் அறிய முடியும். நாம் எல்லாம் படித்து முடித்து விட்டோம் என்று எண்ணுவது சுலபம். ஆனால் கற்றது கைம்மண்ணளவுதான் என்று புத்தகச் சுரங்கங்களைத் தோண்டத் தோண்டப் புரியும்.

ஒவ்வொரு சாதனையாளரும் ஆரம்பத்தில் எவ்வளவு சோதனைகளை சந்தித்திருக்கிறார்கள்! அரசியல், ஆராய்ச்சி, இலக்கியம், இசை என்று எந்தத் துறையிலும் சரித்திரப் புகழ் பெறுவதற்கு முன்னால் எத்தனை முறை தோல்வியைத் தழுவியிருக்கிறார்கள் என்பதும் தெரியும். நமக்கு வெற்றிகள் வந்து சேர்வதற்கென்று தனியாக ஒரு நேரம் எதுவும் இல்லை. விடாமுயற்சியோடு செயல்படுகின்றவர்களிடத்தில் எந்த நேரத்திலும் வெற்றிகள் வந்து சேரும். சிகரங்கள் காத்திருக்கின்றன - சிகரங்களை எட்ட நீங்கள் தயாராகுங்கள்.

## விசிறி

ஓங்கி உயர்ந்த பனைமரமாம்
உச்சியில் ஓலைக் குருத்தழகாம்
பாங்காய் அதனைக் கொய்திடுவார்
பக்குவமாக வகிர்ந்திடுவார்

அழகாய் விசிறி கட்டிடுவார்
அலங்காரங்கள் செய்திடுவார்
ஒழுங்காய்க் கடையில் வைத்திடுவார்
ஒவ்வொன்றாக விற்றிடுவார்

மிக்க வெய்யிற் காலத்தில்
வியர்வை ஒழுகும் தேகத்தில்
மக்கள் விசிறி வாங்குவரே
மகிழ்வாய் இரவில் தூங்குவரே

### சொற்சிலம்பம் போட்டி 121 க்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

1. பகவத்கீதை 6. குண்டு 7. கூகை 8. திணி 9. கும்பம் 11.வெகுளி 13.கபடி 15. நடிகர் திலகம் 17. சைவம் 18. கவி 22. தில்லானா 23. உரை

**மேலிருந்து கீழ்**

1.பகுதி 2. கண்ணி 3. வடு 4. கீதம் 5. ஈகை 7. கூம்பகம் 9. குளிர் 10. பகலவன் 12. குகன் 14. டிம் 15. நற்கதி 16. திசை 19. வில் 20.கனா 21. இரை

## இராவணன்



இராவணன் இலங்கையை ஆட்சி செய்த அரசனாகவும், சைவபக்தனாகவும், இராமனுக்கு நேர் எதிராகவும் இராமாயணத்தில் சித்தரிக்கப்பட்ட தீயகதாபாத்திரம் ஆவார். பல ஓவியங்களில் இராவணன் பத்துத் தலைகளை உடையவனாக சித்தரிக்கப்படுகின்றார்.

இராவணனுடைய ஆட்சியின்போது இலங்கை வளமாகக் காணப்பட்டதாகவும், இராவணன் புஷ்பக விமானம் ஒன்றை வைத்திருந்ததாகவும் இராமாயணம் கூறுகின்றது. வாரியபொல - "வானோடும் களம் இறங்குமிடம்" போன்ற ஊர் பெயர்களும் இலங்கையில் உண்டு என்பது இங்கு குறிக்கத்தக்கது. இராவணன் பிராமணராகவும், சிவபக்தி மிகுந்தவராகவும் சித்த ரிக்கப் படு கின்றார். அதேவேளை, அவன் ஒரு அசுரனாகவும், அசுரர்களின் அரசனாகவும் சித்தரிக்கப்படுகின்றான். இராவணன் பற்றிய நோக்குகள் இலங்கையிலும், தமிழ்நாட்டிலும், இந்தியாவின் பிற பகுதிகளிலும் வேறுபட்டுக் காணப்படுகின்றன.

இராமனின் மனைவியான சீதையின் அழகில் மயங்கிய இராவணன், சீதையை இலங்கைக்குக் கடத்திச்சென்று சிறை வைத்ததாகவும், அதனால் இராமன் படைத்திரட்டி இராவணனுடன் போரிட்டு சீதையை மீட்டதாகவும் இராமாயணத்தில் கூறப்பட்டுள்ளது. மண்டோதரி, வேதவதி, ரம்பா ஆகியோர் இவரின் மனைவியர்கள். அவன் ஆண்ட இலங்கையின் அழகையும், அங்கிருந்த மக்களின் செழிப்பான நிலையையும், கலைகள் ஓங்கியிருந்த சூழலையும் கம்பன் வர்ணித்திருக்கும் விதத்திலிருந்தே தெரிந்து கொள்ள முடியும். இராமாயணத்தில் இராவணனுக்குப் பத்துத் தலைகள் கொண்டவனாகவும் சித்தரிக்கப்படுகிறது. இங்கே பத்து தலைகள் என்பது பத்து துறைகளில் தலைசிறந்தவனாக இராவணன் இருந்தான் என்பதுவாகும். அவன் சிறந்த வீணை வித்துவான், சிறந்த சிவபக்தன் எனக் கூறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)



# தமிழ்த் தலைமைகளின்...

கூடிய அதிகாரத்தைச் சட்டத்தின் மூலம் பெற்றுக்கொண்டது. அதன் பின்பு ஈரோஸ் குழுவினர் நாடாளுமன்றம் செல்வதை நிறுத்திக்கொண்டனர். தமிழரின் அரசியல் தலைமை மீண்டும் எழுச்சி பெறுவதைத் தடுக்கும் நோக்கத்தோடுதான் அவர்கள் தேர்தலில் பங்குபற்றினார்களா? என்ற வினா இயல்பாகவே எழுகின்றது.

நிலங்கள் தொடர்பாக மாகாணசபைக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை 'திவிநெகும' சட்டமூலம் அரசாங்கம் அபகரித்துவிட்டது. கிழக்கு மாகாணசபையின் ஆதரவைப் பெற்றமையால் அதனைச் சாதிக்க அரசாங்கத்தால்முடிந்தது. இவை எல்லோரும் கற்றுக்கொள்ள வேண்டிய பாடங்கள். இதனாலே தான் எந்தவொரு தீர்வுத் திட்டம் ஏற்படுமிடத்தும் வழங்கப்படும் அதிகாரங்கள் நிரந்தரமானவையாக, மீளப்பெறமுடியாதனவாக இருக்கவேண்டும் என்பதை சம்பந்தன் வலியுறுத்தி வருகின்றார்.

13ஆம் திருத்தச் சட்டத்திலே பலவீனங்கள் உண்டென்பது அரசியல்வாதிகள் பலரும் அறிந்த விடயம். இலங்கை அரசாங்கங்களும் ஒப்புக்கொண்ட விடயம். இதனைத் தமிழர் விடுதலைக் கூட்டணியினரே முதன்முதலாகவும் ஆணித்தரமாகவும் வலியுறுத்தினார்கள். அதனை ராஜீவ் காந்தியும் ஒப்புக்கொண்டு, அவற்றை நீக்குவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். அதனால் முழுமையான சுயாட்சி அதிகாரங்களை தமிழர்களுக்கு வழங்குவதற்குத் தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டன என்று விடயமறிந்தவர்கள் சொல்கிறார்கள். ஆனால் அந்த ஏற்பாடுகளிற் சம்பந்தப்பட்ட ராஜீவ் காந்தி, ஜனாதிபதி பிரேமதாஸ, அமிர்தலிங்கம் ஆகிய மூவரும் அதன்பின் அதிக காலம் வாழமுடியவில்லை. அண்மைக்காலத் தமிழர் வரலாறு ஒரு கறைபடிந்த வரலாறு. அதைப் புரிந்து கொள்ளாதவிடத்து எதுவிதமான விமோசனங்களும் கிடைக்கப்போவதில்லை. அந்தக் கறைகளும் வரலாற்றுப் பதிவுகளிலிருந்தும் நீக்கப்படமுடியாதவை.

பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், கலாநிதி நீலன் திருச்செல்வம் ஆகியோர் இணைந்து உருவாக்கிய அரசியலமைப்புத் திட்ட வரைவில் 13 ஆம் திருத்தச் சட்டமூலத்தில் உள்ள குறைபாடுகளை முற்றாக நீக்கும் அம்சங்கள் இணைக்கப்பட்டிருந்தன. நிறைவேற்றுஅதிகாரம் ஆளுநரிடமிருந்து மாகாணசபைக்கும் அதன் முதலமைச்சருக்கும் மாற்றப்படவேண்டும் என்று சொல்லப்பட்டிருந்தது. அதிகாரங்கள் தொடர்பாக 13 ஆவது திருத்தத்தில் நிரல்படுத்தப்பட்டிருந்த பொதுப்பட்டியலில் அடங்கிய விவகாரங்கள் தொடர்பான அதிகாரங்களும் மாகாணசபைகளுக்கே வழங்கப்படவேண்டுமென்றும் சொல்லப்பட்டிருந்தது.


மேலும் சில முக்கியமான விடயங்கள் அதில் அடங்கியிருந்தன. இலங்கையென்பது பிராந்தியங்கள் இணைந்த ஒன்றியமான, பிளவுபடாத நாடு என்றும் சொல்லப்பட்டிருந்தது. அத்துடன் இறைமை அதிகாரம் ஜனாதிபதி, நாடாளுமன்றம், பிராந்தியசபைகள் என்ற அடிப்படையிலே பகிரப்பட்டிருக்கும் என்றும் சொல்லப்பட்டது. அந்த வரைவு மேதாவிலாசமான சிந்தனைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஒன்றாகும். உத்தேசமான பிராந்தியங்களின் அதிகாரங்களும் இந்திய மாநிலங்களுக்கு உரியவற்றைக் காட்டிலும் சில அம்சங்களில் மேலானவை. அவை தமிழ்பேசும் மக்களின் அபிலாஷைகளை பெருமளவுக்கு நிறைவு செய்யக்கூடியனவாகவும் உள்ளன.

இப்பொழுது பேச்சுவார்த்தைகளில் அந்தத் திட்டத்தினையே இலக்காகக் கொண்டு நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். ஆனால் இப்பொழுது தமிழர் சமுதாயம் மிகவும் பலவீனமான நிலையில் உள்ளது என்பதையும் உணர்ந்து கொள்ளவேண்டும். ஊடகங்களும் , அவற்றிலே பத்திகளை எழுதுவோரும், தனிநபர்களும் நிதானமும் பொறுமையும் கடைப்பிடிப்பது காலத்தின் கட்டாயமாகும். சமூகத்தின் நலனும் வாழ்வாதாரங்களும் அடிப்படையான உரிமைகளும் எல்லாவற்றிலும் மேலானவை என்ற சிந்தனையோடு செயற்பட வேண்டிய காலம் வந்துள்ளது.

பேச்சுவார்த்தைகள் மூலம் அடையப்படும் தீர்வு இந்திய-இலங்கை உடன்படிக்கையினைக் கவசமாகக் கொள்ளவேண்டும். தமிழர் தரப்பு அதை ஓரங்கட்ட முற்பட்டால் அது கடற்பிரயாணத்தில் தாம் செல்லும் ஓடத்தை உடைப்பது போலாகிவிடும். எல்லாப் போராளிக் குழுவினரது தலைவர்களினதும் அரசியல் தலைவர்களினதும் கையெழுத்து மூலமான ஒப்பிதங்களைப் பெற்ற பின்பே இந்திய அரசாங்கம் உடன்படிக்கையை ஏற்படுத்தி, அதில் இந்திய அரசாங்கத்தின் சார்பில் இந்தியப் பிரதமர் கையெழுத்திட்டார். அதுவும் இலங்கைத் தமிழரின் சார்பிலேயே அவர் கையெழுத்திட்டார். எனவே, அதில் அடங்கிய நிபந்தனைகளை நிறைவேற்றும் பொறுப்பு இந்திய அரசாங்கத்துக்கும் உண்டு. இதனால் இந்தியாவோடு பகை உணர்வுகளை வளர்த்துக்கொள்வதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டிய கடப்பாடு எம்மவர்களுக்கு உண்டு.

தமிழர் சமுதாயம் பரத கண்டத்திலுள்ள புராதன சமுதாயங்களில் ஒன்று: இலங்கைத் தமிழ்பேசும் மக்களின் வரலாறும், பண்பாடும், உற்பத்தியும் அநாதியானவை. அதனால் இந்தப் பிராந்தியத்தில் உள்ள மக்களின் இருப்புக்கும் பாதுகாப்புக்கும் பாதகமான செயல்களைத் தவிர்த்துக் கொள்வதும் எமது பொறுப்பும் தலையாய கடமையும் ஆகும். அதுவே வரலாற்று நியதியுமாகும்.

(முற்றும்)



ந.பரமேஸ்வரன்

# தேவையா இந்தத் தேர்தல்?

உலகம் முழுவதும் இலங்கை பிச்சை எடுத்துக்கொண்டிருக்கையில் பத்து பில்லியன் ரூபா செலவு செய்து உள்ளூராட்சித்தேர்தல் நடத்த வேண்டுமா? என்ற வாதப் பிரதிவாதங்கள் தற்போது இலங்கை அரசியல் அரங்கில் முன்வைக்கப் பட்டு வருகின்றன. ஜே.வி.பி உட்பட எதிர்க்கட்சிகள் அனைத்தும் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படவேண்டும் என ஒற்றைக்காலில் நிற்கின்றன. உள்ளூராட்சித்தேர்தலை நடத்தியே தீர வேண்டும் என அரசாங்கத்தை வலியுறுத்துவதற்கு இவர்கள் கூறும் காரணம் 'நாட்டைக் குட்டிச்சுவராக்கிய ரணில்,ராஜபக்ச ஆட்சியை வீட்டுக்கு அனுப்பவேண்டுமாம்'.

ரணில்,ராஜபக்ச ஆட்சியை ஒழித்துக்கட்டினால் சிறிலங்காவில் பாலாறும் தேனாறும் ஓடுமா? என்று கேட்டால் அதற்கு இல்லையென்றே அனைவரும் பதிலளிப்பர். அப்படியானால் எதற்காக பத்து பில்லியன் ரூபா .செலவு .செய்து உள்ளூராட்சித்தேர்தலை நடத்தவேண்டும் ? ஜனதிபதித் தேர்தல், நாடாளுமன்ற தேர்தல் என்பன நடைபெறவுள்ள நிலையில் அவை இரண்டுக்குமான பிரசார அத்திபாரமாக விளங்குவது உள்ளூராட்சிக் கட்டமைப்பே.

ஒரேயொரு விடயம் மட்டும் தெளிவாகத்தெரிகிறது. தமிழ் முஸ்லிம் அரசியல்வாதிகள் உட்பட எந்தவொரு அரசியல்வாதிக்கும் நாட்டு நலனிலோ , மக்கள் நலனிலோ அக்கறை இல்லை. ஒரு பலமான உள்ளூராட்சிக் கட்டமைப்பு இருந்தால்தான் எந்தவொரு தேர்தலிலும் வெற்றி பெறமுடியும். அதற்காகவே அனைவரும் உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென ஒற்றைக்காலில் நிற்கின்றனர். உள்ளூராட்சித் தேர்தலால் யாருக்கு என்ன பயன்? 2023 ஆம் ஆண்டு அந்நியச்செலாவணி இருப்பு 2022 ஆம் ஆண்டை விட மோசமாக இருக்குமென எதிர்வு கூறப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் உள்ளூராட்சி உறுப்பினர்களின் பங்கு என்ன? இவர்களால் நாடாளுமன்ற அரசியலில் தாக்கம் செலுத்த முடியுமா? இல்லவே இல்லை.மாறாக இவர்கள் தமது எஜமானர்களின் விசுவாசிகளாகவே இருப்பர்.

உண்மையில் உள்ளூராட்சிகளில் கல்வியியலாளர்கள், மகளிர் அமைப்புகள்,சிறந்த நிர்வாகிகள், விவசாய, மீன்பிடி அமைப்புகள் போன்ற பொது அமைப்புகளின் பங்குபற்றுதலுடனான ஒரு கட்டமைப்பு உருவாக்கப்பட வேண்டும். இந்தக் கட்டமைப்பினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களை உள்ளூராட்சி மன்றங்கள் நடைமுறைப்படுத்தவேண்டும். ஆனால் எமது நாட்டில் அப்படி நடக்கிறதா? எமது நாட்டில் பணமும் அரசியல் அதிகாரமுமே நிர்வாகம் செய்கின்றன. கொள்கைரீதியான தீர்மானங்கள் மூடிய அறைக்குள்ளேயே மேற்கொள்ளப்படுகின்றன.உண்மையிலேயே இவர்கள் நாட்டை நேசிக்கிறார்களா அல்லது படுகுழியில் தள்ளப்பார்க்கிறார்களா?

இம்முறை உள்ளூராட்சித்தேர்தலுக்காக பத்து பில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது. ஆனால் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டத்தில் நலிவுற்றோருக்கான ஒதுக்கீடாக 43 பில்லியன் ரூபாவே ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் சமுர்த்தி நிவாரண கொடுப்பனவுக்கு 23 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. உள்ளாட்சித் தேர்தலுக்காக செலவிடப்படவுள்ள பத்து பில்லியன் ரூபா , மூன்று மாதங்களுக்கு நலிவுற்றோர் நிவாரணம் வழங்குவதற்கு அல்லது ஆறு மாதங்களுக்கு சமுர்த்தி நிவாரணம் வழங்குவதற்கு போதுமானது. பாடசாலை மாணவர்களுக்கான மதியபோசனக் கொடுப்பனவு அறுபது ரூபாவிலிருந்து நூற்றியிருபது ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சர் தெரிவித்துள்ளார். பாடசாலை மாணவர்களுக்கான மதியபோசனக் கொடுப்பனவுக்கென நான்கு பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது; தேர்தல் செலவினமான பத்து பில்லியன் ரூபாவில் பாடசாலை மாணவர்களுக்கான மதியபோசனக் கொடுப்பனவை இரண்டு மடங்காக அதிகரிக்கலாம். பாடசாலை மாணவர்களிடையே ஊட்டச்சத்துக் குறைபாடு அதிகரித்து வருவதாக 'யுனிசெப்' தெரிவிக்கின்றது. பாடசாலை மாணவர்களுக்கான மதியபோசனக் கொடுப்பனவை

> உள்ளூராட்சித் தேர்தலால் யாருக்கு என்ன பயன்? 2023 ஆம் ஆண்டு அந்நியச்செலாவணி இருப்பு 2022 ஆம் ஆண்டை விட மோசமாக இருக்குமென எதிர்வு கூறப்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தில் உள்ளூராட்சி உறுப்பினர்களின் பங்கு என்ன? இவர்களால் நாடாளுமன்ற அரசியலில் தாக்கம் செலுத்த முடியுமா? இல்லவே இல்லை. மாறாக இவர்கள் தமது எஜமானர்களின் விசுவாசிகளாகவே இருப்பர்.


அதிகரிப்பதன் மூலம் ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்கலாம். பாடசாலை மாணவர்களுக்கான பாடநூல்களை அச்சிடுவதற்கென சீனா 4.5 பில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது. பத்து பில்லியன் ரூபாவில் பாடசாலை மாணவர்களுக்கான பாட நூல்களை அச்சிடுவதுடன் மாணவர்களுக்கான சீருடைகளையும் வழங்கலாம் . இவற்றைப்பற்றி எந்த அரசியல்வாதியாவது சிந்திக்கிறார்களா? சிந்திப்பார்களா? உள்ளூராட்சித்தேர்தலை நடத்தி அதை ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்தி வரப்போகும் தேர்தல்களில் அதிகாரத்தை கைப்பற்றுவதே இவர்கள் அனைவரினதும் நோக்கம். உள்ளூராட்சித்தேர்தல் நடைபெற்றாலென்ன , நடைபெறாவிட்டாலென்ன , மக்கள் தமது அன்றாட தேவைகளுக்காக வீதிகளில் இறங்குவது மட்டும் தொடர்கதையாக நீடிக்கப்போகிறது என்பது மட்டும் உறுதியாகத்தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
19 பெப்ரவரி 2023

# நேர்கோணல் 9

## கடவுள்



> கனவுகளின் தன்மைக் கேற்ப கட்டணங்கள் மாறுபடும். கறுப்பு வெள்ளைக் கனவுகளுக்கு குறைந்த கட்டணமும் வண்ணக் கனவுகளுக்கு அதிக கட்டணமும் அறவிடப்படும். நீங்கள் கனவு காண விரும்பினால், மேலதி விபரங்கள் தரப்படும்.

○ இராகவன்

இதென்ன மாயம். இன்னொரு வானதூதனா? இது நிகழும் என ஒரு போதும் எமக்கு சொல்லப்பட்டிருக்கவில்லையே 'அங்கே குழுமி இருந்தோர் ஆளுக்காள் பரபரத்துக் கொண்டனர். இப்போது பாதிரியார் திருவாய் மலந்தார்.

'இதை மகிமைப் படுத்திக் கொள்ள வேண்டியதில்லை. நாங்கள் எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர் ஏற்கனவே வந்திறங்கி விட்டார். இப்போது காண்பது வெறும் மாயத் தோற்றம். இதைப் பொருட்படுத்திக் கொள்ள வேண்டியதில்லை. வழக்கமாக நிகழ்வது போன்று இதுவும் சாத்தானின் கைங்கரியம் தான். இது குழப்பத்துக்குள்ளாகி விடக் கூடிய தருணம். அதனால் குழப்பமடையாது இருங்கள். தொடர்ந்து நிறைவேறவுள்ளவற்றின் மீது நமது புலன்களைச் செலுத்துவோம் ' அந்த திருவாய் மலர்ந்ததினால் ஏமாற்றம் அடைந்தவன் நான் மட்டும் தான். மெய்யான வான தூதர் கூட இதைத்தான் எதிர்பார்த்து வந்திருந்தேன் என்பதைப் போல கைகளைக் கட்டிக் கொண்டு, புன்னகைத்தபடி ஒதுங்கி நின்று என்னைப் பார்த்தார். நான் அடுத்து என்ன செய்வதென புலப்படாத நிலையில், குழம்பிப் போய் உட்கார்ந்திருந்தேன்.

'தொடர்ந்து நாம் வான தூதரனவர் மேன்மை நிறைந்த வாக்குத் தத்தங்களால் இச்சபையை மகிமைப் படுத்திக் கொள்ள வேண்டும் என எல்லோர் சார்பாகவும் மன்றாடுகிறேன்' பாதிரியார் மீளவும் தொடங்கினார் அப்போது தான் சிறு பொறி தோன்றி மறைந்ததென ஒரு யுக்தியை பிரயோகிக்கத் தோன்றியது.

'நீங்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, நான் மேன்மை நிறைந்த வாக்குத் தத்தங்களை முன்வைத்து, இச்சபையை மகிமைப்படுத்திக் கொள்வதற்கு முன்பாக, இப்போது வானத்திலிருந்து இறங்கியவரோடு, தனிமையில் சில வார்த்தைகள் பரிமாறிக் கொள்ள விருப்பப்படுகிறேன்' என்று சொன்னேன். அதற்கு எவரும் மறுத்துப் பேசவில்லை. நான் அவரை நெருங்கி, 'நீங்கள் தான் மெய்யான வானதூதர் என்பதை நான் மறிக்கவில்லை. இங்கே நீங்களே வானதூதராக இருந்து மகிமைப்படுத்துங்கள். என்னை இங்கிருந்து வெளியேற்றத் தகுந்த ஏற்பாட்டை மட்டும் செய்து தாருங்கள் அது போதும். ஏற்பாடென்றால் அதிகமேதுமில்லை. குறைந்த பட்சம் உங்களது சிறகுகளையாவது எடுத்து எனக்குப் பொருத்தி விட்டாலே நான் இங்கிருந்து வெளியேறிவிடுவேன்' என்று அவர் காதில் கிசுகிசுத்தேன்.

'தங்கள் ஆதரவுக்கு நன்றி. மன்னிக்கவும். நான் உங்களுக்கு உதவ முடியாத நிலைமையிலுள்ளேன். எனது சிறகுகளை அகற்றி உங்களுக்குப் பொருத்துவதற்கான ஏற்பாடேதுமில்லை. இதை நான் மட்டுமே பாவித்துக் கொள்ளலாம். இப்போது எனக்கு இரண்டே இரண்டு மாற்றுவழிகள் தானுண்டு. முதலாவது இங்கே தங்கியிருப்பது. இங்கே தங்கினால் சிறகுகள் மறைந்து விடும். இரண்டாவது இங்கிருந்து வந்த வழியே திரும்பிச் செல்லுதல். திரும்பிச் செல்லத் தீர்மானித்தால், சிறகுகள் நிலைத்திருக்கும். இங்கிருப்பவர்கள் என்னை ஏற்றுக் கொள்ளாததால், நான் இங்கே தங்கியிருக்க இயலாது. ஆதலால் வந்த வழியே திரும்பிச் செல்லத் தீர்மானித்து விட்டேன். நீங்கள் வெளியேறிச் செல்வதைத் தாமதப்படுத்தினால் வேறேதும் மாற்று வழி கிடைக்கலாம்' எனக் கூறிக் கொண்டே செங்குத்தாக மேற்கிளம்பிப் பறந்து போனார்.

எனக்கு அங்கிருந்து வெளியேறுவதற்குக் கிடைத்திருந்த கடைசி வாய்ப்பையுமிழந்து, ஏமாந்து போய் நின்று கொண்டிருந்தேன்.

'நமக்கு வாய்த்திருக்கும் வானதூதுவர் எந்தளவுக்கு மகிமையுள்ளவர் என்பதை நேரில் பார்த்த சாட்சியாளர்களானோம். சாத்தானின் கைங்கரியத்தை முளைவிடும் போதே தனது நுட்பமான இரகசிய வார்த்தைகளால் தோற்கடித்து விட்டதைக் கண்டு, நாங்கள் அதிசயப்படத் தேவையில்லை. நாங்கள் எது நிகழப் போகிறதென எதிர்பார்த்திருந்தோமோ அதுவே நிகழ்ந்திருக்கிறது. இனித் தொடர்ந்தும் நாங்கள் எதிர்பார்த்ததெல்லாம் உள்ளபடியே நிறைவேறும் என்பதற்கான ஓர் இனிய தொடக்கமிதுவெனக் கொள்வோம்' எனப் பாதிரியார் தொடர்ந்துரைக்கலானார். அதைக் கேட்டதும் எனக்குச் சிரிப்பு வந்தது. ஆனால் சிரிக்கவில்லை. சிரித்தால் அதற்குமொரு விளக்கவுரையாற்ற அவர் தயங்க மாட்டார். இப்போது நான் மத்தளத்தின் நிலையிலிருந்தேன். நான் எனது நிலைப்பாட்டை எடுத்துக் கூறினாலும், அவர் அதற்கு உள்ளார்ந்தம் கற்பிப்பார். வாய் மூடி மௌனமாக இருந்தாலும், உள்ளார்ந்தம் கற்பிப்பார். அங்கிருந்து வெளியேறுவதற்கு, உடனடி மார்க்கமேதும் தென்பட்டிராத நிலையில், 'நான் உறங்குவதற்கு, ஏற்பாடு செய்யுங்கள்' என்று சொன்னேன். என்னை அமரச் செய்த இருக்கையை விரித்துப் படுக்கையாக்கி எனக்கு முன்பாகக் கொண்டு வந்து வைத்து விட்டுப் பாதிரியார் உட்பட அனைவரும் முழந்தாளிட்டுச் சிலுவை போட்டுக் கொண்ட பின்பாக அங்கிருந்து, வெளியேறிச் சென்றார்கள். நான் உறங்கப் போனேன். அந்தப் படுக்கையிலேறியதுமே நித்திரை மயக்கம் வந்து கண்ணயர்ந்து விட்டேன். மேலுயர்ந்து பறப்பது போல இடைக்கிடையே தோன்றியது. அதுவொரு மாயக் கற்பிதம் எனக் கருதினேன் .

சில மணி நேரங்கழித்து, நான் கண் விழித்தபோது, ஓர் அங்காடிக்குள்ளிருப்பதாக தெரிந்தது. மேலுயர்ந்து பறப்பது போல எனக்கு தோன்றியதெல்லாம் மாயக் கற்பிதமேயல்ல. பறந்து தான் இங்கே வந்திருக்கிறேன் என்பது போல் தெளிவானது. இப்போது நான் வான தூதனில்லை என்பதால் நிம்மதியடைந்தேன். படுக்கையைச் சுருக்கி இருக்கையாக்கினேன். என்னையொருவரும், உற்று நோக்கி பேசிக் கொண்டிருக்கின்றனரா? என அக்கம் பக்கம் பார்த்தேன். அப்படியேதும் நிகழ்வதாகத் தோன்றவில்லை. இருக்கையிலமர்ந்து, நானுமொரு வியாபாரி போலப் பாவனை செய்து கொண்டு வேடிக்கை பார்க்கத் தொடங்கினேன்.

பருத்த உடல் கொண்ட நடுத்தர வயதுடைய வழுக்கத் தலையர் ஒருவர், என்னை நெருங்கி வெட்டி வெட்டி முழித்தபடியே 'ஓர் உறங்கலிருக்கை என்ன விலை? 'எனக் கேட்டார். அப்போது தான் நான் உறங்கலிருக்கைகள் விற்பனை செய்யும் பகுதிக்குள் அமர்ந்திருப்பதை உணர்ந்தேன். நான் அவருக்குப் பதில் சொல்வதற்கிடையில், முகக்கவசமணிந்த அழகிய கண்களைக் கொண்ட செந்நிற மேனிப் பெண்ணொருத்தி எனக்குப் பின்னாலிருந்து, வந்தாள். உறங்கலிருக்கைக்கு விலை கேட்டு வந்தவரிடம் 'இவ்விருக்கைகள் விற்பனைக்கானவையல்ல. கனவு காண விரும்புபவர்கள் கட்டணம் செலுத்திப் பயனடையலாம். கனவுகளின் தன்மைக்கேற்ப கட்டணங்கள் மாறுபடும். கறுப்பு வெள்ளைக் கனவுகளுக்கு குறைந்த கட்டணமும் வண்ணக் கனவுகளுக்கு அதிக கட்டணமும் அறவிடப்படும். நீங்கள் கனவு காண விரும்பினால், மேலதி விபரங்கள் தரப்படும். விரும்பாவிடின், அடுத்த காட்சியறைக்குச் செல்லுங்கள் அங்கே தான் விற்பனைக்கான இருக்கைகள் வைக்கப்பட்டுள்ளன 'எனச் சொன்னாள். அந்நபர் சற்றுநேரம் நின்று கொண்டிருந்து விட்டு, எதுவும் சொல்லாமல் போய் விட்டார். அவளது குரலைக் கேட்டதும், எனக்குத் தைலமிட்டவள் அவள் தான் என்பது புரிந்தது.

'என்னை அங்கிருந்து விடுவித்தமைக்கு உளமார்ந்த நன்றி' என்று அவளிடம் மெதுவாகச் சொன்னேன்.

'எது நிறைவேற வேண்டியிருந்ததோ அது தான் நிறைவேறியுள்ளது. என்னால் ஆகியிருக்கக் கூடியது ஏதுவும் இல்லை. இங்கிருக்கும் இருக்கைகள் நிரம்பும் வரை நாமிருவருமே இங்கிருந்து வெளியேற முடியாது எனும் மேலதிக தகவலையும் இத்தருணம் உமக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதுவரை உமக்கு விருப்புடைய செயற்பாடுகளை மேற்கொள்ளலாம் 'என்றாள். எனக்கு விருப்பமான செயற்பாடுகள் என இப்போது எதுவும் இல்லை. இங்கிருந்து வெளியேறுவவைதைத் தவிர அவளிடம் நான் எதுவும் சொல்லவில்லை. அதிசயிக்கத்தக்க ஏதேனும் ஒரு மாற்றம் நிகழும் வரை பொறுமையுடன் காத்திருப்பது எனத் தீர்மானித்தேன். அத்தருணத்திலே யாரோ சிரிப்பதைக் கேட்டேன். சுற்றும் முற்றும் பார்த்தேன், யாரும் இல்லை. சற்று நேரத்தின் பின்பாக நான் அமர்ந்திருக்கும் இருக்கையின் கீழே தான் அந்தச் சிரிப்பொலி கேட்கிறது என்று உணர்ந்தேன். குனிந்து பார்த்தேன் .

அந்தச் சிரிப்பொலி நின்று விட்டது. இருக்கையின் நான்கு கால்களும் நான்கு பதுமைகளாக வடிவமைக்கப்பட்டிருப்பதை அப்போது தான் கவனித்தேன். தொடர்ந்து என்ன நிகழ்கின்றது என்பதை அவதானிப்பதற்காக, நிமிந்து உட்கார்ந்தேன். சற்று நேரம் அமைதியாகக் கழிந்தது. பின்னர் அந்த நான்கு பதுமைகளுக்குமிடையில் உரையாடல் தொடங்கியது.

(தொடரும்)

பள்ளி முன் வெளியில்
பட்டங்கள் ஏற்றியதும்...
எருக்கலைப் புதர்களிடை
மிதிவண்டி செலுத்தியதும்...
ஆட்டுக்குப் புல் தேடி
தோட்ட வழி திரிந்ததுவும்...
பொன்வண்டுகள் பிடிக்க
கிளுவை பல கண்டதுவும்...
மித்திரன் பத்திரிகை
கதை படிக்கத் துடித்ததுவும்...
வானொலியே துணையாக
பாயிருந்து படித்ததுவும்...
தென்னை மட்டை கொண்டு
துடுப்பாட்டம் செய்ததுவும்...
ரியூட்டறியே அறியாமல்
வாசித்துக் களித்ததுவும்...
இப்போது நினைக்கையிலே
இனிக்கிறதே மனமே!




### இனிக்கின்ற இளமை...!

இரா.ஜெயக்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோகுலராகவன்



# மறதி

வயது ஏற ஏற , ஞாபகமறதி ஒரு பிரச்சினையாகி விடுகின்றது . நானும் இதற்கு விதிவிலக்கல்ல. இதில் முக்கியமான இடம் வீட்டுக்கு பொருள்கள் வாங்கும் கட்டம்தான்.

துண்டு எழுதி கொடுத்து விட்டு மேலதிகமாக ஒரு பொருள் வாங்கி வரச்சொன்னால் அது நிச்சயமாக வாங்க மறந்து போயிருக்கும். இது பலரது பிரச்சினையாக இன்று உருமாறி இருக்கிறது. எனக்குத் தெரிந்த கல்விமான் ஒருவர் மனைவியுடன் மோட்டார் சைக்கிளில் யாழ்ப்பாணத்தில் உள்ள புடைவைக் கடைக்குப் போனார். மனைவி புடைவைக் கடைக்குள் போய் விட, இவர் பஸ் நிலையத்தில் காத்திருந்தார்.


அந்த நேரத்தில் இவரது ஊருக்கான பஸ் புறப்பட்டிருக்கிறது. ஓடிப்போய் பஸ்ஸில் ஏறி, வீடு போய் சேர்ந்து விட்டார்.

வீட்டில் புதுச் சட்டை வரும் என காத்துக்கொண்டிருந்த மகள் தாயில்லாமல் தனித்து வரும் தந்தையைக் கண்டு திகைத்துப் போய்

"அப்பா . அம்மா எங்கே ?" என்று கேட்டபோதுதான் இவருக்கு மனைவியோடு மோட்டார் சைக்கிளில் புடைவைக்கடைக்குப் போன ஞாபகம் வந்தது.

மீண்டும் பஸ்பிடித்து, நகருக்கு வந்து, மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு, மனைவியைத் தேடிப்பிடித்து ஏற்றிக்கொண்டு வீடு வந்தார்.

ஞாபக மறதிக்கு பிரதான காரணம் வயது ஏறும்போது மூளையின் கலங்கள் முதிர்ச்சி அடைதல் என்கிறார்கள். பதினேழு வயதின் ஞாபக சக்தி எழுபது வயதில் நிச்சயமாக இருக்கப் போவதில்லை. ஆனாலும் அதிக தூக்கமின்மை ஞாபகசக்தியைக் குறைக்க வாய்ப்பிருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. மனிதன் ஆறு மணி நேரத்திற்கு மேல் தூங்கி எழ வேண்டும், இது மூளையை சமநிலைப்படுத்த அவசியம்.



## இருந்து கதைப்பம்

அதிக மன அழுத்தமும் ஞாபக மறதிக்கான இன்னொரு காரணம் என்கிறார்கள . குழந்தைகளின் அதிக ஞாபக சக்திக்கு காரணம் அவர்களை இத்தகைய மன அழுத்தங்கள் பாதிப்பதில்லை. கீழ்மட்ட ஊழியர்கள் மன அழுத்தத்துக்கு உட்பட வாய்ப்பு குறைவாகவே உள்ளது. ஏனெனில் அவர்கள் மறுநாள் தமது பணிகளை புதிதாகவே தொடங்கி வேலை செய்கின்றனர். இதனால் அவர்கள் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கத் தேவையில்லை. ஆனால் மேல் நிலை ஊழியர்கள் பொறுப்பு வாய்ந்த தன்மையால் அதிக மன அழுத்த நிலையை எதிர்நோக்குகின்றனர். இதனால் அதிகளவு மன அழுத்தம், மேல்மட்ட ஊழியர்களிடம் ஞாபகமறதியை அதிகரிக்க செய்கின்றது.

குடும்பங்களில் காணப்படும் குடும்ப வன்முறைகள் குடும்ப உறுப்பினர்களின் மத்தியில் மன அழுத்தங்களை உருவாக்குவதால் ஞாபகமறதி அதிகரிக்க வாய்ப்பு இருக்கவே செய்கின்றது. கல்வியில் பின்தங்கி இருக்கும் பல மாணவர்களின் குடும்பப் பின்னணி அவர்களுக்குச் சாதமாக இருக்கிறதா? என்பதை ஆராய வேண்டியது இப்போது அவசியமாக உள்ளது .ஆனால் இதில் அதிகமாக அக்கறை செலுத்துவதற்கேற்ற கல்விப்பொறிமுறை இலங்கையின் பாடத்திட்டத்தில் இருப்பதாகத் தோன்றவில்லை. அநேகமாக ஆசிரியர்கள் தமது தன்னார்வச் செயற்பாடுகளால் இவற்றைத் தீர்க்க முயல்கின்றனர். ஆனால் இது எல்லா மாணவர்களுக்கும் கிடைப்பதில்லை. இதனாலேயே ஞாபகமறதிக்கான பிரதான காரணமாக மனஅழுத்தமே பலரால் முன்வைக்கப்படுகின்றது.

சாதாரணமாக கிராமப்புறங்களில் இருக்கும் வயது முதிர்ந்தவர்களின் ஞாபக சக்தி ஆச்சரியப்படும் விதத்தில் நீடித்திருப்பதை அவதானிக்க முடியும் . அவர்களது தெளிந்த வாழ்க்கை முறை இதற்குக் காரணமாக இருக்கும்.

2000 ஆண்டாக இருக்கவேண்டும்.

கிட்டத்தட்ட எண்பது வயது மதிக்கத்தக்க வயதில் ஒரு புராணிகரான புண்ணியமூர்த்தி அவர்களை (இத்தாவில், வேம்பொடுகேணி - பளை) சந்தித்த போது அவரது ஞாபகசக்தி ஆச்சரியமாக இருந்தது. அந்த வயதிலும் கந்தபுராணத்துக்கு பயன் சொல்வதில் அவருக்கு தடை எதுவும் இருக்கவில்லை. இந்த இடத்தில் முதுமை ஞாபகமறதியைக் கொண்டு வரும் என்பது நியாயமற்றதாகி விடுகிறது. அவர் கிட்டதட்ட அனைத்து புராணங்களுக்கும் பயன் சொல்லக்கூடிய வல்லமையுடன் இருந்தார். அவர் 2009 இல் வன்னியில் காணாமல் அல்லது காலமாகி இருப்பார். ஞாபக மறதியை குறைக்க நிறைய பயிற்சிகள் செய்தால் ஓரளவு நன்மை கிடைக்கும்.

நண்பர் ஒருவர் வழியில் கண்டால் கைமாற்றாக யாரிடமும் பணம் கேட்கும் பேர்வழி .

ஒருநாள் சொன்னார் .

"ஞாபக மறதி கூடிப் போச்சடப்பா"

"அப்படியோ?"

"ஆராரிட்ட கடன் வாங்கினன் எண்டு ஞாபகம் இல்லாமல் போட்டுது"

"உண்மையாயோ?"

"ஓமடா, பெரிய கடன்கள் ஞாபகமாக் கிடக்கு. சின்னச் சின்னக் கடன்கள் எல்லாம் மறந்து போச்சடா"

எனக்கு பக்கென்றது. 'அப்ப அவர் என்னிடம் போன மாதம் வாங்கிய ஆயிரம் ரூபா கோவிந்தாவோ? '

(இன்னும் கதைப்பம்)

ஆனையூர்க் கவிராயர்

# பாசத்தின் பலி



## உருவக் கதை

காதிரவனின் ஒளித்திரனின் நடுவே , இருளின் வடிவினை மேனியெங்கும் படரவிட்டது போன்ற கன்னங்கரிய அந்தக் காகம் மௌனத்தை அரவணைத்தபடியே அமர்ந்திருந்தது. அது பற்றிப்பிடித்திருந்த மரக்கிளை காற்றில் இலேசாக சலசலத்த போதிலும், சிலைபோன்ற காகத்தின் இருப்பில் ஒரு சோகமொன்று ஒளிந்திருந்தது. தனது துணைக்காகவும் , இரு இளம் குஞ்சுகளுக்காகவும் வானில் பறந்து, இரைதேடி உணவளித்தும் பாதுகாப்பளித்தும் வந்த அந்த ஆண் காகம் இன்று இருப்பிடத்தை நெருங்கவிடாது தனது உறவுகளினாலேயே விரட்டியடிக்கப்பட்டிருந்தது.

அது கடந்துபோன நாட்களை எண்ணிப்பார்த்தது. தானும் தனது இணையும் அந்தச் சுற்றாடல் எங்கும் பறந்து திரிந்து மரச் சுள்ளிகளையும் மெல்லிய தடிகளையும் அலகிலே சுமந்து வந்து இன்பமயமாகக் கூடு அமைத்து மகிழ்ந்த நாட்கள். தமது வாரிசுகளின் பாதுகாப்புக்காக கூட்டின் நடுப் பகுதியில் பஞ்சணை போன்று இலேசான தும்புகளை அடுக்கி வசதியான தங்கு தளம் அமைத்தமை என இவை எல்லாவற்றையும் ஏன் அந்தப் பெண்துணை மறந்து போனது? வாரிசுகள் இரைதேட ஓரளவு கற்றுக்கொண்டபின் தாயுடன் சேர்ந்து தன்னை வெறுத்து விரட்டியடிக்க நினைப்பது ஏன்....? மனிதர்களிடத்தில் தான் இப்படி பிரிவினை பேதங்கள் என்றால் நமது காக்கை இனத்திலுமா...?

அந்த ஆண் காகத்தினால் இனியொரு தடவை அருகிலுள்ள மரத்தில் இருக்கும் தனது பாச உறவுகளை நாடி போகமுடியாது. போனால் தன்னை எதிரியாக நினைத்து அவை மீண்டும் பெருந் தாக்குதலை நடத்தும். அதற்கு எதிர்த் தாக்குதல் நடத்தி அவற்றை பணியவைக்கும் மனோநிலையும் இல்லை. ஆண் காகம் இன்னும் தனது துணை மற்றும் வாரிசுகள் என்ற பாசப்பிணைப்பில் இருந்து விடுபடவில்லை.

இரண்டொரு நாள்கள் கனத்த மனதோடு இருந்த ஆண் காகத்தால் பசி, தாகம் முதலான உடலியல் தேவைகளைக்கூட பூர்த்திசெய்ய முடியவில்லை. அதனை அடித்து விரட்டுவதிலேயே பெண் காகங்களும், குஞ்சுக்காகங்களும் குறியாக இருந்தன.

காலம் நகர்ந்தது. பெருங்கோடை. எங்கும் உணவில்லை. எல்லாக் காகங்களும் பசியால் வாடின. ஆண்காகத்தின் சிறகுகள் சோர்வடைய ஆரம்பித்தன. கால்கள் தமது பிடிமான பலத்தை மெல்ல மெல்ல இழந்துகொண்டிருந்தன. அதன் இதயம் தனது இறுதித் துடிப்பை எதிர்பார்ப்பதுபோல இயங்கிக் கொண்டிருந்தது. விழிகள் பஞ்சடைந்து பார்வைப் புலத்தில் இருந்து தூர விலகிவிட்டது. மெதுவாக ஓலிமிட்டது ஆண் காகம், ஆனால் அதனை பெண்காகமும், குஞ்சுகளும் கண்டுகொள்ளவில்லை. அவை காலைப் பொழுதை ஆரவாரமாக வரவேற்று ஒலியெழுப்பின.

ஆண் காகத்தின் உடல் உயிரற்று கீழே விழுந்தது. பெண்காகமும், குஞ்சுகளும் தமது அன்றைய விருந்துக்காக ஆண்காகத்தின் உடலைக் கொத்தத் தொடங்கின. ஆண் காகம் இறந்தபின்னும், அதன் தியாகம் குடும்பத்தினரின் பசியை தன் உயிரற்ற உடலால் தீர்த்துக் கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுதந்திரதினமும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விகிதமளவுக்கு கட்டியெழுப்பிக் கொண்டிருந்தது. ஆனால் கடந்த 13 ஆண்டுகளாக தமிழ் மக்கள் மத்தியில் அவ்வாறு தேசநிர்மாணத்துக்குத் தேவையான கட்டமைப்புகள் எவையும் கட்டியெழுப்பப்படவில்லை. பதிலாக அவ்வப்போது காட்டப்படும் சிறிய மற்றும் பெரிய எதிர்ப்புகளூடாக கட்சிகளைத்தான் கட்டியெழுப்பி வருகிறார்கள்.

எனவே தமிழ் மக்கள் போராட்டம் என்பதனை தனியே எதிர்ப்பு அரசியலாக மட்டும் பார்க்காமல் அதைவிட பரந்தகன்ற அர்த்தத்தில் அதை தேச நிர்மாணமாக விளங்கிக் கொள்ள வேண்டும். ஒரு மக்கள் கூட்டத்தை தேசமாகத் திரட்டும் அடிப்படை அம்சங்களைப் பலப்படுத்தும் விதத்தில் உரிய கட்டமைப்புகளை உருவாக்கவேண்டும். அவ்வாறான கட்டமைப்புகளில் ஒன்றாக போராட்டத்திற்கான மக்கள் அமைப்பும் கட்டியெழுப்பப்பட வேண்டும். புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் இருந்துகொண்டு தொலை இயக்கிமூலம் ஒரு மக்கள் போராட்டத்தை ஒழுங்கமைப்பதில் அடிப்படையான வரையறைகள் உண்டு.

தமிழ்க்கட்சிகளில் பெரும்பாலானவற்றிடம் மாணவ அமைப்புகள் இல்லை. யாழ். பல்கலைக்கழகத்தில் உள்ள சிங்கள மாணவர்கள் மத்தியில் தென்னிலங்கையில் இயங்கும் ஜே.வி.பி. போன்ற கட்சிகளுக்கு உறுப்பினர்கள் உண்டு. சிறிய அளவில் கட்டமைப்புகளும் உண்டு. ஆனால் போராடும் தமிழ் மக்கள் மத்தியில் அவ்வாறான கட்டமைப்புகள் கிடையாது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் கஜேந்திரன் அவ்வாறு மாணவர் போராட்டத்துக்கூடாக மேலெழுந்த ஒருவர். ஆனால் அந்தக்கட்சியிடமும் பலமான மாணவ அமைப்புக்கள் கிடையாது. அப்படிப்பட்ட கட்டமைப்புகள் இல்லாத ஒரு வெற்றிடத்தில்தான், பல்கலைக்கழக மாணவர்களின் ஊர்வலத்தைப் பலப்படுத்தி பிரமாண்டமானதாகக் கட்டமைக்க வேண்டும் என்ற அக்கறை கட்சிகளிடம் இருக்கவில்லை. மாணவர்களிடமும் இருக்கவில்லை. தமிழகத்தில் உள்ள கட்சிகள் எல்லாவற்றுக்கும் மாணவ அமைப்புகள், மகளிர் அமைப்புகள் என்று வெவ்வேறு வயது மட்டங்களுக்கு ஏற்ப கட்டமைப்புகள் உண்டு. குறிப்பாக கேரளா, மேற்கு வங்கம் போன்ற மாநிலங்களில் கொமியூனிஸ்ற் கட்சிக்கு இளையோர் மத்தியில் மூன்றுக்கும் குறையாத கட்டமைப்புகள் உண்டு. பள்ளி மாணவருக்கு ஒரு கட்டமைப்பு, பல்கலைக்கழக மாணவருக்கு ஒரு கட்டமைப்பு, மாணவப் பருவத்தைக் கடந்தவர்களுக்கு ஒரு கட்டமைப்பு என்றெல்லாம் கட்டமைப்புகள் உண்டு. ஆனால் தமிழ்க் கட்சிகளுக்கு அப்படியெல்லாம் கட்டமைப்புகள் இல்லை. ஆனால் ரோட்டரிக் கிளப் போன்றவற்றுக்கு அப்படிப்பட்ட கட்டமைப்புகள் உண்டு.

இப்பொழுது உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்கான அறிவிப்புகள் வந்தபின் பெண் வேட்பாளர்களைத் தேடி கட்சிகள் ஓடத்தொடங்கி விட்டன. கிராம மட்ட மகளிர் அமைப்புகள் பலமாக இருந்தால் அதற்குள் இருந்தே உள்ளூர்த் தலைமைத்துவங்கள் மேலெழுந்து வரும். அப்படிப்பட்ட கட்டமைப்புகள் இல்லாத வெற்றிடத்தில்தான் தேர்தல் என்று வந்ததும் வேட்பாளர்களைத் தேடி அலையும் ஒரு நிலை. அதிலும் உள்ளூராட்சித் தேர்தல்களில் 25 விகிதம் பெண் வேட்பாளர்கள் இருக்கவேண்டும் என்று சட்ட ஏற்பாடு உருவாக்கப்பட்ட பின்னர்தான் கட்சிகளுக்கு பெண்களை வேட்பாளர்களாக இணைக்கவேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்பட்டது. மற்றும்படி பால் சமநிலையைப் பேண வேண்டும் என்று எத்தனை கட்சிகள் சிந்திக்கின்றன? எனவே கடந்த 13 ஆண்டுகளாக தமிழ்மக்களை ஒரு தேசமாகத் திரட்ட முடியாத தமிழ்க்கட்சிகள் குறைந்தபட்சம் தமக்குத் தேவையான கட்டமைப்புக்களைக்கூட கட்டியெழுப்பவில்லை. கட்சிகளும் செயற்பாட்டாளர்களும் விட்ட வெற்றிடத்தில்தான், புலம்பெயர்ந்த தமிழர்கள் போராட்டங்களைத் தொலைவிலிருந்து இயக்க முயற்சிக்கிறார்கள். மாணவர்கள் வேறாகவும் கட்சியினர் வேறாகவும் போராடுகிறார்கள். நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனி நபர்களாக ஆர்ப்பாட்டங்களுக்கு வருகிறார்கள். தமிழ் மக்கள் பார்வையாளர்களாக விலகிக் கொண்டேயிருக்கிறார்கள்?

## தமிழ்த் தேசிய...

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

தாயக மண்ணில் நடந்தது அரசியல் விடுதலைப் போராட்டம். அது நாடுகளுக்கிடையிலான போர் அல்ல. ஆனால் அரசற்ற இனமாகவும், ஒரு நாடு போன்றும் செயற்பட்டதாலும் புலிகளை இல்லாமல் ஒழிப்பதற்கு அமெரிக்க, இந்திய, சீன அரசுகள் முரண்பாட்டில் உடன்பாடாக இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்தன மரபுவழிப் போராட்ட முறைமை சர்வதேசத்தில் ஏனைய விடுதலை இயக்கங்களுக்கு முன் உதாரணமாகிவிடக் கூடதென்ற நவீன அரசுகளின் இராணுவத் தந்திரோபாயக் கூட்டிணைவின் மூலமே 2009 இல் போர் இல்லாதொழிக்கப்பட்டது. புவிசார் அரசியல் - பொருளாதார தேவைகள் மற்றும் அமெரிக்க , இந்திய அரசுகள் வழங்கிய உறுதிமொழியை நம்பி, தான் ஏமாற்றப்பட்டமை குறித்துச் சம்பந்தன் 2020 ஜனவரியில் நாடாளுமன்றத்தில் நிகழ்த்திய உரை மற்றும் ஐ.நா.நிபுணர்குழு அறிக்கை சுட்டிக்காட்டியிருந்த ஆதாரங்களுடன் இந்தப் பத்தியில் ஏற்கனவே நான் எழுதியிருக்கின்றேன். சில பத்தி எழுத்தாளர்கள், சர்வதேச ஊடகங்கள், இராஜதந்திரிகள் போன்றோர் 2009 இல் போர் இல்லாதொழிக்கப்பட்டமைக்கான காரண - காரியங்களை வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் கூறிய பல தகவல்களும் இருக்கின்றன. ஆகவே கற்பனைக் கதையான ராமாயணத்தைத் தமக்கேற்றவாறு பொருள் விளக்கம் கொடுக்கும் கம்பன் கழகப் பேச்சாளர்களுக்கு எழுபது வருட அரசியல் போராட்டங்களின் போதும் , முப்பது வருடங்கள் கண்முன்னே நடைபெற்ற ஆயுதப் போராட்டத்தின்போது சிங்கள ஆட்சியாளர்களினால் தமிழ்மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தெரியாதா? போர்க் காலத்தில் வெளியான படைப்புகள் அதன் உணர்வுகள், வலிகள், மற்றும் அவமானங்கள் போன்றவற்றை தமிழ்இலக்கிய நோக்கிலும், தமிழ் விழுமியங்கள், மரபுகள், தமிழ்ப் பண்பாடுகள் சார்ந்தும் பேசத் தயங்குவது ஏன்? ராமனுக்கும் வாலிக்கும் நடந்ததாகக் கூறப்படும் கற்பனைப் போரை மேற்கோள்காட்டி உயிர்த் தியாகங்கள், சொத்து இழப்புகள் என்று பல வலிகளோடு நடந்த விடுதலைப் போராட்டம் ஒன்றைக் ஒப்பிட்டு விமர்சிப்பதில் உள்ள அறம் என்ன?

வள்ளுவர், ஔவையார் பாடல்கள், தொல்காப்பியம், கம்பராமாயணம் ஆகிய பழந்தமிழ் இலக்கியங்களில் நேர்த்தியாகச் சொல்லப்படும் தமிழர் பண்பாட்டுக்குரிய அறம்சார் கருத்துக்கள், அரசியல் நெறிகளைத் தவிர்த்து, முடிந்தவரை தமிழர்களின் அரசியல் விடுதலையையும் அதன் வழி வந்த இலக்கியப் படைப்புகளையும் திட்டமிட்டுக் கொச்சைப்படுத்தும் உத்தி அல்லவா இது? குறளில் படைமாட்சி அதிகாரத்திலுள்ள'சிறுமையும் செல்லாத் துனியும் வறுமையும் இல்லாயின் வெல்லும் படை' என்ற குறளுக்கு பிரசாந்தன் விளக்கம் கொடுத்திருக்கலாமே?

'தன் அளவு சிறிதாகத் தேய்தலும், தலைவனிடம் நீங்காத வெறுப்பும் வறுமையும் இல்லாதிருக்குமானால் அத்தகைய படை வெற்றி பெறும்' என்று மு .வரதராசன் அக் குறளுக்குப் பொருள் விளக்கம் கொடுத்திருக்கின்றார். இந்தப் பண்பு புலிகளிடமும் அதன் தலைமையிடம் இருந்தது. ஆனால் போர் இல்லாதொழிக்கப்பட்டது எந்த வழி முறையில்? பொருட்பாலில் அரசன், அரசாட்சி, பொருளாதாரம், நிர்வாகம், குடிமக்கள் பண்புகள் பற்றி எழுபது அதிகாரங்களில் சொல்லப்பட்டுள்ளன. உள்ள பொருளை மேலும் பெருக்கவும் அதைத் தமக்கும் பிறர்க்கும் பயன்படும் நல்வழிகளில் செலவிடவும், அப்பொருளைப் பிறர் வஞ்சித்துக் கவராமல் காக்கவும் பொறுப்பு வாய்ந்த அரசமைப்பும் அதற்கு அறிவுரை கூறவல்ல அமைச்சரவையும் பிரதானம். இப்படி முறையாக அமைக்கப்பட்ட சமுதாயத்திலிருந்தே பொருள் உண்டாக்க முடியும். இவ்வாறாக அரசியலையும் அது நிலைப்படக் காரணமான குடிமக்களின் நல்வழிப்பட்ட உயர் பண்புகளையும் விளக்குவதுதான் திருக்குறளில் உள்ள பொருட்பாலின் உள்ளீடு. இதனைப் புரிந்துகொள்ள முடியாமலா கம்பன் பெயரில் விவாதம் நடத்துகிறீர்கள்? இந்தப் பொருட்பாலின் உள்ளீட்டுக்கு அமைவாகப் போராட்டம் நடந்தது என்பதை நிறுவ முடியாதா? போராட்ட முறைகள் பற்றி இலக்கு மாறாத, மாற்றுக் கருத்துடைய விமர்சனங்களும், சமூக நீதி பற்றிய பார்வைகளில் சீரான எதிர்வாதங்களும் அவசியமானவை. அதற்கு ஏற்ப பழந்தமிழ் இலக்கியங்களில் பொருள் அர்த்தங்கள் உண்டு. அவற்றையெல்லாம் மேற்கோள் காண்பிக்க முடியாமலா, கற்பனைப் போரியல் கதைகள் மூலம் தமிழ்ச் சமூகத்துக்கு வழிகாட்ட கம்பன் கழகம் முற்படுகிறது.

ஆனையிறவுச் சமர் சயங்கொண்டாரின் கலிங்கத்துப் பரணியை முன் நிறுத்துகின்றது என்பதை பிரசாந்தன் மனம்கொள்ள மறந்தது ஏன்? கொலைகளை நியாயப்படுத்தமுடியாது. ஆனால் ராமாயணத்தில் வரும் சகோதரப் படுகொலைகளைப் பக்குவமாக விவாதித்து [illegible] சமூக அறம் பற்றி எடுத்துரைக்கும் கம்பன் கழகம், தமிழர்களின் முப்பது வருட அரசியல் போராட்டத்தை எந்தக் கண்ணோட்டத்துடன் நோக்குகிறது?

# யாழ்ப்பாண வரலாறு

ந.பரமேஸ்வரன்

1505–1948 வரை

**1912 ஏப்ரல் 13**

சட்டசபை மேலதிக தமிழ்ப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட J.N.திசைவீரசிங்கத்துக்கு கொழும்பு விக்ரோறியா மண்டபத்தில் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது.

**1912 ஏப்ரல் 16**

சேர். முத்துக்குமாரசாமி காலமான பின் அவரது இடத்துக்கு நியமிக்கப்பட்டிருந்த தமிழ்ப் பிரதிநிதி மருத்துவர் றொக்வூட்டை கௌரவிக்கும் வகையில் அவரது நினைவாக 'றொக்வூட் மண்டபம்' பொரளை கின்ஸி வீதியில் அப்போதைய ஆளுநர் ஹென்றி எட்வர்ட் மக்கலத்தினால் திறந்து வைக்கப்பட்டது. தற்போது இந்த மண்டபம் கொழும்பு மருத்துவமனை வளாகத்துக்குள் சென்று விட்டது.

**1912 ஜூன் 20**

அரசாங்க அதிபர் துவைனத்தின் மகள் திருமதி மோர்டிமர் (Mortimer)காலமானார்.

**1912 ஒக்ரோபர் 05**

இந்திய தேசிய காங்கிரசின் திருவாங்கூர் பிரதிநிதி நாயர் ,யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி, சம்பத்தரிசியார் கல்லூரி என்பவற்றில் எமது பொருளாதாரப்பிரச்சினை என்ற தலைப்பில் உரையாற்றினார்.

**1916 ஏப்ரல்**

மருத்துவர் நல்லையா , மேற்கு லண்டன் மருத்துவமனையில் சத்திரசிகிச்சை நிபுணராக நியமிக்கப்பட்டார்.

சட்டத்தரணி கதிரவேலுவின் மகன் சிற்றம்பலம் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக பரீட்சையில் கணிதத்துறையில் குடியேற்ற நாடுகளில் முதன்மை மர்ணவராகப் பட்டம் பெற்றார். இதில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால் இறுதிப்பரீட்சைக்குத் தோற்றாமலே இவருக்கு இந்தப்பட்டம் வழங்கப்பட்டது. இறுதிப்பரீட்சை நடைபெற்றசமயம் இவர் விபத்தில் சிக்கி , சிகிச்சை பெற்று வந்தபடியால் பரீட்சைக்குத் தோற்றவில்லை. பொதுவாக கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக மரபின் படி பரீட்சைக்குத் தோற்றாவிட்டால் சம்பந்தப்பட்ட மாணவருக்குப் பட்டம் வழங்கப்படமாட்டாது. சிற்றம்பலம் முன்பு நடைபெற்ற பரீட்சைகளில் சிறப்பான பெறுபேறுகளைப்பெற்றிருந்த படியால் அந்தப் பெறுபேறுகளின் அடிப்படையில் சிற்றம்பலத்துக்குப் பட்டம் வழங்கப்பட்டது. இவர் பின்னாளில் நாடாளுமன்ற உறுப்பினராகவும் பதவி வகித்துள்ளார்.

*கத்தோலிக்க பாதுகாவலன் பத்திரிகை அச்சிடுவதற்கென பிரெஞ்சு அரசாங்கம் அனுப்பிய ஐந்து தொன் அச்சுத்தாள் கடலில் மூழ்கியது.

**1916 மே**

*பருத்தித்துறை வெளிச்ச வீடு பூர்த்தியாக்கப்பட்டது; இது யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள வெளிச்ச வீடுகளிலேயே உயரமான வெளிச்ச வீடு (115 அடி).

**1916 மே 16**

யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக வெசாக் கொண்டாடப்பட்டது. யாழ்ப்பாணத்தில் வசித்த சிங்களவர்கள் பெற்றோமக்ஸ் விளக்கு மற்றும் வாத்திய இசைகளுடன் வெசாக்கை சிறப்பாகக் கொண்டாடினர். கொட்டடி மாரியம்மன் கோயிலில் இருபது வயது இளைஞர் ஒருவர் போதை ஏற்றிய பின்னர் நரபலி கொடுக்கப்பட்டார். இந்தச் சம்பவத்தில் ஆலயக் குருக்கள் உட்பட ஒன்பது பேர் சம்பந்தப்பட்டிருந்தனர்.

**1916 ஜூன் 02**

ஆளுநர் ஜோன் அண்டர்சன் குடும்பசகிதம் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து அரச அலுவலகங்களையும், பின்னர் புகையிலைத்தோட்டங்களையும் பார்வையிட்டார்.

**1916 ஜூன்**

கோப்பாய் சரஸ்வதி வித்தியாசாலை ஆரம்பம்.

**1916 ஜூன் 18**

கடும் புயல் காரணமாக கூரைகள் தூக்கி வீசப்பட்டன. அத்துடன் தந்திக்கம்பங்கள் சரிந்து வீழ்ந்தன. பெரும் பயிரழிவும், உயிர்ச்சேதங்களும் ஏற்பட்டன.

**1916 செப்ரெம்பர்**

காலி றிச்மண்ட் கல்லூரி சாரணிய ஆசிரியர் வின்சென்ற் மெண்டிஸ், நான்கு சாரணர்களுடன் யாழ்ப்பாணம் வந்து யாழ்ப்பாணப் பாடசாலைகளில் சாரணியத்தை ஆரம்பித்தார்.

**1916 ஒக்ரோபர் 16**

பொலிகண்டியில் உற்பத்தி செய்யப்பட1510 மூடை சீனி ஒரு மூடை 18.00 வீதம் கொழும்பில் விற்பனை செய்யப்பட்டது.

**1917 ஜனவரி 09**

இந்துசாதனம் பத்திரிகை ஆசிரியர் அருணாசலம் சபாபதி , சட்டசபையில் தமிழ் உறுப்பினராக நியமிக்கப்பட்டார்.

**1917 ஜனவரி**

யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி போல் பீரிஸ் (Paul Pieris) அகழ்வாராய்ச்சி மூலம் கந்தரோடையில் பௌத்த விகாரைகளையும் புத்தர் சிலைகளையும் கண்டெடுத்தார். யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி போல் பீரிஸ்(Paul Pieris) கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப்பட்டம் பெற்றவர். கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கலாநிதிப்பட்டம் பெற்ற முதலாவது இலங்கையர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. 'The Kingdom of Jaffnapatam"என்ற தலைப்பில் யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கீசர் ஆட்சி பற்றியே இவர் கலாநிதிப்பட்ட ஆய்வினை மேற்கொண்டிருந்தார்.

**1917 ஜூலை 06**

அம்பலவாணர் கனகசபை 'சேர்' பட்டம் பெற்றார். பன்னாலையைச் சேர்ந்த சட்டத்தரணியான இவர் யாழ்ப்பாண சட்டத்தரணிகள் சங்கத்தலைவராகவும் இருந்துள்ளார். யாழ்ப்பாணத்துக்கு புகையிரத சேவை ஆரம்பிக்கவேண்டியதன் அவசியத்தை 1897 ஆம் ஆண்டு அப்போதைய ஆளுநர் கலந்து கொண்ட கூட்டத்தில் வலியுறுத்தியிருந்தார்.

1907 ஆம் ஆண்டு முதல் சட்டசபை உறுப்பினராகவும் பதவி வகித்த இவர் Royal Asiatic Society யிலும் அங்கத்தவராக இருந்துள்ளார். இவருக்கு பிரித்தானிய அரசு 'சேர்' பட்டம் வழங்கிய கடிதத்தை அப்போதைய ஆளுநர் பெஞ்சமின் ஹோர்ஸ்பேர்க் , கனகசபையிடம் நேரில் கையளித்தார். சேர்.பொன்.இராமநாதன், அருணாசலம் ஆகியோருக்கு அடுத்ததாக' சேர் 'பட்டம் பெற்றவர் கனகசபையே. சிறந்த சமூகசேவகரான இவர் பன்னாலையில் பாடசாலை ஒன்றையும் ஆரம்பித்துள்ளார். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு அருகில் இவர் வாழ்ந்த இடத்துக்கு 'கனகசபை அவெனியூ' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

(வரலாறு நீளும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org